Registered as a News Paper in Sri Lanka   பக்கங்கள்: 12   விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • வெள்ளி மஞ்சரி •

நாதம் 01   பிரமோதூத ஸூ ஆனி மீ 1 ஆம் உ   வெள்ளிக்கிழமை   (15 - 06 - 1990)   ஹிஜ்ரி 1410   ஜுல்ஹஜ் 21   ஓசை 117

## தூக்கணாங்குருவிக்கு ஊர்க்குருவி செவிலித்தாய்

யப்பானில் நான்கு குஞ்சுகளுக்குத் தாயான தூக்கணாங் குருவி ஒன்று அரவம் தீண்டி இறந்துள்ளது. இச் சம்பவத்தை நேரில் கவனித்த ஊர்க் குருவி ஒன்று அனாதரவாய் விடப்பட்ட தூக்கணாங் குருவிக் குஞ்சுகள் பசியால் வாடாமல், நான்கு குஞ்சுகளுக்கும் உடன் உணவு சேகரித்துக் கொடுத்துள்ளது பின்பு இதைப் பழக்கமாக்கியும் கொண்டது. தத்தெடுப்பது என்பது மனிதனின் வழக்கம். இன்று நான்கு தூக்கணாங் குருவிகளையும் ஊர்க்குருவி தத்தெடுத்து வளர்த்து, குருவிக் குஞ்சுகளின் செவிலித் தாயாய் விளங்குகிறது.

# அரசு சொல்வது ஒன்று செய்வது வேறு

# நாம் தொடர்ந்து போராடுவோம்

### இராணுவம் பற்றி கேளாதீர்!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண நிலைமையில் இராணுவத் தலையீடு பற்றித் தாம் எதுவும் கூறத் தயாராக இல்லையென்றும் அது பற்றித் தம்மிடம் எதுவும் கேட்க வேண்டாமென்றும் பாதுகாப்பு ராஜங்க அமைச்சர் ரஞ்சனவிஜேரட்னா நேற்றுக் காலை பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

### இராணுவம் மீது தாக்குதல்

(மூதூர்)

மூதூரில் ஸ்ரீலங்கா இராணுவ பொலிஸ்நிலையங்கள் மீது நேற்று விடுதலைப் புலிகளினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## விடுதலைப் புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"இந்தியப்படைகளை இங்கிருந்து வெளியேற்றுவதற்காக எமது கோரிக்கைகளை நிறைவேற்றிய ஸ்ரீலங்கா சிங்கள அரசு இன்று ஒருபுறம் எம்முடன் பேச்சு நடாத்திக் கொண்டு அதேசமயம் மறுபுறம் முப்படைகளைக்கொண்டு எம்மக்கள் மீது தாக்குதல் நடாத்துகிறது. இந்நிலையில் நாம் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறுவழியில்லை. இதில் பார்வையாளர்களாக நின்று எம்மைப்பாராட்டுவதையோ விமர்சிப்பதையோ விட்டுப் பங்காளர்களாக மக்கள் எம்முடன் சேரவேண்டும்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று தமிழ்பேசும் மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கேட்டுள்ளது.

தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை முழுவதும் வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவுமே அன்றி வேறல்ல.

தமிழீழ விடுதலைக்காகவும் சிங்கள, இந்திய ஆயுதப் படைகளின் தாக்குதல்களிலிருந்தும் சமூக விரோத இனத் துரோகக் கும்பல்களின் துன்புறுத்தல்களிலிருந்தும் தமிழ் பேசும் மக்களைக் காப்பதற்காக இதுவரை 1500 க்கும் மேற்பட்ட எமது இயக்க வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்துள்ளார்கள் என்பதும், ஏராளமான இயக்க வீரர்கள் களத்தில் கை கால்களை இழந்து இயங்க முடியாத நிலைக்குள்ளாகி இருக்கின்றனர் என்பதும் அனைவரும் அறிந்ததாகும்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல்லொணா கொடுமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஹமீத் இன்று யாழ் வருவார்

(கொழும்பு)

நீதி அமைச்சரும் வடக்குக் கிழக்கு சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இன்று வள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர்களைச் சந்தித்துப் பேசக் கூடுமென்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சா

(12 ஆம் பக்கம் பார்க்க)

### லொறி மோதி மாணவி மரணம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை டச்சுவீதியில் நேற்றுஇடம்பெற்ற விபத்து ஒன்றில் வசந்தா கெங்காரட்ணம் (19வயது) என்றமாணவி ஸ்தலத்திலேயே பலியானார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் பல பகுதிகளிலும் தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழர் செறிவாக வாழும் பகுதிகளான பம்பலப்பிட்டியா- வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் பல இளைஞர்களைப் பொலிஸார் சுற்றிவளைத்து பிடித்துள்ளார்கள்

இதேவேளை புறக்கோட்டை, செக்கட்டித்தெரு லாட்ஜ்களிலும், விடுதிகளிலும் தங்கியுள்ள தமிழ் இளைஞர் பலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

### கிண்ணியா

## இராணுவ முகாம் மீது தாக்குதல்: 10 இராணுவம் பலி

(திருக்கோணமலை)

கிண்ணியா இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் 10 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவிலிருந்து 4 00 மணிவரைக்கும் இத் தாக்குதல் இடம் பெற்றது இத் தாக்குதலில் இரண்டு விடுதலைப் புலிகள் மரணமடைந்தனர்.

அதே வேளை சிறிலங்காக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் கிண்ணியா பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் ஏராளமான முஸ்லிம் மக்களின் வீடுகள் பலத்த சேதங்களுக்குள்ளா

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அம்பாறை

## சிறிலங்கா இராணுவம் தடுத்து நிறுத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

நேற்று அம்பாறை மட்டக்களப்பு பிரதான வீதியூடாக அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி முன்னேற முயன்ற இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பல

வத்தினர் இழப்புக்களுடன் திரும்பிச் சென்றனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி மரணமடைந்தார்,

அதேவேளை மட்டக்களப்பு கடல் பகுதிகளில் இருந்து இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான எட்டு பீரங்கிப்

## ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல்தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(ஆனையிறவு)

நேற்றுக்காலை ஆனையிறவு முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுத

இந்தப் பதட்டத்தை தொடர்ந்து அப்பகுதியால் எந்த வாகனங்களும் தமது பயணத்தை தொடராது பூநகரி

குடாநாட்டை வந்தடைந்தன மேலும் கிளிநொச்சி பகுதியிலும் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாக

### அம்பாறை மாவட்டம்

## மாதிரிக் கிராமம் மீது இராணுவம் தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பில் தமிழர் செறிவாக வாழும் பகுதிகளான பம்பலப்பிட்டியா- வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் பல இளைஞர்களைப் பொலிஸார் சுற்றி வளைத்து பிடித்துள்ளார்கள்

இதேவேளை புறக்கோட்டை, செக்கட்டித்தெரு லாட்ஜ்களிலும், விடுதிகளிலும் தங்கியுள்ள தமிழ் இளைஞர் பலரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## அம்பாறை

## சிறிலங்கா இராணுவம் தடுத்து நிறுத்தப்பட்டது

(மட்டக்களப்பு)

நேற்று அம்பாறை மட்டக்களப்பு பிரதான வீதியூடாக அம்பாறையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி முன்னேற முயன்ற இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலமான சண்டை ஏற்பட்டது.

பல மணி நேரச் சண்டையின் பின் இலங்கை இராணுவத்தினர் இழப்புக்களுடன் திரும்பிச் சென்றனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி மரணடைந்தார்,

அதேவேளை மட்டக்களப்பு கடல் பகுதிகளில் இருந்து இலங்கைக் கடற்படைக்குச் சொந்தமான எட்டு பீரங்கிப் படகுகள் மட்டக்களப்பு மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

## யாழ் நகரில் வியாபாரிகள் கொள்ளை லாபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில், குறிப்பாக யாழ். நகரில் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலை நேற்று முதல் திடீரென அதிகரித்துள்ளது. சில உணவுப் பண்டங்களின் விலை சராசரி ரூபா 3.00 ஆக அதிகரித்து உள்ளது. மண்ணெண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளது.

இவ்விலையேற்றம் கடை வியாபாரிகளின் ஒரு தன்னிச்சையான நடவடிக்கையாகும். இன்னும் பல வியாபாரிகள் பண்டங்களைவேண்டுமென்றே பதுக்கி வைத்து, செயற்கையான ஒரு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, முற்றிலும் கொள்ளை லாபமடிக்கும் நோக்கத்தோடு விலைவாசிகளை அதிகரித்துள்ளார்கள்.

## பழுதடைந்த கூட்டுக் குளிகை விற்பனைக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனத்தால் யாழ். மாவட்டத்துக்கென விநியோகிக்கப்பட்ட கூட்டுக் குளிகைகள் நாளாகிப் பழுதடைந்தவை என்றும், அத்துடன் அவற்றின் நிறம் மாறியுள்ளதென யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கச் செயலாளர் சிவஞானம் ஸ்ரீகணேசன் ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

இதே வேளை உணவு, மருந்து அதிகாரி இக் கூட்டுக் குளிகைகளை விற்கக் கூடாதெனத் தடை விதித்துள்ளார்.

## பண்டத்தரிப்புக் கோட்ட செய்திட்ட செயற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அபிவிருத்தி ஆலோசனைச்சபை அங்குரார்ப்பண வைபவத்தில் பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தன் ஆற்றிய தலைமைப் பொழிப்புரையிலிருந்து பிரித்தெடுத்த சில பகுதிகள் ''பண்டத்தரிப்புக் கோட்டக் கொத்தணி மட்டச் செய்திட்டச் செயற்பாடுகள்'' என்ற தலைப்பில் வெளிவந்

(12ஆம் பக்கம் பார்க்க)

...அறிக்கையில் கேட்டுள்ளது.

தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கை முழுவதும் வருமாறு:

தமிழீழ விடுதலைப் புலிகளாகிய எமது ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ் பேசும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், தமிழீழ விடுதலைக்காகவுமே அன்றி வேறல்ல.

தமிழீழ விடுதலைக்காகவும் சிங்கள, இந்திய ஆயுதப் படைகளின் தாக்குதல்களிலிருந்தும் சமூக விரோத இனத்துரோகக் கும்பல்களின் துன்புறுத்தல்களிலிருந்தும் தமிழ் பேசும் மக்களைக் காப்பதற்காக இதுவரை 1500 க்கும் மேற்பட்ட எமது இயக்க வீரர்கள் தமது இன்னுயிரை ஈந்துள்ளார்கள் என்பதும், ஏராளமான இயக்க வீரர்கள் களத்தில் கை கால்களை இழந்து இயங்க முடியாத நிலைக்குள்ளாகி இருக்கின்றனர் என்பதும் அனைவரும் அறிந்ததாகும்.

இரண்டரை ஆண்டு காலமாக தமிழீழ மக்களுக்கு சொல்லொணா கொடுமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு முகாமில் இருந்து ஷெல்தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(ஆனையிறவு)

நேற்றுக்காலை ஆனையிறவு முகாமில் இருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை மூண்டது. இச்சண்டையில் இழப்புக்கள் ஏற்பட முகாமிற்குப் பின் வாங்கிய இராணுவத்தினர் அங்கிருந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதல் நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் குரை மரணமடைந்தார்.

இச் ஷெல் தாக்குதலால் அப்பகுதியில் வாழ்ந்த பொது மக்கள் தமது வீடுவாசல்களை விட்டு பூநகரி பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்தப் பதட்டத்தை தொடர்ந்து அப்பகுதியால் எந்த வாகனங்களும் தமது பயணத்தை தொடராது பூநகரி வழியாக, கேரதீவு வழியாக குடாநாட்டை வந்தடைந்தன மேலும் கிளிநொச்சி பகுதியிலும் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இராணுவம் மோதல் இரு போராளிகள் பலி

(மூதூர்)

விடுதலைப் புலிகள் சென்று கொண்டிருந்த வாகனத்தின் பின்னால் திடீரென வந்த இலங்கை இராணுவப்படை தாக்கியதில் திருக்கோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் காயமடைந்துள்ளதுடன் இரு போராளிகள் மரணமடைந்துள்ளனர்.

மூதூரிலிருந்து தம்பலகாமம் நோக்கி சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வாகனத்தை பின்னால் வந்து கொண்டிருந்த இலங்கை இராணுவ வாகனத்திலிருந்த இராணுவத்தினர் திடீரென தாக்கியதில் ரூபன் காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து வானிலிருந்து குதித்த இரண்டு போராளிகள் இராணுவ வாகனத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி

# ராணுவ முகாம் மீது தாக்குதல் ராணுவம் புலிகள், மக்கள், பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இலங்கை இராணுவ முகாம் நேற்று அதிகாலை மூன்று முப்பது மணியளவில் விடுதலைப்புலிகளால் முற்றுகையிடப்பட்டு தாக்குதலுக்குள்ளானது இத்தாக்குதலில் பெருந்தொகையான இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகள் வசமாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தின் முன்பிருந்த இந்த முகாம் தாக்குதலில் விடுதலைப் புலிகள் ஐவர் மரணமடைந்துள்ளனர். பொலிஸ் நிலையத்திலிருந்த பொலிசார் ஏற்கனவே விடுதலைப் புலிகளிடம் சாணடைந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

காலையில் கிளிநொச்சி குடிகள் வாழும் இடங்களில் இலங்கை விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் கோரமான தாக்குதல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்லுண்டாயில் தஸ்தாவேஜுக்கள்

(யாழ்ப்பாணம்)

கல்லுண்டாய் பகுதியில் இருந்து முக்கிய தஸ்தாவேஜுக்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் ஆட்பதிவுதிணைக்களபத்திரங்கள் அடையாள அட்டை ஒன்று கலியாண சாட்சிப் பத்திரம் ஒன்று ஆகியன அடங்கும்.

உரியவர் உடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மானிப்பாய் காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும்.

## அனுராதபுரம் வரையாழ்தேவி

(வவுனியா)

காங்கேசன்துறை வரை இடம் பெற்றுவந்த யாழ்தேவி ரயில் சேவையும் மற்றும் சேவைகளும் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

தற்போது அனுரதபுரம் வரையுமே இச்சேவைகள்மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

கடந்த செவ்வாய்க் கிழமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ முகாம் மீது தாக்குதல்: 10 இராணுவம் பலி

(திருக்கோணமலை)

கிண்ணியா இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் 10 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப் பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவிலிருந்து 4 00 மணிவரைக்கும் இத் தாக்குதல் இடம் பெற்றது இத் தாக்குதலில் இரண்டு விடுதலைப் புலிகள் மரணமடைந்தனர்.

அதே வேளை சிறிலங்காக் கடற்படைப் பீரங்கிப் படகுகள் கிண்ணியா பொது மக்கள் வாழும் பிரதேசங்களில் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் ஏராளமான முஸ்லிம் மக்களின் வீடுகள் பலத்த சேதங்களுக்குள்ளா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டம்

## மாதிரிக் கிராமம் மீது இராணுவம் தாக்குதல்

(அம்பாறை)

சுமார் நூற்றி எழுபத்தைந்து குடும்பங்களைக் கொண்ட மாதிரிக்கிராமம் (டீ. சீ. சீ) ஒன்று அம்பாறை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தினாலும், சிங்கள காடையர்களினாலும் பெரும் தாக்குதல்களுக்குள்ளாகி உள்ளது.

இத்தாக்குதல்களில் பெருந்தொகையான பொது மக்கள் இறந்துள்ளனர். இவர்களில் அனேகமானோர் பெண்களும் குழந்தைகளும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்கிராமத்தில் இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் எதுவும் இன்னும் தெரியவரவில்லை (அ)

## மன்னார் பொலிஸார் புலிகளிடம்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் நிலையம் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. அவ் நிலையத்தில் இருந்த பொலி

(12ஆம் பக்கம் பார்க்க)

## "பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவே பிரேமா ஆர்வம்" - ரஞ்சன்

(கொழும்பு)

நாட்டின் நலனைக் கருதி எந்தவொரு பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி பிரேமதாசா தயாராக இருக்கிறாரென்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று தெரிவித்தார்.

சமாதானத்துடன் பேச்சு நடத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி முயற்சி செய்துவருகிறாரென்றும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார்.

பாதுகாப்புக்கருதி நாட்டின் சிலபகுதிகளில் பொலிஸ் நிலைகளையும் இராணுவ நிலைகளையும் வைக்கவேண்டியுள்ளதென்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தின்பின் நடைபெறும் வாராந்திரப் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக்

(12ஆம் பக்கம் பார்க்க)




## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி நூற்றாண்டு 1890 - 1990

## விற்பனைக்கு

### விற்பனைக்கு

சகல விதமான பழையபுத்தகங்களும் வாங்கப்படும் விற்கப்படும். O/L வகுப்புக்குரிய விஞ்ஞானகணிதபுத்தகங்கள், பயிற்சிப்புத்தகங்கள் கடந்த கால வினாத்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள் உண்டு. SECOND HAND BOOK HOUSE 13/6 ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கிக்கு முன்லேன்) யாழ்ப்பாணம். (R.357)

### கிடைத்து விட்டது

எனது 1 1/2 பவுண் பெறுமதியான றச்சா பந்தனம் (கைச்சங்கிலி) ஓர் சமூகத் தொண்டரால் கண்டு எடுக்கப்பட்டு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நன்றி. பா. விக்னேஸ்வரக் குருக்கள் நாயன்மார்கட்டு. (R-39)

"சிறு வயதில் சேமிப்புப் பழக்கம் ஏற்றமானதோர் எதிர்காலத்திற்கு ஏறுபடி"




சேமிப்பை உடனே ஆரம்பிக்க ஓர் உண்டியலைத் தருகிறோம்.

100 மில்க்வைற் மேலுறைகளை எம்மிடம் நேரில் சேர்த்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளவும்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

(B/1020)


## அம்பாறையில் தமிழ் மொழி மூலம் தொழிற் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்மொழி மூலம் இயங்கக் கூடிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று அம்பாறை மாவட்டத்தில் விரைவில் நிறுவப்படும். அத்துடன் வடக்கு கிழக்கு மலையகப் பிரதேசங்களில் இருந்து 90 இளைஞர் சேவை ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்கள்.

இவ்வாறு தேசிய இளைஞர் கழகங்களின் அழைப்பின்பேரில் அம்பாறை மாவட்டத்திற்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர்நாயகம் திரு. பெனடிக் குமாரசே தெரிவித்தார்.

இவ் விஜயத்தின் போது அவர் அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் சிலமணி நேரம் உரையாடினார். அப்போது பயிற்சி நிலையத்தினை அமைப்பதற்கான காணி, கட்டடம் பெறுவது சம்பந்தமாகவும் ஆலோசிக்கப்பட்டது. தமிழ் முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் நன்மைகருதி 24 மணித்தியாலத்துக்குள் பயிற்சி நிலையத்துக்கான காணியும், கட்டடமும் பெற்றுத்தருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியளித்தனர்.

எனினும் 24 மணித்தியாலத்திற்கு முன்பே பயிற்சி நிலையத்திற்கு வேண்டிய காணியும், கட்டடமும் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரியிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தல புராண அரங்கேற்ற விழா

(கிளிநொச்சி)

பொறிக்கடவை கண்ணகை அம்பாள் தலபுராண அரங்கேற்ற விழா எதிர்வரும் ஜூலை பத்தாம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் தலைமையில் அரசகொலுவையொக்கும் பேரறிஞர் சபை முன் பல கவிஞர்கள் பாடிய தலபுராணம் அரங்கேற்றப்படும்.

முதல் நாளன்று பரந்தன் சந்தியிலிருந்து ஊர்திகளில் கவிஞர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவர். அம்பாள் சந்நிதானத்தில் ஏற்கப்படும் பாடல்களைப்பாடும் கவிஞர்களுக்கு பொற்கிழியும் வழங்கப்படும்.


கிளிநொச்சி - கச்சேரி

## கேள்வி கோரும் அறிவித்தல்

கிளிநொச்சிக் கச்சேரி திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க்காட்டப்படும் கட்டிடங்களைத் திருத்துவதற்கும், புனரமைப்பதற்குமான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1990ஆம் ஆண்டு யூலை மாதம் 6ஆம் திகதி நண்பகல் 12·00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அதே தினத்தில் பி.பகல் 2·00 மணிக்கு கேள்விகள் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து தேவைப்படும் பதிவுத் தொகை மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம், மீளப்பெறமுடியாத கொடுப்பனவு ஆகியன கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல. | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை | மீளப்பெறக்கூடிய வைப்புப்பணம் | மீளப்பெறமுடியாத கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| 1. | மரம் அரியும் சாலையிலுள்ள கட்டிடம் | 200,000·00 | 500·00 | 250·00 |
| 2. | மரம் அரியும் சாலையிலுள்ள கட்டிடம் | 200,000·00 | 500·00 | 250·00 |
| 3. | மரம் அரியும் சாலையிலுள்ள கட்டிடம் | 100,000·00 | 500·00 | 250·00 |
| 4. | மரம் அரியும் சாலையிலுள்ள கட்டிடம் | 100,000·00 | 500·00 | 250·00 |
| 5. | மரம் அரியும் சாலையிலுள்ள கட்டிடம் | 200,000·00 | 500·00 | 250·00 |

இவ் வேலைக்குரிய கேள்விப்பத்திரப் படிவங்களை மீளப் பெறக்கூடியதும், மீளப் பெறமுடியாததுமான தொகையைச் செலுத்தி 1990·06·29 ஆம் திகதி நண்பகல் 12·00 மணிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்
திணைக்கள கேள்விச்சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும்,
அரசாங்க அதிபரும்.

கச்சேரி,
கிளிநொச்சி.
B / 1158


## பயிலுநர் ஆசிரியர் நியமனம் பற்றாக்குறையைத் தீர்த்தது

(முல்லைத்தீவு)

பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் கல்வித் துறையில் இருந்து வந்த பற்றாக்குறையைத் தீர்த்து வைத்துள்ளது. இதன் முழுமையான வெற்று பயிலுநர்கள் பெறும் பயிற்சியிலேயே தங்கி இருப்பதாக ஒட்டிசுட்டான் உதவி ஆணையாளர் எஸ். கனகசபாபதி குறிப்பிட்டார்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்த வைபவத்தில் மேற்படி அவர் குறிப்பிட்டார்.

முல்லை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் என். மனோகரன் பேசுகையில் பயிலுநர் ஆசிரியர்களைப் பற்றி பல விமர்சனங்கள் நடைபெறுகின்றன. அவற்றைத் தோற்கடிப்பதற்கு நல்லாசிரியர்களாக நீங்கள் மாறவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

பயிற்சி வகுப்பு விரிவுரையாளர்களாக முல்லைமணி வே, சுப்பிரமணியம், பாண்டியன் குளம் சு. திருஞானம், யோகபுரம் செ.சிவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (58)


## யாழ் திரையரங்கில்

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**13.06.90 முதல்**
**நியூ சாந்தி (யாழ்.)**
தினசரி 4.45, 7.00, 9.30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 4.45 7.00, 9.30
**THE GREAT ESCAPE**
(War Film, Coluor)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-45, 9-45
ரஜனி, அம்பிகா, ஜெயசங்கர் சுஜாதா, நாகேஸ் நடித்த
**மாவீரன்**
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற விசு, லக்ஷ்மி, ரகுவரன், இளவரசி நடித்த A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2-30. 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது

06. 06. 90
**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 6.30, 9.30
சனி, ஞாயிறு நாட்களில் 10.30, 2.30, 6.30, 9.30
M.G.R, ஜெயலலிதா, அசோகன், சுந்தரராஜன், பண்டரிபாய், சோ நடித்த
**தேடிவந்த மாப்பிள்ளை**
(புதிய பிரதி)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·00, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு கமல், கௌதமி நடித்த **அபூர்வ சகோதரர்கள்**





DESIGNERS

திட்டமிடலாளர்

மணிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கே. மாணிக்கவாசகர்
திணைக்கள கேள்விச்சபைத் தலைவரும்,
மாவட்ட ஆணையாளரும்,
அரசாங்க அதிபரும்.

கச்சேரி,
கிளிநொச்சி.
B / 1158

யாளர் எஸ். கனகசபாபதி குறிப்பிட்டார்.

மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைத்த வைபவத்தில் மேற்

எனவும் கேட்டுக்கொண்டார்.

பயிற்சி வகுப்பு விரிவுரையாளர்களாக முல்லைமணி வே, சுப்பிரமணியம், பாண்டியன் குளம் சு. திருஞானம், யோகபுரம் செ.சிவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (58)


ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசு, லக்ஷ்மி, ரகுவரன்,
இளவரசி நடித்த
A.V.M. இன்
**சம்சாரம் அது மின்சாரம்**
(கலர்)

**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
**அபூர்வ சகோதரர்கள்**




**DESIGNERS** திட்டமிடலாளர்

**ESTIMATOR** மதிப்பிடலாளர்

**INTERNAL DECORATOR** அக அமைப்பாளர்

**FLOOR DECORATOR** தள அலங்கரிப்பாளர்

**CONTRACTOR** ஒப்பந்தக்காரர்

# விஷா டிசைன் குறூப்

**251/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

B 984

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

15 - 06 - 1990


□ ஒரே சுடுபொறி, எவர்கையில் இருந்தாலென்ன? ஒரேதன்மையாகவே சுடும், ஒரு நேரத்தில் ஒரு குண்டையே விடும். சுடுபொறியன்று, வீரமே வெல்வது'

''நாங்கள் நெருப்பாற்றைக் கடக்கிறோம்; மக்களின் ஆதரவு, எங்களுக்குக் கவசமாக உதவும்'

**வே. பிரபாகரன்**



## இன்னும் விடுவதோ?

*கல்வி தான் இவர்கள் கொண்ட*
*சுதந்திர வேட்கைக்குக் கால்*
*வெல்ல ஓர் வழி இவ்வூற்றை*
*வேரொடும் சாய்த்து விட்டால்*
*நல்லியல் பழியும் என்றோ*
*நமது நூல் நிலையம் யாவும்*
*புல்லரால் சாம்பல் ஆக்கப்*
*பட்டன பொறுப்பதோ நாம்*
*கல்லையும் உருக்க வல்லோம்*
*கண்ணெனும் இவற்றைக் காப்போம்*

*தீயிடத் தீயிடக் கல்வி எங்களின்*
*தீட்டகற்றிடும் திண்ணிய*
*-ராக்கிடும்*
*தூயராக்கிடும், துட்டர்கள் நம்மவர்*
*தொன்மை மிக்க அறிவுத்*
*-தளமெனும்*
*தாயினை நிகர் நூல்நிலையங்களை*
*தகர்த்திடும் செயல் தாங்கிடக்*
*-கூடுமோ?*
*கோயிலாய இவற்றிலே கொள்ளிகள்*
*கொடியர் சேர்த்திட இன்னும்*
*-விடுவதோ?*

*-பாலகுமாரன்*



இராணுவ அட்டுழியங்களால் தீயிட்டு
கொளுத்தப்பட்ட பன்குளம் பொது நூலகம்

**1974** ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் திகதி யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வைத்து தமிழர்கள் கொல்லப்பட்டதும்-

1974-ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி தியாகி சிவகுமாரன் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக சயனைட் அருந்தி வீரமரணமடைந்ததும்-

1975 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி சிவகுமாரனால் பல தடவைகள் கொலை செய்ய முயற்சிக்கப்பட்ட இனத்துரோகி துரையப்பா விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதும்-

ஆனால் இவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

எனவே தனியொரு குழுவை அமைத்துப் போராட பரமதேவா முடிவு செய்தான்.

தன்னைப்போல் தீவிரமாகச் சிந்தித்த இரு இளைஞர்களை அவன் தன்னுடன் சேர்த்துக் கொண்டான. ஒருவன் ரஞ்சன், முன்னாள் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர், க. கனகரத்தினத்தின் மகன், தமிழீழத்துக்காக தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப்பெற்றுபாராளுமன்றம் சென்ற பின் தமிழ் பேசும் மக்களின் துரோகியாக மாறியவன் கனகரத்தினம்.

மாறி கொடுஞ்சிறைகளில் அடைக்கப் பட்டனர். விடுதலை உணர்வு என்னும் கத்தியைத் தீட்டும் சாணைக்கல்லாக சிறைச்சாலையின் கொடுமைகள் நிறைந்த சுவர்களை பரமதேவா மாற்றிக் கொண்டான்.

பரமதேவாவையும், அவனது தோழர்களையும் மக்களிட மிருந்து பிரிக்க முடிந்த சிறைச் சுவர்களினால் ''தமிழீழ மக்களின் விடுதலை'' என்ற உறுதியான எண்ணத்தை அவர்களின் மனங்களிலிருந்து பிரிக்க முடியவில்லை.

இவனை மேலும் தீவிர போராளியாக மாற்றியது.

போராட்டக் களத்திலிருந்து ஐந்து வருடமாக நேரடியாகப் பெற்ற அனுபவம் எப்படி ஒரு போராளியின் உறுதியை, இலட்சியப்பற்றை அர்ப்பண உணர்வை மேலும் வளர்த்துச் செல்லுமோ அதே போல அத்தனையும் ஐந்து வருட சிறை வாழ்க்கையிலிருந்தும் பரமதேவா பெற்றுக் கொண்டான்.

1983 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சிங்களக்கடற்படையின் கட்டுக்காவலையும் மீறி பரமதேவா தமிழ்நாட்டு மண்ணில் காலடி எடுத்து வைக்கிறான். அப்போது தலைவர் பிரபாகரன் சென்னையில்



லெப். பரமதேவா

லைப் புலிகள் தாக்குதலில் விடிவிற்கு முந்தி மரணத் தைக் தழுவிக்கொண்ட 16

நிலையில் பிடிவாதமாகவே இருந்தான். இறுதியாக 'இனி மேல் உன்னிடம் நான் வாயால் பேசப்போவதில்லை இனி என் துப்பாக்கிதான் பேசும்' என்று தன் அண்ணனை எச்சரித்து விட்டுத் திரும்பினான் பரமதேவா.

முறையான இராணுவப் பயிற்சியைப் பெற்ற பரமதேவா 'ராஜா' என அழைக்கப்பட்டான். பயிற்சியின் பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் பரமதேவா முதற் களம் கண்டான்.

05-06-84 அன்று அடர்ந்த காடுகள் நடுவே ஒட்டுசுட்டான் கிராமத்தில் அமைந்திருந்த சிங்களப் போலிஸ் நிலையம் மீது ஒரு திடீர்த் தாக்குதலை புலிகள் நடாத்தினர். இந்த அதிரடி நடவடிக்கையில் பங்கு பற்றிய புலிகளுள் பரமதேவா முக்கியமானவன்.

அடர்ந்த காட்டில் புலிகளின் துப்பாக்கிகள் முழங்கித் தணிந்தபோது ஒட்டுசுட்டான் போலீஸ் நிலையம் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்தது.

கனேமுல்ல என்ற வெறி பிடித்த சிங்கள அதிகாரி ஒருவன் உட்பட 8 சிங்களப் பொசலிார்கொல்லப்பட்டார்கள்.

பரமதேவா வெற்றிக் களிப் போடு களத்திலிருந்து மீண்டான்.

1978 ஆம் ஆண்டு செங்கலடியில் மேற்கொண்டு தோல்வியைத் தழுவிய அவனது முதலாவது தாக்குதல் முயற்சியின் பின் இப்பொழுது புதிய அனுபவங்களுடன் புதிய உத்வேகம் பெற்றவனாக மட்டக்களப்பிற்குத் திரும்பினான்.

அந்தக் காலப் பகுதியில் மட்டக்களப்புப் பகுதியெங்கும் உள்ள சந்து பொந்தெல்லாம் அலைந்து திரிந்து தமிழ் மக்களை வேட்டையாடி வந்த சிங்களப் படைக்குப் பதிலடி கொடுக்கவும், இயக்கத்திற்குத் தேவையான ஆயுதங்களை சிங்களப் படைகளிடமிருந்தே பெறுவதற்காகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தைத் தாக்கி அழிக்கப் பரமதேவா முடிவு செய்தான்.

22-09-84 அன்றைய தினத்தைத் தமிழீழ மண் மறக்கமாட்டாது. அன்றுதான் களுவாஞ்சிக்குடிப் பொலீஸ் நிலையத் தாக்குதலும், துப்பாக்கி வேட்டுக்களும், இரத்தமும், நஞ்சுமாய் பரமதேவாவின் மூச்சு அடங்கியது.

பரமதேவாவும், கணேசும், சந்தோசம் மாஸ்டரும், வாமதேவனும் இன்னும் பல வீரர்களும் களுவாஞ்சிக்குடிப் போலீஸ் நிலையத்தை அன்று மாலை நெருங்கியபோது போலீஸ் நிலையத்திற்குள் இருந்து குண்டுகள் தங்களை நோக்கிச் சரமாரியாய் பாய்வதை அவர்கள் கண்டார்கள். ஒரு குண்டு பரமதேவாவின் உடலைக் கிழித்துச் சென்றது. காயம் பட்ட பரமதேவாவை சகபுலிகள் மீட்க முனைந்தனர்.

தன்னை மீட்க முனைவதால் மேலதிக இழப்புக்களைத் தாங்க வேண்டிவரும் என்பதை உணர்ந்த பரமதேவா அவ்விதம் தன்னை மீட்கும் முயற்சியை மேற்கொள்ளாது அனைவரையும் பின்வாங்கும்படி கட்டளையிடுகிறான்.

பரமதேவா அப்போது சாவுக்கு மிகவும் பக்கத்தில் இருந்தான். அருகிலே நிலையெடுத்துக் கிடந்து சுட்டுக் கொண்டிருந்த சக தோழரைப் பார்த்து அவன் கடைசியாகக் கூறிய சொற்கள் இவைதான்:-

'உன்னுடைய மகன் களத்திலே போராடி வீரனாக மடிந்தான் என்று அம்மாவிடம் போய்ச் சொல்லு.'

அடுத்த நொடி தன் கழுத்தில் தொங்கிய சயனைட்டைப் பரமதேவா கடித்தான்; பக்கத்தில் வாமதேவனின் உயிர் அடங்கிக் கொண்டிருந்தது. இரண்டு தோழர்களும் தமிழீழ விடுதலைப் பயிருக்கு தங்களை ஆசையோடு எருவாக்கிக் கொண்டார்கள்.

1983 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 23 ஆம் திகதி தன்னை அடைத்து வைத்திருந்த மட்டக்களப்புச் சிறையை உடைத்து விடுதலையான லெப்டினனட் பரமதேவா சரியாக ஒரு வருடத்திற்கு ஒரு இரவே இருக்கும் பொழுது 1984 ஆம் ஆண்டு புரட்டாசி 22 ஆம் திகதி சிங்கள அடக்குமுறை எனும் சிறையை உடைத்து தமிழீழ மக்களை விடுவிக்கச் சென்றபோது வீரமரணத்தைத் தழுவிக்கொண்டான்.

நன்றி: தமிழீழம்

கொளுத்தப்பட்ட பன்குளம் பொது நூலகம்

-பாலகுமாரன்

**1974** ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆம் திகதி யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் வைத்து தமிழர்கள் கொல்லப்பட்டதும்-

1974-ஆம் ஆண்டு ஆனி மாதம் 5 ஆம் திகதி தியாகி சிவகுமாரன் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக சயனைட் அருந்தி வீரமரணமடைந்ததும்-

1975 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி சிவகுமாரனால் பல தடவைகள் கொலை செய்ய முயற்சிக்கப்பட்ட இனத்துரோகி துரையப்பா விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டதும்-

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த 15 வயதுச்சிறுவனான பரமதேவாவின் நெஞ்சில் ஆழப் பதிந்து விட்டன.

விளைவு......

- ☐ மட்டுநகர் அரசினர் கல்லூரியிலிருந்து அவன் வெளியேற்றப்பட்டான்.
- ☐ ஆளும் சுதந்திரக் கட்சியின் அடிவருடிகளாக இருந்த ராஜன் செல்வநாயகத்தின் அடியாட்களால் தாக்கப்பட்டு தெரு ஓரத்தில் வீசப்பட்டான்.

காரணம்......

- ☐ தமிழினத்தைப் பாதித்த ஏதோஒருகாரணத்திற்காக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டானாம்.
- ☐ தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் ஒரு வருட நினைவு நாளை மட்டக்களப்பில் கொண்டாட முனைந்தானாம்.

பரமதேவாவை காலம் புடம் போட்ட பல நிகழ்ச்சிகளில் முக்கியமானவைகள் இவைகள்.

1970 ஆம் ஆண்டளவில் அடக்குமுறைகளுக் கெதிரான தமிழ் இளைஞர்களின் எழுச்சி ஆயுத மோதல்களாக பரிணமித்துக்கொண்டிருந்தது. துப்பாக்கிகளின் வேட்டோசைகளினாலும், வெடிகுண்டுகளின் எதிரொலியாலும் தமிழ்பேசும் மக்களுக்கான புதிய பாதையொன்று அமைக்கப்பட்டது.

1976 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 5 ஆம் திகதி தலைவர் பிரபாகரனால் 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற பெயர் தமிழீழ விடுதலைப் புலிகள் என மாற்றப்பட்டது. செய்திகள் வாயிலாக இவற்றைக் கேள்விப்பட்ட பரமதேவா இந்த எழுச்சியில் இணைந்துகொள்ளத் துடித்தான். சிங்கள இனவாதத்திற்கு எதிரான ஒரு பகுதித் தமிழ் இளைஞர்களின் ஆயுதக்கிளர்ச்சி பரமதேவாவையும் எழுச்சி கொள்ளச் செய்தது.

ஆனால் இவர்கள் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

எனவே தனியொரு குழுவை அமைத்துப் போராட பரமதேவா முடிவு செய்தான்.

தன்னைப்போல் தீவிரமாகச் சிந்தித்த இரு இளைஞர்களை அவன் தன்னுடன் சேர்த்துக் கொண்டான. ஒருவன் ரஞ்சன், முன்னாள் பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர், க. கனகரத்தினத்தின் மகன், தமிழீழத்துக்காக தமிழ் பேசும் மக்களின் வாக்குகளைப்பெற்றுபாராளுமன்றம் சென்ற பின் தமிழ் பேசும் மக்களின் துரோகியாக மாறியவன் கனகரத்தினம்.

அப்பா கனகரத்தினம் தமிழீழத்தின் துரோகி
மகன் ரஞ்சன் தமிழீழத்தின் போராளி.

தனது குழுவை வலுப்படுத்தி அவற்றுக்கான ஆயுதங்களைச் சேகரிக்க பரமதேவாவிற்குப் பணம் தேவைப்பட்டது. செங்கலடி வங்கியிலிருந்து பலாத்காரமாகப் பணத்தைப் பெற்றுக்கொள்வதென அவன் தீர்மானித்தான்.

மட்டக்களப்பு மண்ணின் செல்வங்களில் ஒன்றுதான் மரமுந்திரி. ஒரு மரமுந்திரிகைத் தோப்பின் நடுவில்தான் பரமதேவாவின் வீடு. ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாக இருந்த அந்த மர முந்திரிகைத் தோப்பில் தான் பரமதேவாவும் அவனது சாகக்களும் துப்பாக்கிப் பயிற்சிபெற்றார்கள்.

1978 ஆம் ஆண்டு செங்கலடி வங்கி பரமதேவா குழுவினரால் தாக்குதலுக்கு உள்ளாகின்றது. பணத்தைப்பெற்றுக்கொண்டு வரும்போது சிங்களப் போலிஸ் படை. துரத்திச் சுடுகின்றது. பரமதேவா குழுவினரிடம் போதியளவு ஆயுதங்கள் இருக்கவில்லை. அந்தச் சண்டையில் காலில் காயம் பட்ட நிலையில் பரமதேவாவும், அவனது குழுவினரும் கைது செய்யப்படுகின்றனர்.

பரமதேவா அவன் தோழன் ரஞ்சனுடன் ஐந்து வருடங்களாககொடிய சிறைவாசத்தை அனுபவிக்கின்றான்.

போலிஸ் சித்திரவதைகளினாலும் தனிமைச் சிறைகளினாலும் இவர்களின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாம் என சிங்கள அரசு எதிர்பார்த்தது. ஆனால் காயம் பட்ட புலியைப் போல சிறைச் சுவர்களுக்குள்ளேயே இவர்கள் குமுறிக் கொண்டிருந்தனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை, கொழும்பு மகசின் சிறைச்சாலை, மட்டுநகர் சிறைச்சாலை என மாறி மாறி கொடுஞ்சிறைகளில் அடைக்கப் பட்டனர். விடுதலை உணர்வு என்னும் கத்தியைத் தீட்டும் சாணைக் கல்லாக சிறைச்சாலையின் கொடுமைகள் நிறைந்த சுவர்களை பரமதேவா மாற்றிக் கொண்டான்.

பரமதேவாவையும், அவனது தோழர்களையும் மக்களிட மிருந்து பிரிக்க முடிந்த சிறைச் சுவர்களினால் "தமிழீழ மக்களின் விடுதலை" என்ற உறுதியான எண்ணத்தை அவர்களின் மனங்களிலிருந்து பிரிக்க முடியவில்லை.



1983 ஆம் ஆண்டு சிங்கள அரசால் நடாத்தப்பட்ட 53 தமிழ் இளைஞர்களைப் பலி கொண்ட வெலிக்கடைப் படுகொலைகளிலிருந்து தப்பிய தமிழ் இளைஞர்கள் மட்டுநகர் சிறைக்கு மாற்றப் பட்டனர். அப்போது மகர சிறையிலிருந்த பரமதேவாவும் மட்டுநகர் சிறைக்கு மாறப் பட்டான். ரஞ்சன் விடுதலை செய்யப்பட்டுவிட்டான். பரமதேவாவிற்கு சிறைவாசம் முடிய இன்னும் ஒரு சில வாரங்களே இருந்தன.

ஆனால் முடிவில்லாத சிறைவாசத்தை அனுபவிக்கப் போகும் இளைஞர்கள் பலர் அங்கிருந்தனர். அனைவரையும் விடுவிக்க வேண்டுமென்று பரமதேவா விரும்பினான். அதற்காக அங்கிருந்த பல இளைஞர்கள் ஒன்றிணைந்தார்கள். 1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மட்டுநகர் சிறையுடைப்பு நிகழ்ந்தது.

பரமதேவா வீரனாக வெளியே வந்தான். ஐந்து வருட சிறை வாழ்க்கை இவனை மேலும் தீவிர போராளியாக மாற்றியது.

போராட்டக் களத்திலிருந்து ஐந்து வருடமாக நேரடியாகப் பெற்ற அனுபவம் எப்படி ஒரு போராளியின் உறுதியை, இலட்சியப் பற்றை அர்ப்பண உணர்வை மேலும் வளர்த்துச் செல்லுமோ அதே போல அத்தனையும் ஐந்து வருட சிறை வாழ்க்கையிலிருந்தும் பரமதேவா பெற்றுக் கொண்டான்.

1983 ஆம் ஆண்டு மார்கழி மாதம் சிங்களக்கடற்படையின் கட்டுக்காவலையும் மீறி பரமதேவா தமிழ்நாட்டு மண்ணில் காலடி எடுத்து வைக்கிறான். அப்போது தலைவர் பிரபாகரன் சென்னையில் தான் இருந்தார்.

ஏற்கனவே பரமதேவாவிற்கு தலைவர் பிரபாகரன் மேல் பற்றும்.மதிப்பும்உண்டு. பிரபாகரனைச் சந்திக்கப் பேராவலோடு அவன் இருந்தான்.

1983 ஆம் ஆண்டு மார்கழியிலேயே தலைவர் பிரபாகரனை பரமதேவா முதற்தடவையாகச் சந்தித்தான். அச் சந்திப்பு பாண்டிச்சேரியில் நிகழ்ந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்து தலைவர் முன் ஆணையெ.டுத்த நாளும் அன்றுதான்

அதைத் தொடர்ந்து, சிறை உடைப்பிற்குச் சற்று முன்னர் விடுதலையாகியிருந்த நண்பன் ரஞ்சனும் புலிகள் இயக்கத்தில் சேர்ந்துகொண்டான்.

பரமதேவாவின் அண்ணன் ஒருவன் தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்டத்தைச் செயலிழக்கச் செய்யக்கூடிய விதத்தில், மக்கள் விரோதக் குழுவான 'புளொட்' டுடன் சேர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்ததை பரமதேவாவினால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை.

"என் அண்ணனின் போக்குக்களையும், அவன் சார்ந்த அமைப்பின் கொள்கைகளையும் நான் வெறுக்கின்றேன்" என்று ரஞ்சனைப் பார்த்துச் சொல்வான்.

அதே போல ரஞ்சனும் தன் அப்பாவின் கொள்கைகளை வெறுப்பதாகத் திருப்பிச் சொல்வான்.

துரோகத்திற்குத் தண்டனையாகக் கனகரத்தினத்தை விடுதலைப் புலிகளே சுட்டார்கள். ஆனால் காயங்களுடன் அவர் உயிர் தப்பினார்.

அத்துடன், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொக்கிளாய் சிறீலங்கா இராணுவ முகாம் மீதான விடுதலைப் புலிகள் தாக்குதலில் விடிவிற்கு முந்தி மரணத்தைத் தழுவிக்கொண்ட 16 விடுதலைப் புலிகளின் சைமன் என்னும் இயக்கப் பெயருடைய ரஞ்சனும் ஒருவனாவான்.



லெப் • பரமதேவா

தீமைகளைக் கண்டு எப்பொழுதும் கொதித்தெழும் பரமதேவா தவறுசெய்பவர்கள் தனக்கு வேண்டியவர்களாக இருந்தாலும்கூட சகித்துக் கொள்ள மாட்டான். அவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டித் திருத்த முயல்வான். முடியாவிட்டால் அவர்களின் தொடர்புகளை அறுத்தெறிந்து விடுவான்.

சிறைச்சாலையில் பரமதேவாவின் தோழனாக இருந்து மட்டக்களப்பு சிறையுடைப்பின்போது பரமதேவாவுடன் கூட்டாகச் செயலாற்றிய தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் பின்னர் தமிழீழ இராணுவம் (TEA) என்ற பெயரில்தனி குழுவாக இயங்கி வந்தான். அவன் குழுவின் பல நடவடிக்கைகள் விடுதலைப் போராட்டத்துக்கு விரோதமாக இருந்து வந்தது. தலைவர் பிரபாகரனின் அனுமதியைப் பெற்று தன் நண்பனான மகேஸ்வரனைத் திருத்துவதற்காக பலதடவைகள் அவனைச் சந்தித்துப் பேசினான். அவன் திருந்தவில்லை. எனவே பரமதேவா தன் நண்பனான மகேஸ்வரனின் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டான்.

பரமதேவாவின் சொந்த அண்ணன் வாமதேவா சமூக விரோதக் கும்பலான புளட் இயக்கத்தில் இருந்து கொண்டு பல தவறுகளைச் செய்து வந்தான். பரமதேவா பல தடவைகள் நேரில் சென்று அண்ணன் வாமதேவாவிடம் அவன் தவறுகளைச் சுட்டிக் காட்டி அவற்றைத் தவிர்த்துக் கொள்ளும்படி வேண்டினான். ஆனால் வாமதேவா தம்பி பரமதேவாவின் அறிவுரைகளைக் கேட்காது தன் கனேமுல்ல என்ற வெறி பிடித்த சிங்கள அதிகாரி ஒருவன் உட்பட 8 சிங்களப் பொசலிார்கொல்லப்பட்டார்கள்.

பரமதேவா வெற்றிக் களிப்போடு களத்திலிருந்து மீண்டான்.

1978 ஆம் ஆண்டு செங்கலடியில் மேற்கொண்டு தோல்வியைத் தழுவிய அவனது முதலாவது தாக்குதல் முயற்சியின் பின் இப்பொழுது புதிய அனுபவங்களுடன் புதிய உத்வேகம் பெற்றவனாக மட்டக்களப்பிற்குத் திரும்பினான்.

அந்தக் காலப் பகுதியில் மட்டக்களப்புப் பகுதியெங்கும் உள்ள சந்துபொந்தெல்லாம் அலைந்து திரிந்து தமிழ் மக்களை வேட்டையாடி வந்த சிங்களப் படைக்குப் பதிலடி கொடுப்பதென பரமதேவா முடிவெடுத்தான்.

பக்கத்தில் வாமதேவனின் உயிர் அடங்கிக் கொண்டிருந்தது. இரண்டு தோழர்களும் தமிழீழ விடுதலைப் பயிருக்கு தங்களை ஆசையோடு எருவாக்கிக் கொண்டார்கள்.

1983ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 23 ஆம் திகதி தன்னை அடைத்து வைத்திருந்த மட்டக்களப்புச் சிறையை உடைத்து விடுதலையான லெப்டினனட் பரமதேவா சரியாக ஒரு வருடத்திற்கு ஒரு இரவே இருக்கும் பொழுது 1984 ஆம் ஆண்டு புரட்டாசி 22 ஆம் திகதி சிங்கள அடக்குமுறை எனும் சிறையை உடைத்து தமிழீழ மக்களை விடுவிக்கச் சென்றபோது வீர மரணத்தைத் தழுவிக்கொண்டான்.

நன்றி: தமிழீழம்

## நினைப்பும் நடப்பும்

இதயங்கள் அறுத்து விடப்படுகின்றன
இணையத் தெரிந்தவைகள்
பிரிவைப் பின் பற்ற மறுப்பதனால்
அறுத்து விடப் படுகின்றன

'சிறகடிக்கக் கூடாது' என
விதிக்கப் பட்டது
இப்போ சிறகடிப்பதில்லை
அவைகள் முறிக்கப் பட்டு விட்டன

இணைந்த இ .த்தில்
முளைகள் செடியாகும்; கொடியாகும்
கொப்பு கிளைகள் வேர் விட்ட மரமாகும்
அவை வளர்க்கப் படுவதில்லை
வளர்கின்றன
உணர்வின் உந்துதலால்
சிந்திக்கத் தெரிந்திருந்தால்
அவை
முளையிலேயே முடங்கியிருக்கும்
உணர்ச்சி உலையில்
உணர்வுகள் தான் ஆவியாகின்றன
உருப்படி அற்றவை
உறைந்து போகின்றன-

இங்கே சிந்திக்கத் தெரிந்தவைகள் கூட
சீராவதில்லை ; சீராக்கப்படுவதும் இல்லை
சீரழிந்து போவதைக் கூட
சிதைவென்று நினைப்பதில்லை.
அங்கே
உறவின் ஒரு பக்கத்தை மட்டும்
உறுதிப் படுத்திக் கொண்டிருப்பதை
பிரிவைப் பின்பற்ற மறுப்பதை
வியப்பின் விளிம்பிற்கு
கொண்டு செல்வதற்கில்லை-

அறுத்து விடப்படும் போது ,
கனவுகள் கற்பனைகள்
எதிர்கால நம்பிக்கையின் கழுத்துகளும்
சேர்ந்தல்லவா அறுபடுகின்றன-
அங்கு வடிவது இரத்தமல்ல
இதயமே கரைந்தல்லவா வடிகிறது

உறவின் இரு பக்கங்களை மட்டுமல்ல,
முழுப் பரிமாணத்தையுமே
ஒன்றாக்கிப் பார்த்ததற்காக
அதன் வாலிபப் பருவ வடிவமைப்பு தான்
இத்தரிசனங்கள்
இங்கே தரிசனங்கள் தண்டனையாகின்றன.

T.சிவகுமாரன்.

# விஞ்ஞானம் விண்வெளி

## ஷியாப்பரெலியும் லொவெலும்

ஷியாப்பரெலியைத் தொடர்ந்து, மற்றைய வானியல் அறிஞர்கள் இந்தக் கால்வாய்களைக் காண்பதற்கு, ஒன்பது வருடங்கள் சென்றன. இந்த ஒன்பது வருட இடைக்காலத்திலே, சிலர், ஷியாப்பரெலியின் கண்களில், அல்லது மிலானில் அவர் உபயோகித்த 85 அங்குலத் தொலைநோக்கியில் ஏதோ தவறு இருக்கவேண்டும் என்று கூறிப் பரிகசித்தார்கள். செவ்வாயில் இல்லாத கோடுகளை ஷியாப்பரெலி மட்டும் காண்கிறார் என்று கூறினார்கள்.

ஆனால் 1886 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், வானம் தெளிவாகத் தெரிந்த ஓரிரவில் நைஸில் உள்ள வானவதான நிலையத்திலே, வானை அவதானித்துக் கொண்டிருந்த இரு வானியல் அறிஞர்-தொல்லன், பெரோற்றின் என்று இருவர் - செவ்வாயின் வாய்க்கால்களைக் கண்டார்கள் - ஷியாப்பரெலி வரைந்த படத்துக்கு ஒப்ப, இந்த வாய்க்கால்கள் இருந்தன. இதற்குச் சில காலத்தின் பின், இங்கிலாந்து, பெல்ஜியம், அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள வானியல் அறிஞரும் இவற்றைக் கண்டார்கள்.

செவ்வாயில் கால்வாய்கள் உண்டு என, முதன்முதலிலே அறிவித்தவர் ஷியாப்பரெலிதான் என்றாலும், உண்மையிலேயே நீரோடும் வாய்க்கால்கள் உண்டா என்பது பற்றி நடைபெற்ற கசப்பான வாக்குவாதங்களிலேஅவர் பங்குபற்றவில்லை. பிரச்சினைக்குரியவைகள் ஆகிவிட்ட இந்தக் கால்வாய்களைக் கண்டு பிடித்ததே நான்தான் என்று உரிமை கொண்டாடுவதற்குக் கூட அவர் மறுத்துவிட்டார். ஷியாப்பரெலி முன்பாகவே, சில வானியலறிஞர், செவ்வாயை அவதானித்து, அதனுடைய தோற்றத்தைப் படமாக வரைந்து வைத்திருந்தார்கள். இப்படங்களிலே வளைவான கோடுகளை அவர்கள் குறித்து வைத்தபோதிலும், இவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. ஷியாப்பரெலி மட்டுமே மிகக் கூடிய எண்ணிக்கையில் இவற்றைக் கண்டவர். அதிகமான எண்ணிக்கையில் அவற்றைக் கண்டதுடன் நின்று விடாமல், அந்தக் கோடுகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்தவரும் அவரே. வானியல் வரலாற்று அறிஞர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். எனவே, இவற்றைக் கண்டுபிடித்த முழுப்பெருமையும் ஷியாப்பரெலியையே சாரும் என்பது அவர்களது முடிவு ஆகும்.

1890ஆம் ஆண்டிலே ஷியாப்பரெலியின் கண் பார்வை மங்கத் தொடங்கியது. தொலை நோக்கி மூலம் வானை ஆராய்ச்சி செய்வது இயலாத காரியமாயிற்று. 1910 இல் அவர் மரணமடை




வதற்குச் சில மாதங்களுக்கு முன்னரே அவர் பார்வையை முற்றாக இழந்தார். இறக்கும் போது அவருக்கு வயது எழுபத்தைந்து.

அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்தில் வ்ளக்ஸ்ராவ் என்ற இடத்தில் வானவதான நிலையம் ஒன்று உண்டு. இதனைத் தனது சொந்தப்பணத்தில் உருவாக்கியவர், பெர்ஸிவல் லொவெல் என்ற வானியல் அறிஞர் செவ்வாய்க்கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் இருபது வருடங்களாக ஈடுபட்டவர் செவ்வாயில் உள்ள கால்வாய்கள், அதிவேகமுடைய செவ்வாய் மனிதரினால் உருவாக்கப்பட்டவை என உறுதியாகக் கூறியவர் இவர்.

### அதன் அச்சின் சரிவு

செவ்வாயினுடைய துருவப் பிரதேசத்திலிருந்து அதன் நிரட்சரேகைப் பகுதிக்கு, நீர்ப்பாசனத்தின் பொருட்டு நீரைக் கொண்டு வருவதற்காக இந்தக் கால் வாய்கள் உருவாக்கப்பட்டன என்று லொவெல் பூரணமாக நம்பினார். துருவப்பிரதேசங்களில் இருந்து, நிரட்சரேகை வரையில், கால்வாய்கள் ஒவ்வொரு வருடமும் படிப்படியாக இருண்டு கொண்டு வரும். முதலிலே துருவப் பகுதியை ஒட்டிய இடங்களில் கால்வாய்கள் கருமை அடையும். நாட் செல்லச் செல்ல, கால்வாயின் கருமை நிரட்சரேகையை நோக்கிப் படிப்படியாக நீளும் செவ்வாயில் உள்ள நீரின் அளவு குறைவு அதுவும் ஆவியாகி விடும் போது, கால்வாயின் இருபுறங்களிலும் வளர்ந்திருந்த தாவரங்களும் காய்ந்து விடுகின்றன என்று அவர் விளக்கினார். இதனால். துருவப் பகுதியில் இருந்து இயற்கையான கால்வாய்கள் வழியாகவோ அல்லது குழாய்கள் மூலமாகவோ நிரட்சரேகைப் பகுதிக்கு நீர் கொண்டு வரப்படுகிறது என லொவெல் உறுதியாகக் கூறினார்.

செவ்வாயின் துருவப்பகுதிகளில் உள்ள பனிக்குல்வாய்கள், உருகி, நீராகி வாய்க்கால்கள் வழியாக நிரட்சரேகையை நோக்கி வருவதனால் தான், அந்தக் கால்வாய்கள் துருவப் பகுதிகளிலே முதலில் கருமையடைய ஆரம்பித்து, பின் படிப்படியாக நிரட்சரேகை வரை கருமையடைந்து வருகின்றன என்பது லொவெலின் கருத்து. இரு துருவங்களில் உள்ள பனிமூடிகளும், ஒரே காலத்தில் உருகுவதில்லை. பூமியைப் போலவே, செவ்வாயின் அச்சும் சரிந்திருப்பதனால் வடக்கில் கோடைகாலமாக இருந்தால், தெற்கிலே குளிர்காலமாக இருக்கும். வாய்க்கால்களிலே நீர் பெருகி வரும் போது, இருபக்கத்திலும் தாவரங்கள் செழித்து வளரும் இதனாலே தான் வாய்க்கால்கள் இருண்டு தோன்றுகின்றன என்பது லொவெலின் கருத்து.

தன்னுடைய வாதத்தை மேலும் பலப்படுத்துவதற்காக இன்னொரு விஷயத்தையும் அவர் எடுத்துக் காட்டினார். அதாவது, வருடம் செல்லச் செல்ல, சில கால் வாய்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றன என்ற உண்மை. கருமை நிறம், சாடையான கருமை நிறமாகவும், பின் சாம்பல் நிறமாகவும் மாறிப்பின் முற்றாக மறைந்து விடுகிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

**உடுவில் விவியன் நமசிவாயம்**

# புற்று நோய்

நுரையீரல் புற்றுநோய் சிகரெட் புகைப்பதனால் உண்டாகிறது. கருப்பை வாய்புற்று நோய் பெண்களிடையே அதிகமாகஉள்ளஒரு வியாதிநம்நாட்டுப் பெண்களிடையே உண்டாகும் புற்று நோய்களில் ஐம்பது சதவீதம் கருப்பை வாய் புற்று நோய்தான்.

மார்பகத்தில் உண்டாகும் புற்று நோய் மேல் நாட்டில் அதிகமாக இருந்தாலும் நம் நாட்டிலும் எல்லா பொருளாதார மட்டங்களிலும் உள்ள பெண்களையும் பாதிக்கின்றன.

சில புற்றுநோய்கள் வம்ச பரம்பரையாக வருவதுண்டு. குழந்தைகளுக்கு கண்ணில் ரெடினா (Retina)வில் வரும் கான்ஸர் (Cancer) சில பெருங் குடல் புற்று நோய்கள் வம்சத்திலே பலரைப் பாதிக்கலாம். வம்சமுறையிலே மார்பகப் புற்று நோய் வரலாம். முப்பது வயதுக்கு மேற்பட்ட பெண்மணிகள் பரிசோதனை செய்து கொள்வது நலம்.

வைரஸ் (Virus) என்ற நுண் கிருமிகளால் புற்று நோய் உண்டாகிறதா? இந்த கேள்விக்கு இன்னமும் தெளிவாகப் பதில் கிடைக்கவில்லை.

### சில அடிப்படை உண்மைகள்

புற்று நோய்க்கெனத் தனி அறிகுறிகள் ஏதும் கிடையாது உறுப்பில் சில அறிகுறிகள் தென்படலாம்.

புற்றுநோய் திடீரென உருவாகும் ஒரு வியாதி அல்ல. அஜீரணம் என்று பல வருடங்கள் ஆன்டாஸிட் மாத்திரைகள் சாப்பிட்டு கொண்டு இருப்பவருக்கு அவரை அறியாமலேயே வளர்ந்து போன இரப்பை புற்று நோய் உண்டாகியிருப்பதை பார்க்கிறோம் ஒரு உறுப்பு நான்கு அல்லது ஆறு வாரங்களுக்கு மேல் சரிவர இயங்காமல் இருந்தால் ஏன் அவ்விதம் இருக்கிறது என பரீட்சைகள் செய்தல் அவசியம். இதனால் சந்தேகப்படும் நிலையிலேயே புற்றுநோயைக்கண்டு பிடித்து குணமாக்கலாம்.

### ஏழு ஆபத்தான அறிகுறிகள்

1. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆறாத புண்,

2. மார்பகத்தில் வலியற்ற கட்டி அல்லது தடிப்பு ஏற்படும்.

3. உடலில் உள்ள துவாரங்கள் ஏதாவது ஒன்றிலிருந்து ரத்தம் அல்லது அசாதாரண நீர் கசிதல்.

4. வளரும் அல்லது நிறம் மாறும் மச்சம்.

5. விடாதிருக்கும் அஜீரணம் அல்லதுவிழுங்குவதில் கஷ்டம்

6. விடாதிருக்கும் இருமல் அல்லது தொண்டையில் கரகரப்பு.

7. மலம், சிறுநீர் கழிக்கும் பழக்கங்களில் மாறுதல்.

இவற்றில் ஏதாவது ஒரு அறிகுறி தென்பட்டாலும் உடனே அலறிப் புடைத்துக் கொண்டு வைத்தியரிடம் போக வேண்டும் என இதற்கு அர்த்தம் இல்லை. ஒரு பரிசோதனை செய்து கொண்டால் நலம் என்றே கூறுகின்றோம். அனேகமாக ஒரு சிலருக்கு இது புற்றுநோயாகவே இல்லாமல் இருக்கும். புற்றுநோயாக இருந்தால் இந்நிலையில் தக்க சிகிச்சையுடன் குணமாவதற்குவாய்ப்பு உண்டு.




புற்றுநோய் பற்றி ஒரு நிதானம் ஏற்பட வேண்டும். ஒத்திப் போடுவதும் அல்லது புற்று நோய் என்று சொல்லி விடுவார்களோ என்று பயப்படுவதும் தான் மிக ஆபத்தானவை வலியில்லை என்பதால் கான்ஸர் இல்லை என்று நினைப்பது தவறு. புற்று நோயில் முற்றின பிறகே வலி வரும்.

கான்ஸர் தொற்று அல்ல. அது எந்த வயதிலும்வரலாம். சில புற்று நோய்கள் குழந்தைகளுக்கும் சில இளம் வயதினருக்கும் உண்டாகலாம். பெரும்பாலும் முப்பத்தைந்து வயது முதல் அறுபத்தைந்து வயது வரைதான் வருகிறது.

### புற்றுநோய்த் தடுப்பு

இதை இரண்டு வகையில் நிறைவேற்றலாம்.

புற்றுநோயை உண்டாக்கும் காரணிகளை ஒதுக்கலாம். புகையிலையை எந்த வகையிலும் உபயோகப்படுத்தாமலிருப்பது. பால், குறி பரிசுத்தம் Refinedfood எனப்படும் ஆகாரங்களை தவிர்த்தல் இவை சில முறைகள். அரசாங்கமும் சமூகமும் பலவித இயந்திரப் புகைகள், டீசல், போன்ற எண்ணைப் புகைகள் ஆகியவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளை கண்டு பிடித்து சிகிச்சை செய்து குணமாக்குவது.

புற்று நோய் வரக் கூடிய வாய்ப்புள்ள சிலர் அவ்வப் பொழுது மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது அவசியம். கதிரியக்க (x-ray) தொழிலாளிகள் புற்று நோய் காரணிகளின் சூழலில் தொழில் புரிவோர் பல குழந்தைகள் பெற்று கருப்பை புற்று நோய் வரக்கூடிய நிலையில் உள்ள பெண்மணிகள் குழந்தைகள் இல்லாத பெண்மணிகள் (மார்பக புற்றுநோய்) இவர்கள் இவ்வாறு பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

உறுப்புகள் அவ்வப்பொழுது உதறித்தள்ளும் உயிரணுக்களைப் பரிசோதனை செய்வது இப்பொழுது உபயோகமானதாக இருக்கிறது. இதனால் புற்று நோய் அணுக்களாக அவை மாறியுள்ளனவா எனக் கூற முடியும். முக்கியமாக கருப்பை புற்றுநோயைக் கண்டு பிடிக்க இம்முறை மிகவும் உபயோகமானதாக உள்ளது. மார்பகப் புற்று நோய், நீர்ப்புற்று நோய் இவற்றையும் இம் மாதிரியே பரிசோதனை செய்து கண்டு பிடிக்க இயலும். இம்மாதிரி கண்டு பிடிக்கப்படும் புற்று நோய்கள் நூற்றுக்கு நூறு குணமாகக் கூடியவையே.

### சிகிச்சை

தற்கால சிகிச்சை முறைகளின் மூலம் நூற்றுக்குஎண்பது பேருக்கு மேல் குணமடைகிறார்கள். கதிரியக்கம் அறுவை இவற்றின் மூலம் குணமாக்க முடியும். ஆயுர் வேதம், ஹோமியோபதி, சித்த, யுனானி முறைகளில் புற்று நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகள் இல்லை என்றே கூற வேண்டும்.

புற்றுநோயை முளையிலேயே கிள்ளி எறிந்தால் முழுக்கலும் குணமாக வேண்டியதே. அறுவை கதிரியக்கம் புற்று நோய் மருந்துகள் தவிர வேறு குறுக்கு வழிகளில் இதனை சரிப்படுத்த முடியாது.

கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இந்த வியாதியின் காரணத்தையும் இதற்கு முடிவையும் தேட முயற்சி செய்து வருகின்றனர். புற்று நோய் வல்லுனர்கள் இருபது வருடங்களுக்கு முன் குணமாக்க முடியாத புற்று நோய்கள் இன்று மருத்துவத்துக்கும் தலை பணிய ஆரம்பிக்கின்றன.

புற்று நோயை வெற்றி கொள்வதில் மனித குலத்திற்குவெற்றி கிட்டும் என்பது உறுதி.

**முகமட் ஸம்சுதீன் (மாது)**

### வைரவரிகள்

செருக்குக்குஅடுத்தபடியாக மனிதமன மோகங்களில் தலையாயதும் மிக மிருகத்தனமானதும்அதிகார மோகமாகும்.

— வில்ஸேரியன் பெலின்ஸ்கி

மிக உயர்வான ஒரு பெரருளை நாடும் முயற்சி கூட அமைதியாகவும் சலனமின்றியும் அமைய வேண்டும்.

— ஸிஸரோ

தன் நாட்டின் நலனுக்காக அயல் நாட்டில் பொய்சொல்ல அனுப்பப்பட்டுள்ள நேர்மையான மனிதனே அயல் நாட்டுத் தூதுவர்.

— ஸர் ஹென்ரி. வாட்டன்

அரசியல் ஞான சந்பர்ப்பத்தை உருவாக்குவார். சந்தர்ப்பம் அரசியல்-வாதியை உருவாக்கும்.

— ஜோர்ஜ். எஸ். ஹில்லர்ட்

ஆட்சி முறைகள் அனைத்துமே சுதந்திரத்திற்கு ஏதோவொரு வகையில் எதிரானவையே.

— மெங்க்கென்

ஆயுதம் போரில் முக்கியமானது ஆனால் தலையாயதல்ல. மனிதன் தான் நடுநாயகமானவன் கருவியல்ல...

— மா சேதுங்

பிடித்ததே நான்தான் என்று உரிமை கொண்டாடுவதற்குக் கூட அவர் மறுத்துவிட்டார். ஷியாப்பரெலி முன்பாகவே, சில வானியலறிஞர், செவ்வாயை அவதானித்து, அதனுடைய தோற்றத்தைப் படமாக வரைந்து வைத்திருந்தார்கள். இப்படங்களிலே வளைவான கோடுகளை அவர்கள் குறித்து வைத்தபோதிலும், இவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. ஷியாப்பரெலி மட்டுமே மிகக் கூடிய எண்ணிக்கையில் இவற்றைக் கண்டவர். அதிகமான எண்ணிக்கையில் அவற்றைக் கண்டதுடன் நின்று விடாமல், அந்தக் கோடுகளைப் பற்றித் தீவிரமாகச் சிந்தித்த

...வ்வாயினுடைய துருவப் பிரதேசத்திலிருந்து அதன் நிரட்சரேகைப் பகுதிக்கு, நீர்ப்பாசனத்தின் பொருட்டு நீரைக் கொண்டு வருவதற்காக இந்தக் கால் வாய்கள் உருவாக்கப்பட்டன என்று லொவெல் பூரணமாக நம்பினார். துருவப்பிரதேசங்களில் இருந்து, நிரட்சரேகை வரையில், கால்வாய்கள் ஒவ்வொரு

இன்னொரு விஷயத்தையும் அவர் எடுத்துக் காட்டினார். அதாவது, வருடம் செல்லச் செல்ல, சில கால் வாய்கள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகின்றன என்ற உண்மை. கருமை நிறம், சாடையான கருமை நிறமாகவும், பின் சாம்பல் நிறமாகவும் மாறிப்பின் முற்றாக மறைந்து விடுகிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

**உடுவில் விவியன் நமசிவாயம்**

வருடமும் படிப்படியாக இருண்டு கொண்டு வரும். முதலிலே துருவப் பகுதியை ஒட்டிய இடங்களில் கால்வாய்கள் கருமை அடையும். நாட் செல்லச் செல்ல, கால்வாயின் கருமை நிரட்சரேகையை நோக்கிப் படிப்படியாக நீளும்

செவ்வாயில் உள்ள நீரின் அளவு குறைவு அதுவும் ஆவியாகி விடும் போது, கால்வாயின் இருபுறங்களிலும் வளர்ந்திருந்த தாவரங்களும் காய்ந்து விடுகின்றன என்று அவர் விளக்கினார். □

திரைகள் சாப்பிட்டு கொண்டு இருப்பவருக்கு அவரை அறியாமலேயே வளர்ந்து போன இரப்பை புற்று நோய் உண்டாகியிருப்பதை பார்க்கிறோம் ஒரு உறுப்பு நான்கு அல்லது ஆறு வாரங்களுக்கு மேல் சரிவர இயங்காமல் இருந்தால் ஏன் அவ்விதம் இருக்கிறது என பரீட்சைகள் செய்தல் அவசியம். இதனால் சந்தேகப்படும் நிலையிலேயே புற்றுநோயைக்கண்டு பிடித்து குணமாக்கலாம்.

### ஏழு ஆபத்தான அறிகுறிகள்

1. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஆறாத புண்,

2. மார்பகத்தில் வலியற்ற கட்டி அல்லது தடிப்பு ஏற்படும்.

தால் கான்ஸர் இல்லை என்று நினைப்பது தவறு. புற்று நோயில் முற்றின பிறகே வலி வரும்.

கான்ஸர் தொற்று அல்ல. அது எந்த வயதிலும்வரலாம். சில புற்று நோய்கள் குழந்தைகளுக்கும் சில இளம் வயதினருக்கும் உண்டாகலாம். பெரும்பாலும் முப்பத்தைந்து வயது முதல் அறுபத்தைந்து வயது வரைதான் வருகிறது.

### புற்றுநோய்த் தடுப்பு

இதை இரண்டு வகையில் நிறைவேற்றலாம்.

புற்றுநோயை உண்டாக்கும் காரணிகளை ஒதுக்கலாம். புகையிலையை எந்த வகையிலும் உபயோகப்படுத்தாமலிருப்பது. பால், குறி பரிசுத்தம் Refinedfood எனப்படும் ஆகாரங்களை தவிர்த்தல்

## வைரவரிகள்

மனிதமன மோகங்களில் தலையாயதும் மிக மிருகத்தனமானதும்அதிகார மோகமாகும்.

**வில்ஸேரியன் பெலின்ஸ்கி** □

மிக உயர்வான ஒரு பெருளை நாடும் முயற்சி கூட அமைதியாகவும் சலனமின்றியும் அமைய வேண்டும்.

**ஸிஸரோ** □

தன் நாட்டின் நலனுக்காக அயல் நாட்டில் பொய்சொல்ல அனுப்பப்பட்டுள்ள நேர்மையான மனிதனே அயல் நாட்டுத் தூதுவர்.

**ஸர் ஹென்ரி. வாட்டன்** □

அரசியல் ஞான சந்பர்ப்பத்தை உருவாக்குவார். சந்தர்ப்பம் அரசியல்-வாதியை உருவாக்கும்.

**ஜோர்ஜ். எஸ். ஹில்லர்ட்** □

ஆட்சி முறைகள் அனைத்துமே சுதந்திரத்திற்கு ஏதோவொரு வகையில் எதிரானவையே.

**மெங்க்கென்** □

ஆயுதம் போரில் முக்கியமானது ஆனால் தலையாயதல்ல. மனிதன் தான் நடுநாயகமானவன் கருவியல்ல...

**மா சேதுங்** □



## விளையாட்டு

# உலகக்கிண்ணஉதைபந்தாட்டம் வெற்றியாருக்கு?

## கடந்தவாரம் நேப்பிள்ஸில் குழப்பங்களுடன் ஆரம்பமாகியுள்ளஉலகக்கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி

**வை. சிவனேசன்**

பதின்னான்காவது உலகக் கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் யூன் 8ஆந் திகதி முதல் யூலை 8ஆம் திகதி வரை இத்தாலியின் பன்னிரண்டு நகரங்களில் நடைபெறுகின்றன. உலகில் தனி ஒரு விளையாட்டுக்கான மிகப் பெரிய விளையாட்டு விழாவாக உலகக் கிண்ண உதைப் பந்தாட்ட போட்டிகளே விளங்குகின்றன. இத்தடவை உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போவது யார் என்பதே இன்று உலக உதைப் பந்தாட்ட ரசிகர்களினால் ஆவலுடன் எதிர்பார்க்கப் படும் விடயமாகும். யூலை 8ஆந் திகதி றோம் நகரில் நிகழவுள்ள இறுதிப் போட்டிகள் வரை யாரும் இதற்கு உறுதியாக விடையளிக்க இயலாதென்பதே உண்மை. யூன் 8இல் ஆரம்பப் போட்டியில் தற்போதைய சம்பியன்களான ஆஜென்ரீனா அணி மிலான் (Milan) நகரில் ஆபிரிக்க வட்டாரத்தின் பலமிக்க அணியான கமரூனை எதிர்த்து ஆடவுள்ளது.

கடந்த சுமார் இரு ஆண்டுகளாக உலகளாவிய வகையில் வட்டார ரீதியில் நடைபெற்ற ஆரம்பப் போட்டியில் சிறப்பாக ஆடிய 22 அணிகள் இறுதியாட்டங்களுக்குத் தெரிவு பெற்றுள்ளன. இவற்றுடன் உலகக்கிண்ண போட்டி மரபின்படி போட்டியை நடாத்தும் இத்தாலியும் கடந்த முறை சம்பியனான ஆஜென்ரீனா அணியும் நேரடியாக இறுதியாட்டத்திற்குத் தெரிவுபெற ஆக மொத்தம் 24 அணிகள் உலகக் கிண்ணத்திற்காக இறுதி நிலையில் மோதுகின்றன. (1982க்கு முன்னர் 16 அணிகளே இறுதி நிலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.)

இந்த 24 அணிகளும் ஒவ்வொன்றும் நான்கு அணிகளை உள்ளடக்கிய ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆரம்ப நிலையில் தமக்கிடையே போட்டியிடும். ஆரம்ப சுற்றுப் போட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த தலா இரு அணிகள் அடுத்த நிலைக்குத் தெரிவு பெறும். இவ் 12 அணிகள் தலா மூன்று அணிகள்கொண்ட நான்கு பிரிவுகளாக பிரிக்கப் பட்டு லீக் (League) முறையில் தம்மிடையே மோதி அரையிறுதி ஆட்டங்களுக்கு இந் நான்கு பிரிவுகளிலும் முதன்மை பெறும் அணிகள் தெரிவு பெறும்.

ஐரோப்பிய வட்டகையிலிருந்து இறுதிப் போட்டிகளுக்கு ஆகக் கூடுதலாக 14 நாடுகள் தெரிவு பெற்றுள்ளன. அவை:- இத்தாலி, றுமேனியா, சுவீடன், ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து, ரஷ்யா, ஒஸ்ரியா, ஒல்லாந்து, மே.ஜெர்மனி, யுகொஸ்லாவியா, ஸ்பெயின், அயர்லாந்து, பெல்ஜியம், செக்கோசெலவேக்கியா.

தென்னமரிக்கா வட்டகையிலிருந்து நான்கு அணிகள் ஆஜென்ரீனா, பிரேஸில், உருகுவே, கொலம்பியா.

ஆசிய பிராந்தியத்திலிருந்து தென்கொரியா, ஐக்கிய அரபுக் குடியரசு (U.A.E) என்பனவும்,

ஆபிரிக்காவிலிருந்துஎகிப்து, கமரூன் ஆகிய இரு அணிகளும் வடமத்திய, அமெரிக்க பிரிவிலிருந்து ஐக்கிய அமெரிக்கா, கொஸ்ராறிக்கா என்பனவும் தெரிவு பெற்றுள்ளன.

| நடைபெற்ற ஆண்டு | | நடைபெற்ற நாடு | | வென்ற அணி |
|---|---|---|---|---|
| 1930 | — | உருகுவே | — | உருகுவே |
| 1934 | — | இத்தாலி | — | இத்தாலி |
| 1938 | — | பிரான்ஸ் | — | இத்தாலி |
| 1950 | — | பிரேஸில் | — | உருகுவே |
| 1954 | — | சுவிற்சலாந்து | — | மே.ஜெர்மனி |
| 1958 | — | சுவீடன் | — | பிரேஸில் |
| 1962 | — | சிலி | — | பிரேஸில் |
| 1966 | — | இங்கிலாந்து | — | இங்கிலாந்து |
| 1970 | — | மெக்ஸிக்கோ | — | பிரேஸில் |
| 1974 | — | மே.ஜெர்மனி | — | மே.ஜெர்மனி |
| 1978 | — | ஆஜென்ரீனா | — | ஆஜென்ரீனா |
| 1982 | — | ஸ்பெயின் | — | இத்தாலி |
| 1986 | — | மெக்ஸிக்கோ | — | ஆஜென்ரீனா |

உலகக் கிண்ண ஆட்டங்களை நாம் வரலாற்று ரீதியாக நோக்கினால் ஐரோப்பிய, தென்னமரிக்க அணிகளிடையே தான் உண்மையான போட்டி இருந்து வருவதனை அவதானிக்கலாம். கடந்த பதின்மூன்று தடவைகளும் உலகக் கிண்ணம் ஐரோப்பிய அல்லது தென்னமரிக்க நாடுகளிடமே கைமாறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

பிரேஸில் இத்தாலி ஆகிய இரு அணிகளும் தலா மூன்று தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிச் சாதனை புரிந்துள்ளன. உருகுவே, மே. ஜெர்மனி ஆஜன்ரீனா என்பன தலா இரு தடவைகள் உலகக் கிண்ணத்தை உரித்தாக்கின. இங்கிலாந்து அணிக்கு 1966இல் ஒரே ஒரு தடவை இச் சந்தர்ப்பம் கிடைத்தது. எனவே, தென்னமரிக்க நாடுகள் ஏழு தடவைகளும் ஐரோப்பிய அணிகள் ஆறு தடவைகளும் உலகக் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளன. இன்னொரு உண்மையையும் கடந்த கால போட்டி முடிவுகள் புலப்படுத்துகின்றன. அதாவது போட்டிகள் ஐரோப்பிய மண்ணில் நிகழும் போது ஐரோப்பிய அணிகளும் தென்னமரிக்க மண்ணில் தென்னமரிக்க அணிகளும் வெற்றி பெற்றுள்ளன. இதற்கு 1958 ஆம் ஆண்டு போட்டிகள் மாத்திரம் 'விதிவிலக்காக அமைகின்றன. இவ்வாண்டில் போட்டிகள் ஐரோப்பாவின் சுவீடன் நாட்டில் நடந்தாலும் வெற்றி பிரேஸில் அணிக்கே கிடைத்தது. ஐந்து தடவைகள் போட்டியை நடாத்திய நாடே வெற்றி பெற்றுள்ளது. இத்தாலி அணி இம்முறை பலமிக்கதாக விளங்குவது அதற்கான வாய்ப்பை அதிகரிப்பதாயுள்ளது. ஏற்கனவே மூன்று முறை கோப்பையை தக்க வைத்த இத்தாலி நான்காம் முறையும் அதனை நிலைநாட்டும் வாய்ப்புகள் அதிகமென்றே கூறவேண்டும். போட்டியை நடாத்தும் நாட்டுக்கு சொந்த ரசிகர்கள், சொந்த மைதானங்கள் என்பன அனுகூலங்களாக அமையினும் இவையே சில சமயங்களில் பிரதிகூலங்களாக அமைந்து விடுவதனையும் மறுக்கவியலாது. இத்தாலி அணி பயிற்சியாளரான Azeqlio Vicini தமது அணிக்கு ஆஜென்ரீனா, பிரேஸில், நெதர்லாந்து என்பவற்றிடமிருந்து பலத்த போட்டி கிடைக்குமெனக் கூறுகிறார். அதே வேளை ரஷ்யா, ஸ்பெயின், உருகுவே, செக்கோசெலவேக்கியா, மே. ஜெர்மனி அணிகள் இரண்டாம் நிலை போட்டியாளர்களாக விளங்குவர் என்பது இவர் கருத்து. Gianluca Vialli, Franco Baresi போன்றமுக்கிய வீரர்களைக் கொண்டு விளங்கும் இத்தாலி தனக்கிருக்கும் 'சாதக நிலைமைகளை' பயன்படுத்தத் தவறாது என்பது நிச்சயம்.

Ruud Gullit Marco Van Besten என்ற இரு மிகச்சிறந்த வீரர்களைக் கொண்டு விளங்கும் ஒல்லாந்து இம்முறை ஒரு பிரதான வாய்ப்பாளராக (favorite) மிளிர்கிறது. ஐரோப்பிய கோப்பை வெற்றியாளர்களான ஒல்லாந்து வீரர்கள் தமது சாதனை பட்டியலை தொடர்வார்களா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

1958, 1962, 1970 ஆண்டுகளில் உலகக் கோப்பையை வெற்றி கொண்டதுடன் 'பிலே' என்ற மிகச் சிறந்த உதைபந்தாட்ட நட்சத்திரத்தை உலகுக்களித்த பிறேஸில் உலகக் கிண்ணப் போட்டிகள் யாவற்றிலும் பங்கு பற்றிய சிறப்பை உடையது. Larela என்ற சிறந்த வீரர் பிறேஸில் அணியில் இம்முறை முதன்மை பெறுகிறார். ஆஜென்ரீனா வீரர் மாரடோனா போன்று கரிக்காவும் இத்தாலியின் நேப்பிள்ஸ் அணிக்காகவே ஆடி வருவதும் குறிப்பிடத் தக்கது. தற்போதைய உலக உதைபந்தாட்ட வீரர்களுள் மிகச் சிறந்தவர் கரிக்கா என்பது மாரடோனாவின் கருத்து. தனது மூன்றாவது உலகக் கிண்ண போட்டிகளை எதிர்கொள்ளும் கரிக்காவைத்தவிர Valdo, Jorqinho Branco போன்ற சிறந்த ஆட்டக்காரர்களையும் பிறேஸில் பெற்றுள்ளது. உதைபந்தாட்டமே தென்னமரிக்கர்களுக்கு குறிப்பாக பிறேசில் நாட்டவர்களுக்கு உயிர்மூச்சு ஐரோப்பிய தென்னமரிக்க உதைபந்தாட்டத்தின் மாறுபட்ட அணுகுமுறை பற்றி 'பிலே' ஒரு தடவை குறிப்பிடுகையில் Our' foot-ball comes from the heart; Their comes from themind' என விபரிக்கின்றார்.

ஆஜென்ரீனா அணி தனது வீரர்களின் சராசரி வயது தொடர்பாக கவலை கொண்டுள்ளது. பெரும்பாலான வீரர்கள் வயது கூடியவர்களாயுள்ளனர். வீரர்களின் காயங்களும் அதனைப் பாதித்துள்ளன. எனினும் இறுதியாக நடந்த மூன்று உலகக் கிண்ண போட்டிகளில் இரண்டினை வென்ற (1978, 1986) தெம்பும் மாரடோனாவுமே அதன் நம்பிக்கைகள். அணியின் பயிற்சியாளரான Carlos Bilardo ஆரம்ப ஆட்டங்களின்றி நேரடியாக இறுதிப் போட்டிகளில் பிரவேசித்தமை



(10 ஆம் பக்கம் பார்க்க)



## இலக்கியம்

# ஈழத்துத் தமிழ்இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு - 5

1950-60 காலப்பகுதியில் கவிதை, நாடகம் ஆகிய துறைகளில் ஈழத்துத் தமிழ் இன உணர்வு வெளிப்பட்ட வகை முன்னர் நோக்கப்பட்டது. அடுத்து அக் காலப் பகுதிச் சிறுகதைகளில் அது வெளிப்பட்ட விதம் கவனத்துக்குரியதாகிறது.

**சிறுகதைகளில்......**

ஈழத்துத் தமிழர் மத்தியில் சிறிய கதைகளை எழுதும் மரபு கடந்த நூற்றாண்டில் வழக்கிற்கு வந்து விட்டதெனினும் சிறுகதையென்ற கலை வடிவம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பயிலத் தொடங்கியது. 1930 களின் பிற்பகுதியில் வடிவச்செம்மை எய்தவளரத் தொடங்கிவிட்ட அவ்வடிவம் நாற்பதுகளில் மண்வாசனை கொண்டதாக அமையத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக 1950 களில் அது இன உணர்வு சார்ந்த உள்ளடக்கங்களையும் கொள்ளத் தொடங்கியது. 1951 - 52 நவஜீவனம் இதழில் வெளிவந்த "காளிமுத்துவின் பிரஜாவுரிமை" என்ற கவிதை இவ்வகையில் முதலாவது ஆக்கமாகத் தெரிகிறது. இதனை எழுதியவர் சு. செ. முருகானந்தன் அவர்கள். 1948 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் நிறைவேற்றப்பட்ட இந்தியர் பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டத்தால் குடியுரிமை இழந்த மலையகத் தமிழன் ஒருவன் அவ்வுரிமையை மீண்டும் எய்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை அவலச் சுவையுடன் எடுத்துரைக்கும் கதை இது.

காளிமுத்து என்ற மலையகத் தொழிலாளி தன்னை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்து கொள்வதற்குப் பலவாறு முயல்கிறான். ஆனால் பதிவு அதிகாரிகளை அவனால் திருப்திப்படுத்த முடியாதிருக்கிறது. ஈற்றில் அவன் தனது பாட்டனார் புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டி ஒரு கையெலும்பை எடுத்துக் காட்டி,

"ஐயா துரைமார்களே, இது என் பாட்டனாரின் கை எலும்பு. எத்தனையோ வருடங்களுக்கு முன்னே அவர் இங்கு புதைக்கப்பட்டவர். என்னை இலங்கைப் பிரஜையாக்க உங்களுக்கு இந்த அத்தாட்சி போதவில்லையென்றால் என்னை இந்தக் குழியிலே வைத்து உங்கள் கையினாலேயே தள்ளிவிட்டுப் புதையுங்கள்"

என்று சத்தமிடுகிறான். அவனை அவர்கள் பைத்தியம் என்று கூறுகின்றனர்.

பௌத்த சிங்கள பேரினவாதத்தின் ஒரு வெளிப்பாடான மலையகத் தமிழரின் குடியுரிமைப் பறிப்பானது எவ்வளவு மனிதாபிமானமற்ற செயல் என்பதை இக்கதை உணர்த்தியமைகிறது. அத்துடன் மலையகத்தின் தோட்டங்களிற் பணிபுரிந்த (அன்றைய) யாழ்ப்பாணத் தமிழரின் மனக்கோணல்களையும் இது காட்டிநிற்கிறது. இதனை "ஐயா, எனக்கு ஒரு குழந்தைபிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வைச்சிருக்கோம்; எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்" என்று தோட்ட சூப்பிரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போதே அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துக் கிளார்க்துரை, "என்னடா அது சருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே? சின்னக் காளிமுத்து என்றுசொல்லடா" என்று அதட்டி சி.கா மட்டும் போட்டு விசயத்தை முடித்து விடுவான். இந்த நிர்வாக லட்சணத்தில் அங்கு பிறப்புப் பத்திரங்களா இருக்கும்?"

என்ற பகுதியில் அவதானிக்கலாம் மலையகத்தவரின் பிரச்சினைகள் தொடர்பான காலமுதன்மையுடைய தரமானதொரு படைப்பு என இக் கதையைக் கருதலாம். இச்சிறுகதை தனது பொருட் சிறப்புக் கருதிப் பலமுறை மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது: அ. செ. மு அவர்களின் மனிதமாடு (1986) தொகுதியில் இறுதிக் கதையாக இடம் பெற்றுள்ளது. இப் பிரச்சினை மேற்படி கதையை அடுத்து சில ஆண்டுகள் இனப்பிரச்சினை சிறுகதைகளிற் கவனத்தைப் பெறவில்லை. மீண்டும் 1955 ஆம் ஆண்டை அடுத்து இப்பிரச்சினை சிறுகதைகளுக்குப் பொருளாவதை அவதானிக்க முடிகிறது. தொடர்ந்து 1962ஆம் ஆண்டுவரை இப்பிரச்சினை தொடர்பான பலசிறுகதைகள் எழுதப்பட்டன. சுதந்திரன் இதழே இவற்றுக்கான பிரதான களமாக அமைந்ததுமேற்படிகதைகளில் பல 1956-57, 61 ஆம் ஆண்டுகளில் முனைப்புப் பெற்ற அறப்போராட்டச் சூழலின் பிரசவங்கள், 1958 ஆம் ஆண்டின் இனக்கொலைச் சூழலின் துன்பதுயரங்களையும் அவை தோற்றுவித்த உணர்வோட்டங்களையும் சித்தரிப்பனசில. வேறுசில கதைகளிலே மேற்படி சூழல்கள் பகைப்புலன்களாக மட்டும் அமைந்தன.

சுதந்திரன் 30 - 1 - 55 இதழில் சி. சுந்தரலிங்கம் என்பார் எழுதிய 'வடக்கும் தெற்கும்' என்ற கதை சிங்களப் பெண்ணொருத்தியைக் காதலிக்கும் தமிழ் வாலிபன் ஒருவன் தமிழுணர்ச்சிக்காக அக்காதலைத் துறப்பதான கதையம்சங் கொண்டது.

"இன்று நான் வடக்கே. நீ தெற்கே. வடதிசையும் தென் திசையும் சந்திக்க முடியுமா? தமிழ்த்தாய் மரண அவஸ்தையில் இருக்கும் போது நான் காதல் கீதம் பாடுவது நன்றோ? தன்மானம் உடையவன் தமிழன். நேர்மைக்கும் அன்புக்கும் உரிமைக்கும் உயிரைப் பொருட்படுத்த மாட்டான் தமிழன். என் தாய் மொழிக்காக நான் சாகிறேன்"

என இக் கதையின் தலைமைப் பாத்திரம் கூறுகிறது. சமகாலத் தமிழ் உணர்ச்சிக் கவிதைகளிற் காணப்பட்ட உணர்வோட்டம் இக் கதையிற்புலப்படக் காணலாம். சூழல் சார்ந்த ஒரு தயாரிப்புக் கதை இது என்பது தெரிகிறது. இனப்பிரச்சினைப் பகைப்புலத்தில் தமிழன்- சிங்களப் பெண் காதலுணர்வைப் பொருத்திக் காட்டிக் கதைபடைக்கும் பிற்கால எழுத்தாளர் பலருக்கு இக் கதாசிரியர் முன்னோடியாகிறார். அவ்வளவே.

1956 - 57 ஆம் ஆண்டுகளில் சுதந்திரன் இதழ்களில் எழுதப்பட்ட பல சிறுகதைகள் அறப்போருக்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி அமைந்தன. காதல், குடும்ப உறவுநிலை, அரசபணி முதலியவற்றைத் தியாகம் செய்து அறப்போருக்குத் தம்மை அர்ப்பணிக்க முற்படும் உணர்வுநிலையே இவ்வகைக் கதைகள் பலவற்றினதும் உள்ளடக்கம் ஆகும். ஏயானாம் என்பாரின் "களம் புறப்படுகிறேன் காதலரே" (சுதந் 7-6-56) மு. தளையசிங்கத்தின தியாகம் (சுதந் 24-2-57) பசுத்தீவு இடையர் கோன் என்பாரின் அன்னையின் துடிப்பு (சுதந் 17 -03-57) அண்ணாவிற்கு அஞ்சலி (சுதந் 21 - 4 - 57) தம்பியின் பாக்கியம் (சுதந் 14-7-57) முதலியகதைகளில் இப் பண்பை அவதானிக்கலாம்.

17 - 5 - 57 சுதந்திரன் இதழில் வ. அ. இராசரத்தினம் எழுதிய 'தோழரின் மனமாற்றம்' என்ற சிறுகதை மேற்படி உணர்வு நிலையை ஒரு புதிய கோணத்தில் புலப்படுத்தியது. கம்யூனிச வாதியாகத் திகழ்ந்து தமிழரின் இனரீதியான உணர்வுவெழுச்சியை மறுதலித்து நின்ற ஒருவர் அறப்போர்ச் சூழலில் மனமாற்றமடைந்து அப் போராட்டத்தில் ஈடுபடுவதாக இக் கதை அமைந்தது. அவரது உணர்வோட்டம் செயற்பாடு என்பன பின்வருமாறு அமைகின்றன.

'மார்க்சை ஜெர்மனிய யூதன் என எழுதும் சரித்திர ஆசிரியர்கள் சச்சிதானந்தத்தை இலங்கைத் தமிழன் என்று எழுதினால் அதை ஏன் மற்றவர்கள் தடுக்க வேண்டும். இலங்கையின் அரசியல் போகும் போக்கில் இந்தநாட்டில் இனித் தமிழ் இனம் இருக்க முடியுமா? புரட்சி நீடுழி வாழ்க! என்று கோஷித்த வண்ணம்தொண்டர் அணியிற்சேர்ந்துகொண்டார். தமிழன் தமிழனாக வாழ்ந்தால் தான் உலக சகோதரத்துவத்தைப் பற்றிப் பேசமுடியும் என அவர் மனச்சாட்சி சொல்லிக் கொண்டிருந்தது.'

வ. அ. இராசரத்தினமவர்கள் மேற்படி கதையில் உணர்த்தியுள்ள உணர்வுநிலை எவ்வளவு தீர்க்க தரிசனமானது என்பதனைப் பின்னைய வரலாறு தெளிவுபடுத்தி அமைகிறது. இவ்வகையில் இது ஒரு முக்கிய கவனத்துக்குரிய ஆக்கமாகும்.

1956 - 57 ஆம் ஆண்டுகளில் தமிழர் மீது சிங்களவர் நிகழ்த்திய காடைத்தனங்கள் புதுமைலோலன் அவர்களின் 'அப்பே லங்கா' (சுதந் 24-6-56), இளம்பூரணனின் 'வண்டியில் வெறியாட்டம்' (சுதந் 7-4-57) முதலிய கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன. தமிழர் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து போராட்டத்தை அடக்குதற்குச் சிங்கள அரசு சிறையிலடைபட்டிருந்த திருடர், காடையர் என்போரைப் பயன்படுத்திய நிலையை 'அப்பே லங்கா' கதையிற் காணலாம். திருடனான புஞ்சிசிங்கோ சிறையினின்று விடுதலை பெற்று வந்த உடன் காடையர்களால் தமிழர்களின் போராட்டத்துக்கெதிராக ஏவப்படுகிறான் என்பதும் இதனை அரசும் ஆதரித்து நிற்கிறது என்பதும் இதன் கதையம்சம்.

கலைவாணி என்ற இதழின் பொங்கல் மலரில் (1957) 'புதுமைப் பிரியை' என்பார் (பின்னாளில் திருமதி பத்மா சோமகாந்தன்) எழுதிய புத்தன் பரம்பரை என்றகதை 1956 ஜூன் 1 இல் காலிமுகத்திடலில் நிகழ்ந்த சிங்கள காடைத்தனத்தைச் சுட்டி அதன் பகைப்புலத்தில் நிகழ்ந்த ஒரு மனமாற்றத்தை உணர்த்துவது. மேத்தானந்தா என்பாரின் இனவெறி உபதேசத்தால் காலிமுகத்திடலில் காடைத்தனம் புரிந்த சுபசிங்கா என்ற காடையன் பின்னர் தன் தவறுக்கு வருந்திப் புத்த பிரானிடம் மன்னிப்புக் கோருவது இதன்கதையம்சம். இக்கதை பேரினவாதிகளிடம் மனமாற்றம் நிகழும் என்ற நம்பிக்கையைத் தொனிப்பது.

1958 இல் நிகழ்ந்த இனக்கொலைச் சம்பவங்கள் சில சிறுகதைகட்குப் பொருளாயின. ஈழத்துச் சோமு (சோமகாந்தன்) அவர்களின் 'யாழ் நகர் நாகவிகாரை' என்ற சிறுகதை (சுதந்திரன் 25-1-59) யாழ்ப்பாணத்தில் பேக்கரி வைத்திருந்த சிங்களவர்-தென்னிலங்கையில் கடை வைத்திருந்த யாழ்ப்பாணத்தமிழர் இருவர் மீதும் இனக்கொலைச் சூழல் ஏற்படுத்திய பாதிப்பைப் பற்றிய ஒப்பீடாகும். கலவர சூழலில் தெற்குக்குப் போன பண்டா அது முடிந்தவுடன் மீண்டும் யாழ்நகரில் பேக்கரி வியாபாரம் தொடங்கிவிடுகிறான். ஆனால் தென்னிலங்கையிற் கடை போட்ட தமிழர் தமது கடை சிங்களவரின் உடமையாகிவிட்ட நிலையில் - பூமணி ஸ்டோர்ஸ் பியசிரி ஸ்டோர்ஸ் ஆகிவிட்ட நிலையில் - மனம் வெதும்புகிறார்.

'ம்...ம்! தென் இலங்கையில் கொட்டிக்குவித்த பணத்தை இங்கு செலவு செய்து ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கியிருந்தால்..? அங்கு ஓடிப்போய்க் கடை நடத்திய எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.'

என அமையும் அவரது உணர்வோட்டத்தினூடாக தமிழர் தாயகமே அவர்கட்கும் பாதுகாப்பு என்பது அன்று உணரப்பட்டமை புலனாகும்.

- வளரும் -

## ஈழத்துத் தமிழ் இன உணர்வின் இலக்கிய வெளிப்பாடு

கலாநிதி - நா - சுப்பிரமணியன்

---

**கலை இலக்கியவாதிகளின் நிலை**

எமது விடுதலைப்போராட்டத்திற்கு கலை இலக்கியவாதிகளின் பங்களிப்பு, எப்படியாக இருக்கிறது? சமகால இலக்கியங்களை அவர்கள் என்ன விதமாகப் படைத்தி

நாளாந்த வாழ்க்கை முறைகளை, அனுபவங்களை அவலங்களை, அடிமை வாழ்வு தரும் படிப்பினைகளை, உடனுக்குடனேயே இலக்கியம் ஆக்கினால் எப்படி இருக்கும்.

உன்னதமானகலைப்படைப்பாக எமது படைப்புக்கள் இருக்க வேண்டும் என்று

கடைசி எழுதிப் புகழ்பெற வேண்டும் என்றோ, எழுதிப் பணம் சேர்க்க வேண்டும் என்றோதன்னும் நோக்கங்கள் இருக்க மாட்டாதா?

எனவே ஏதாவது நோக்கம் இல்லாமல் எந்த கலை இலக்கியப் படைப்பாளியும் இருக்க முடியாது. அவை அரசியல், அந்நியப்பட்டே இருக்கின்றன.

மக்களின் நாளாந்த வாழ்க்கையில் போராட்டமும் அது தொடர்பாக எழும் பல்வேறு நடவடிக்கைகளும் பதில் நடவடிக்கைகளும் விரும்பியோ, விரும்பாமலோ தொடர்பு உடையனவாகத்

யாதவர்களாகக்கூட இருந்தாலும் பரவாயில்லை. போராட்டத்தின் அவசியத்தினை தேவைப்பாட்டினை உணர்ந்துகொள்ள முடியாத எவராலும் உணர்வுபூர்வமான படைப்புகளைப் படைத்துவிட முடியாது.

**சந்தர்ப்பவாதிகள்**

"புரட்சி இயக்கங்களை விரும்பி ஏற்காத பல எழுத்தாளர்கள் தங்களை அறியாலேயே எழுத்தாளன் என்கிற முறையில் புரட்சிகரமான சிந்தனைகளைப் பிரதிபலிக்கிறார்கள். மார்க்சிய லெனினிசம் இம்மாதிரியான பல எழுத்தாளர்களைச் சுட்டிக் காட்டுகிறது. இன்னும் சில

கிடைக்கவில்லை. ஆனாலும் சில எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் பற்றி மார்க்ஸ்-எங்கெல்ஸ், லெனின் வரைந்த விமர்சனக் குறிப்புக்கள் இதோ நம் முன்னே கிடக்கின்றன. இவை இலக்கியத்தில் அகநிலை உணர்வுக்கும் (Subjective) புறநிலை உணர்

...ணந்தன் அவர்கள். 1948 ஆம் ஆண்டில் இலங்கை அரசால் நிறைவேற்றப்பட்ட இந்தியர் பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டத்தால் குடியுரிமை இழந்த மலையகத் தமிழன் ஒருவன் அவ்வுரிமையை மீண்டும் எய்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளை அவலச் சுவையுடன் எடுத்துரைக்கும் கதை இது.

காளிமுத்து என்ற மலையகத் தொழிலாளி தன்னை இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்து கொள்வதற்குப்

“ஐயா, எனக்கு ஒரு குழந்தைபிறந்திருக்கு. கருப்பையா என்று பெயர் வைச்சிருக்கோம்; எழுதிக் கொள்ளுங்கோ, எஜமான்'' என்று தோட்ட சூப்ரண்டன் கந்தோரில் போய் ஆசையோடு சொல்லும்போதே அங்கிருக்கும் யாழ்ப்பாணத்துக் கிளார்க்துரை, ''என்னடா அது சருப்பு ஐயா? எப்போடா ஐயாவானே? சின்னக் காளிமுத்து என்றுசொல்லடா'' என்று அதட்டி சி.கா மட்டும் போட்டு விசயத்தை முடித்து விடுவான். இந்த

துன்பதுயரங்களையும் அவை தோற்றுவித்த உணர்வோட்டங்களையும் சித்தரிப்பனசில. வேறுசில கதைகளிலே மேற்படி சூழல்கள் பகைப்புலன்களாக மட்டும் அமைந்தன.

சுதந்திரன் 30 - 1 - 55 இதழில் சி. சுந்தரலிங்கம் என்பார் எழுதிய 'வடக்கும் தெற்கும்' என்ற கதை சிங்களப் பெண்ணொருத்தியைக் காதலிக்கும் தமிழ் வாலிபன் ஒருவன் தமிழுணர்ச்சிக்காக அக்காதலைத் துறப்பதான கதையம்சங் கொண்டது.

கதாசிரியர் முன்னோடியாகிறார். அவ்வளவே.

1956 - 57 ஆம் ஆண்டுகளில் சுதந்திரன் இதழ்களில் எழுதப்பட்ட பல சிறுகதைகள் அறப்போருக்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி அமைந்தன. காதல், குடும்ப உறவுநிலை, அரசபணி முதலியவற்றைத் தியாகம் செய்து அறப்போருக்குத் தம்மை அர்ப்பணிக்க முற்படும் உணர்வுநிலையே இவ்வகைக் கதைகள் பலவற்றினதும் உள்ளடக்கம் ஆகும். ஏயானாம் என்பாரின் ''களம்

...றன.

'மார்க்சை ஜெர்மனிய யூதன் என எழுதும் சரித்திர ஆசிரியர்கள் சச்சிதானந்தத்தை இலங்கைத் தமிழன் என்று எழுதினால் அதை ஏன மற்றவர்கள் தடுக்க வேண்டும். இலங்கையின் அரசியல் போகும் போக்கில் இந்தநாட்டில் இனித் தமிழ் இனம் இருக்க முடியுமா? புரட்சி நீடூழி வாழ்க! என்று கோஷித்த வண்ணம்தொண்டர் அணியிற்சேர்ந்துகொண்டார். தமிழன் தமிழனாக

...டிருந்த திருடர், காடையர் என்போரைப் பயன்படுத்திய நிலையை 'அப்பே லங்கா' கதையிற் காணலாம். திருடனான புஞ்சிசிங்கோ சிறையினின்று விடுதலை பெற்று வந்த உடன் காடையர்களால் தமிழர்களின போராட்டத்துக்கெதிராக ஏவப்படுகிறான் என்பதும் இதனை அரசும் ஆதரித்து நிற்கிறது என்பதும் இதன் கதையம்சம்.

கலைவாணி என்ற இதழின் பொங்கல் மலரில் (1957)

பணத்தை இங்கு செலவு செய்து ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கியிருந்தால்..? அங்கு ஓடிப்போய்க் கடை நடத்திய எனக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்.'

என அமையும் அவரது உணர்வோட்டத்தினூடாக தமிழர் தாயகமே அவர்கட்கும் பாதுகாப்பு என்பது அன்று உணரப்பட்டமை புலனாகும்.

- வளரும் -

---

# இலக்கியத்தடம்

## ‘‘போராட்டமும் இலக்கியமும்’’

‘‘அழலாடிக்குட்டன்’’

### கலை இலக்கியவாதிகளின் நிலை

எமது விடுதலைப்போராட்டத்திற்கு கலை இலக்கியவாதிகளின் பங்களிப்பு, எப்படியாக இருக்கிறது? சமகால இலக்கியங்களை அவர்கள் என்ன விதமாகப் படைத்திருக்கின்றார்கள். கலைஇலக்கிய வாதிகளின் நிலை என்ன? என்றெல்லாம் இப்போது பரவலாக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பலரும் பலவிதமான கருத்துக்களை மேடைக்கு மேடை கூறி வருகின்றனர். இது தொடர்பான ஒரு காத்திரமான கலந்துரையாடல்,விவாதம் சகல மட்டங்களிலும் உள்ள எழுத்தாளர்களிடையே நடைபெறுவது மிகப் பொருத்தமான செயற்பாடாக அமையும்.

எரியும் பிரச்சினைகளை உடனுக்குடன் இலக்கியமாக்க முடியுமா? இலக்கிய மாக்க வேண்டுமா? அவை வெறுமனே செயற்கைத்தனம் நிறைந்தவையாகவும், கலைத்துவம் இல்லாமலும் பிரச்சாரப் பாங்கான படைப்புக்களாக உருவாகி விடுமா? எனவும் கேள்விகள் எழுகின்றன.

அவசரகோலத்தில் அள்ளித் தெளித்தாற் போல இலக்கியப் படைப்புக்கள் அமைந்து விடும் என்றும் முழுமையாக உள்வாங்கி மனதில் ஊற விட்டு பின்னர் படைக்கப் படுவதே உன்னதமான இலக்கியமாக வரும் என்றும் கூறுகின்றார்கள்.

உண்மைதான். ஆனால் உன்னதமான இலக்கியங்கள் மட்டும் தான் எமது எல்லைகளா? அல்லது எமது நோக்கங்கள் அவை மட்டும்தானா?

### நமது நிலமை

நாளும் பொழுதும்வேதனை நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டு (சுக ஜீவியம் சீவிப்பவர்களைக் குறிப்பிடவில்லை) சொந்த மண்ணில் நிம்மதியாக சுதந்திரமாக இல்லாமல் அடங்கி ஒடுங்கி அடிமையாக இருக்கும் எம்மில் அனேகம்பேர் எவ்விதம் எங்களது நிலைகளை மறந்து போக முடியும்.

நாளாந்த வாழ்க்கை முறைகளை, அனுபவங்களை அவலங்களை, அடிமை வாழ்வு தரும் படிப்பினைகளை, உடனுக்குடனேயே இலக்கியம் ஆக்கினால் எப்படி இருக்கும்.

உன்னதமானகலைப்படைப்பாக எமது படைப்புக்கள் இருக்க வேண்டும் என்று காத்திருப்பது சரியா? இலக்கியவாதிகள் படைக்கும் படைப்புக்களில் இருந்துதான் உன்னதங்கள் கிடைக்கும். ‘உன்னதமான கலைப் படைப்புக்காக அல்லது உன்னதமாகவரவேண்டும் என்பதற்காக யாரும் இலக்கியம் படைப்பதில்லை.’

எந்தவொரு படைப்பாளியையாவது காட்டுங்கள் அவர் படைத்த படைப்புக்கள் அத்தனையும் உன்னதங்களாக அமைந்துள்ளன என்று.

ஏராளமான சிறுகதைகளை எழுதும் ஒருவரது கதைகளில் வெகு சில தான் உன்னதங்களாக அமைகின்றன. பத்துப் பதினைந்து எழுதினால் என்ன பலநூறு எழுதினால் என்ன? இதுதான் உண்மை.

### நோக்கங்கள்

ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஒவ்வொரு குறிக்கோளும் பார்வையும் இருக்கும் எதிர்காலத்தில் நம்பிக்கையும், எதிர்பார்ப்புக்களும் உண்டு.

இன்றைய வேதனைகளையும், சுமைகளையும் சமாளித்துக் கொண்டு சிரிக்க வேண்டிய நேரத்தில் சிரித்து அழ வேண்டிய சோகங்களுக்கு அழுது கொண்டு வாழ்வது இந்த எதிர்பார்ப்புக்களாலும் நம்பிக்கைகளாலும் தான்.

சாதாரண மனிதர்களுக்கே இந்த வகையான தன்மைகள் இருக்கும் போது கலை இலக்கியப் படைப்பாளிகள் இவற்றினைத் தவிர்த்துக் கொள்ள முடியுமா?

கடைசி எழுதிப் புகழ்பெற வேண்டும் என்றோ, எழுதிப் பணம் சேர்க்க வேண்டும் என்றோதன்னும் நோக்கங்கள் இருக்க மாட்டாதா?

எனவே ஏதாவது நோக்கம் இல்லாமல் எந்த கலை இலக்கியப் படைப்பாளியும் இருக்க முடியாது. அவை அரசியல், சமூகம், பொருளாதாரம் சமயம் என்று பலவாறாக இருக்கலாம்.

கலை இலக்கியப் படைப்பாளிகளுக்கு மனத்தில்தோன்றும் தாக்கங்களும், அதனால் எழும் உந்துதல்களும் முக்கியமானவையே. அது காரணமாகத்தான் அவர்கள் படைப்புக்களைப் படைக்க முனைகின்றார்கள்.

எல்லோருக்கும் இந்த மன உணர்வுகளும் தாக்கங்களும் இருக்கின்றன. ஆனால் முயற்சியும் தேடலும் உள்ள சிலராலேயே படைப்புக்களைப் படைக்க முடிகின்றது.

### போராட்டகால இலக்கியங்கள்

சமகாலப் பிரச்சினைகளைப் போராட்டங்களை இலக்கியங்க்ளாகப்படைக்க போராட்ட விடயங்களிலும். அதனால் மக்கள் மத்தியில் எழும் அவலங்களிலும் அக்கறை இருக்க வேண்டும்.

மக்கள் வாழ்வும் இலக்கியமும், ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. எனவே எமது நாளாந்த நடவடிக்கைகளில் இருந்து இலக்கியத்தை ஒதுக்கி வைக்க முடியாது.

வாழ்க்கையோடு — இயைவுபடாது நிற்கும் இலக்கியங்கள் அன்னியப்பட்டுப் போகின்றன. எமது பெரும்பாலான இலக்கியவாதிகள் படைக்கும் இலக்கியங்கள் இவ்விதமே அந்நியப்பட்டே இருக்கின்றன.

மக்களின் நாளாந்த வாழ்க்கையில் போராட்டமும் அது தொடர்பாக எழும் பல்வேறு நடவடிக்கைகளும் பதில் நடவடிக்கைகளும் விரும்பியோ. விரும்பாமலோ தொடர்பு உடையனவாகத் தான இருக்கின்றன.

போராட்டத்துடன் இணைய முடியாதவர்களும் போராட்ட நடவடிக்கைகளின் நிகழ்வுகளின் தற்காலிக சோதனைகள் வேதனைகள் போன்றவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்களும் கஸ்டமான நிலைகளில் எவ்வாறு அதனை தாங்கிக் கொள்ள முடியாமல் புலம்பித்தள்ளுகின்றனரோ அவ்விதம் கால இடைவெளியில் அவற்றினை மறந்துவிட்டு நாளாந்த மாயங்களில் மயங்கியும் விடுகின்றனர்.

எமது இலக்கிய வரலாற்றினை எடுத்துக்கொண்டால் காலம் காலமாக அவ்வக் காலத்தில் எது தேவையாக இருந்தகோ எவ்வகைத் தன்மை முதன்மை பெற வேண்டுமோ அதுவே முதன்மை பெற்று இருந்தது.

வீரம், அறம், பக்தி, சமயம், தத்துவம் என்று சங்க காலம் தொடக்கம் சில விடயங்கள் முதன்மைப் படுத்தப் பட்டன. அவை இன்றுவரை சிறப்பான இலக்கியங்களாக உள்ளன. எனவே எமக்கு இப்போது எத்தன்மையான இலக்கியங்கள் தேவையோ அவை முதன்மைப்படுத்தப் படவேண்டும்.

அனுபவ உணர்வுகளூடாகப் பிறக்கும் இலக்கியமே சிறந்த கலைத்துவம், வீச்சும், ஆழமும் கொண்ட காத்திரமான படைப்புக்களாக வெளிப்படுகின்றன என்பது மறைக்க முடியாத உண்மையே. ஆனால் அந்த அனுபவம் வெளியிலே நிற்பதைவிட உள்ளே வந்து பங்குகொள்வதன் ஊடாக கூடிய அனுபவத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

போராட்டத்துடன் இணைந்து பங்குபற்ற முடியாதவர்களாகக்கூட இருந்தாலும் பரவாயில்லை. போராட்டத்தின் அவசியத்தினை தேவைப்பாட்டினை உணர்ந்துகொள்ள முடியாத எவராலும் உணர்வுபூர்வமான படைப்புகளைப் படைத்துவிட முடியாது.

### சந்தர்ப்பவாதிகள்

போராட்ட வழிமுறைகளில் வேறுபாடுகளை விரும்பலாம். போராட்டத்தினை நடத்துகின்ற சக்திகளில் வெவ்வேறு வகையானவற்றினை விரும்பலாம். ஆனால் இன விடுதலையும் பொருளாதார விடுதலையும் தான் எமது முதன்மையான காரணங்களாக இருந்தால் அவற்றுக்காக செயற்படல் அவசியமே.

அதை விடுத்து மதில்மேல் பூனைகாளாக எது முதன்மை பெறுகின்றதோ - எந்தச்சக்தி உச்சம் பெறுகின்றதோ - அதற்குப் பின்னால் நிற்பதாகப் பாவனை பண்ணிக் கொண்டு இருப்பது பொருத்தமானது தானா?

ஆகையால் தான் அவசரப்பட்டு எழுதுவதால் கலை இலக்கியப் படைப்புக்களின் கலைத் தரத்திற்கு ஆபத்து வந்துவிடப் போகின்றது. அவசரப்பட்டு அள்ளித் தெளிப்பதனால் இலக்கியத்தரம் குன்றிவிடப் போகின்றது என்று சொல்வதெல்லாம்கூட ஒரு வகை ‘தப்பிக்கொள்ளல்’ கதைகள் போலத் தோன்றுகின்றன.

தங்களை இனங்காட்டிக் கொள்ள விரும்பாதவர்களும் முற்று முழுதாக முடிவு கண்ட பின்னர் (போராட்டம்) நாங்களும் இதற்குமாகத்தான் நின்றோம். பாடுபட்டோம் எனக் கூறிக்கொள்ள விரும்புபவர்களும் தான் இவ்விதமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்கள் என்றே நினைக்கத் வேண்டியுள்ளது.

### மார்க்சியமும் இலக்கியமும்

மேற்படி தலைப்பில் இ. எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்கள் எழுதிய புத்தகத்தில் இருந்து சில பகுதிகள்

‘‘புரட்சி இயக்கங்களை விரும்பி ஏற்காத பல எழுத்தாளர்கள் தங்களை அறியாமலேயே எழுத்தாளன் என்கிற முறையில் புரட்சிகரமான சிந்தனைகளைப் பிரதிபலிக்கிறார்கள். மார்க்சிய லெனினிசம் இம்மாதிரியான பல எழுத்தாளர்களைச் சுட்டிக் காட்டுகிறது. இன்னும் சில எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் புரட்சிக்கருத்துக்களை விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள். ஆனால் எழுத்தாளன் என்கிற முறையில் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள கருத்துக்களைச் சரியாகப் பிரதிபலிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்த விதமாய் ஓர் எழுத்தாளன் புரட்சிகரமான சிந்தனைகளையோ, அல்லது பிற்போக்குத்தனமான சிந்தனைகளையோ ‘அகநிலை உணர்வில்’ ஏற்றுக் கொள்வதற்கும், அவனுடைய எழுத்துக்களின் புறநிலைப் பாதிப்புக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது.

கலை இலக்கியம் சம்பந்தமாக மார்க்ஸ் – எங்கெல்ஸ், லெனின் ஆகியோர், சரித்திரவியல் பொருள் முதல்வாத வெளிச்சத்தில் பரந்த அளவில் தமது கருத்துக்களைத் தெரிவிக்க போதிய அவகாசம் கிடைக்கவில்லை. ஆனாலும் சில எழுத்தாளர்களையும் அவர்களது படைப்புக்களையும் பற்றி மார்க்ஸ் - எங்கெல்ஸ், லெனின் வரைந்த விமர்சனக் குறிப்புக்கள் இதோ நம் முன்னே கிடக்கின்றன. இவை இலக்கியத்தில் அகநிலை உணர்வுக்கும் (Subjective) புறநிலை உணர்வுக்கும் (Objective) இடையிலான வித்தியாசங்களைத் துல்லியமாகக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து இரு உதாரணங்களைப் பார்க்கலாமா?

OO பால்ஸாக் என்னும்எழுத்தாளன் புரட்சி எதிர்ப்புக் கருத்துக்களின் சீடனாக இருந்தான். அவன் எழுத்துக்களோ புரட்சிகரமான உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது. மார்க்சும், எங்கெல்சும் புரட்சிகரமானஉள்ளடக்கத்திற்காக பால்ஸாக்கின் எழுத்துக்களை ரொம்பவும் மெச்சினார்கள்.

OO டால்ஸ்டாய் என்கிற ரஷ்ய எழுத்தாளன் அகநிலையில் பிற்போக்குத்தனமான கருத்துக்களின் ஆதரவாளனாக இருந்தான். ஆனால் அவனது படைப்புக்களுக்காக அவனை ‘ரஷ்யப் புரட்சியின் நிலைக் கண்ணாடி’ என்று வெகுவாகச் சிலாகித்தார் லெனின்.

□

---

□ இந்திய சுதந்திர போராட்ட வீரர்களில் ஒருவரான தீரர் சத்தியமூர்த்தியிடம் ஒரு ஆங்கிலேயன் “எங்கள் சாம்ராஜ்யத்தில் சூரியன் மறைவதே இல்லை தெரியுமா?'' என்றான்

உடனே சத்தியமூர்த்தி ‘‘ஆமாம் உங்களை இருட்டிலே விட கடவுளிற்கு பயம். ஏனெனில் நீங்கள் அத்தனை பெரிய திருடர்கள் என சூடாக பதில் தந்தார்.

□ ஒரு நாள் பெர்னாட்ஷா வீதி வழியே நடந்து செல்கின்றார். அவர் தம் எதிரி ஒருவன் எதிரில் வந்தான். பாதையோ குறுகலானது. யார்வழிவிடுவது என்ற பிரச்சனை. எதிரி கூறினான் ‘‘எனக்கு முட்டாள்களுக்கு வழி விட்டுப் பழக்கமில்லை'' ‘‘ஆனால் நான் வழிவிடுகிறேன்'' என்றார் பெர்னாட்ஷா.

# சிறுவர் பகுதி




## நீர்வேலி கண்ணாடி தொழிற்சாலை

உங்கள் வீடுகளில் கண்ணாடியாலரன பொருட்கள் இருக்கும் விழுந்தால் உடைந்து விடும் என்று வலு அவதான மாக பாவிப்பீர்கள். தேநீர் குடிப்பதற்கு' விளக்குகளுக்கு சிமினியாக கண்ணாடிப் பொருட்களை பாவிப்பீர்கள், இந்தக் கண்ணாடிப் பொருட்கள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன.

இதனைக் காண நாம் ஒரு கண்ணாடித்தொழிற்சாலைக்கு செல்லப்போகிறோம். உடனே எங்கேகொழும்பு, காலிசெல்ல வேண்டுமோ என நினைத்து விடாதீர்கள்.யாழ்ப்பாணத்தில் தான், மிக அண்மையில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை இருக்கிறது.

நீர்வேலி எனுமிடத்தில் உள்ள சேவியர் கண்ணாடித் தொழிற்சாலையையே நான் குறிப்பிடுகிறேன். அங்கேபோய் எப்படி கண்ணாடிப் பொருட்களை தயாரிக்கிறார்கள் என்று பார்ப்போம்.

நீங்கள் உடைக்கும் போத்தல்கள், கிளாஸ்களே இங்கு புதிய பொருளாக ஆக்கப்படுகின்றது. கண்ணாடி செய்வதற்கு கனிய மணல் தேவை என்று படித்திருப்பீர்கள். கனிய மணல் கொண்டு கண்ணாடி தயாரிப்பதற்கு உயர்ந்த தொழில்நுட்பம்வேண்டும். ஆனால் இதனை அரசாங்கமே செய்கின்றது.

பழைய உடைந்த கண்ணாடிகளைக் கொண்டு புதியவை தயாரிக்கும் தொழிற்சாலையே இங்கேஉள்ளது. இங்கு ஒருபெரிய செங்கல் உவை. உள்ளது உள்ளே கடுமையாக நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். கிட்ட நெருங்க முடியாத வெப்பமாக இருக்கும்.அதற்குள் உடைந்த கண்ணாடிகள் இடப்படும்.

உடைந்த கண்ணாடிகள் உயர்வெப்பத்தால் உருகி கூழ் போன்ற நிலைக்கு வரும். இந் நிலையில் பெரிய இரும்புக் குழாய்களை இந்த கூழிற்குள் வைத்து எடுப்பார்கள்,



அப்படி வைத்து எடுக்கும் போது உருகிய கூழ்குழாயுடன் ஒட்டிவரும். உடனே குழாயை வாயால் ஊதுவார்கள். இப்படி ஊதும் போது ஒட்டியுள்ள கண்ணாடிக் கூழ் பலூன் போல் விரியும்.

இப்படி விரிந்த கண்ணாடிக் குமிழை வேண்டிய வடிவமுள்ள அச்சில் வைத்து இறுக்குவார்கள். அச்சின் வடிவை அந்தக் கண்ணாடிக் குமிழ் பெற்று விடும். இப்போது கண்ணாடிப் பொருள் தயாராகி விட்டது.

நீர்வேலித் தொழிற்சாலையில் விளக்குச் சிமினிகளை, கிளாஸ்களை தயாரிக்கின்றனர். நீங்கள் சுற்றுலா சென்றால் இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையை தவற விடாதீர்கள்.

□

### ஈசாப்கதைகள்

## நல்ல நண்பர்கள்

நாயும் சேவலும் நல்ல நண்பர்கள். ஒன்றுகூடி வெளியூருக்குப் புறப்பட்டன. இரவு வந்தது. சேவல் மரத்திலேறிக் கிளையில் அமர்ந்து கொண்டது. நாய் மரத்தடியில் படுத்துக் கொண்டது.

பொழுது புலர்ந்தது. சேவல் கூவியது. குரல் கேட்ட குள்ள நரி விரைந்தோடி வந்தது. சேவலைக் கொன்று உண்ண விரும்பியது. குள்ளநரி சேவலை நோக்கி 'நண்பனே, உன் நட்பை பெறுவதற்காகவே ஓடோடி வந்திருக்கிறேன். கீழே இறங்கி வா. இருவரும் ஒன்றுசேர்ந்து என் இல்லத்திற்குப் போகலாம்'' என்று அழைத்தது. குள்ள நரியின் கபட நினைவைத் தெரிந்து கொண்டது சேவல். நரியை நோக்கி, 'நண்பரே, என் வேலைக்காரன் மரத்தடியில் உறங்குகிறான். அவனை எழுப்பிவிடும். அவன் மேலே வருவதற்குரிய கதவைத் திறந்துவிடுவான்' என்று கூறியது. நாயை நோக்கி நடந்தது குள்ளநரி. நாய் எழுந்து ஓடி நரிமீது பாய்ந்து கொன்று கிழித்தது.

## வெள்ளாடு

ஒரு மனிதன் ஒரு கழுதையை வளர்த்து வந்தான். புதிதாக ஒரு வெள்ளாட்டையும் வாங்கி வந்தான். கழுதைக்குக் கிடைத்த தீனியைக் கண்டு வெள்ளாடுபொறாமை கொண்டது. கழுதையைத் துன்பத்துக்குள்ளாக்க வேண்டுமென்று கருதியது.

ஒருநாள் கழுதையைப் பார்த்து, 'அன்பனே, சுமை சுமக்கிறாய்; கடின வேலை செய்கிறாய்; ஆயினும், உன்னைக் கேவலமாகக் கருதுகிறார்கள். இப்படி வேலை செய்தால் எத்தனை நாளைக்கு உயிரோடிருக்க முடியும்? நீ கீழே விழுந்து பாசாங்கு செய்து, ஓய்வு பெற வேண்டும்' என்று கூறியது.

வெள்ளாட்டின் யோசனையைக் கேட்ட கழுதை கீழே விழுந்தது. அதனால் காயம் ஏற்பட்டது. கழுதையின் சொந்தக்காரன் மருத்துவனை வரவழைத்தான். 'புண்ணை ஆற்ற, வெள்ளாட்டுக் கொழுப்புத் தேவை' என்றான் மருத்துவன். கொழுப்புப் பிடித்த வெள்ளாடு கொல்லப்பட்டது.

## கண்டு பிடியுங்கள்



இப்படத்தில்மறைந்துள்ளகருவிகளைகண்டுபிடியுங்கள்

## திராட்சை கடிக்கும்

ஒரு நாள் நரியொன்று கடும்பசியுடன் அலைந்து கொண்டிருந்தது. கடும்பசி ஆனால் உண்பதற்கு எதுவும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று யோசித்தவாறு தளர்வாக நடந்துகொண்டிருந்த நரியின் கண்ணில் திராட்சைக்குலை ஒன்று கண்ணில்பட்டது.



முன்னொருகாலத்தில் இந்த நரியின் பாட்டன் ஒருவன் திராட்சையை சாப்பிட எண்ணி திராட்சைக்குலையை கவ்வ முயன்றது. ஆனால் திராட்சை எட்டவில்லை. உடனே சீ இந்தப் பழம் புளிக்கும் என்று அந்தநரி திராட்சையை விட்டகன்றது. அதுமுதல் நரிகள் திராட்சை புளிக்கும் என அதனைச் சாப்பிடுவதில்லை.

ஆனால் இங்கு இந்த நரிக்கு பழம் புளித்தாலும் பரவாயில்லை. பசி தீர்ந்தால் போதும் என்றநிலை. நரிக்கு குலையைக் கவ்வ வசதியாக இருந்தது. குலையைக் கவ்வியது நரி. அந்த வேளை குலையிலிருந்த எறும்புகள் நரியின் முகத்தில் பாய்ந்து கடிக்கத் தொடங்கின.

உடனேநரி துள்ளிப்பாய்ந்து ஓடியது. ஓடும்போது 'திராட்சை புளிக்க மட்டும் செய்யாது. கடிக்கவும் செய்யும்' எனக் கத்தியது.

## கண்டு பிடிப்புக்களும் கண்டு பிடித்தவர்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | சலவை எந்திரம் | - | மில்டன் சிமித் |
| 2. | சறுக்கு விமானம் | - | இலிலி என்தல் |
| 3. | சீமெந்து | - | யோன் சிமெற்றன் |
| 4. | சூழல் துப்பாக்கி | - | கொல்ட் |
| 5. | தட்டச்சு | - | சோல்ஸ் |
| 6. | மின்சாரமணி | - | யோசப்ஹென்றி |
| 7. | மின்சார மோட்டார் | - | தெஸ்லா |
| 8. | மேட்டார் சைக்கிள் | - | இடைமிளர் |
| 9. | மைக்ரோ போன் | - | பேளினர் |
| 10. | வாயு விளக்கு | - | வில்லியம் மார்டக் |

ஆக்கம்: காந்திமதி சண்முகராசா

## புதிர்க்கணக்கு

ஒருவனிடம் மூன்று பனங்குலைகள் இருந்தன. அம்மூன்றிலும் தலா பத்துக்காய்கள் இருந்தன. இவை மூன்று குலைகளில் ஒன்றில் ஒருகண்நுங்குளும் மற்றையதில் இருகண் நுங்கும், மூன்றாவதில் மூன்று கண் நுங்குகளும் இருந்தன.

அவன் மூன்று குலைகளையும் மூன்று சிறுவர்களிடம் கொடுத்தான். ஒவ்வொருவரி

த. பவதாரணிடமும் பத்துப் பனங்காய்கள் இருக்கவேண்டும். அதேவேளை இருபதுகண்நுங்குகளும் இருத்தல் வேண்டும். அப்படியானால் ஒவ்வொருவரிடமும் இந்த மூன்று வகையிலும் எத்தனை காய்கள் இருத்தல் வேண்டும்?

விடை அடுத்த இதழில்

4-5-90 ஆம் திகதி இதழில் வெளியான புதிரின் விடை: 28 நாட்கள்.

## பறக்கும் பலூன் செய்வது எப்படி?

விளையாட்டுக்காக றப்பர் பலூன்களை ஊதுவீர்கள். ஊதிய பலூனை கட்டிவிட்டு காற்றில் பறக்குமாறு மேலே மேலே தட்டிவிடுவீர்கள். ஆனால் அது பறக்காது.

கீழேதான் விழும். ஆனால் நீங்கள் தட்டிவிடாமல் பலூன் பறப்பதற்கு நான் ஒரு ஆலோசனை தரவா.

ஒரு சோடாப் போத்தலை எடுங்கள். வெள்ளையடிக்கும் சுண்ணாம்பையும் எடுங்கள்.

சுண்ணாம்பை சோடாப் போத்திலினுள் போடுங்கள். போட்டுவிட்டீர்களா? சிகரெட் பெட்டியில் வரும் ஈயக்கடதாசிகள் இருக்கிறதல்லவா. அதனை சிறு சிறு துண்டுகளாக்கி உருட்டி விட்டு போத்தலினுள் போடுங்கள்.

இப்போது சுண்ணாம்பும், ஈயமும் போத்தலினுள் இருக்கிறது. இதற்குள் சுடுநீரை ஊற்றுங்கள்.

ஊற்றிய சிறிது நேரத்தில் புகைபோன்ற படலம் போத்தலின் வாயினூடாக வெளிவருவதை காணலாம். இதனைக்கண்டதும் பலூனை போத்தலின் வாயில் பொருத்துங்கள். பலூன் ஊதிப்பருக்கும். பலூன் முழுதும் ஊதியதும் அதனைக் கழற்றி கட்டுங்கள். பலூன் மேலே . மேலே பறக்க முயலும். இவ்வேளை கையை விடுங்கள் பலூன் மேலே... மேலே... மேலே செல்லும் திரும்ப உங்களிடம் வராது.

இந்த பலூனில் ஐதரசன் வாயு அகப்பட்டுள்ளமையால் அது பறக்கின்றது. காரணம் காற்றைவிட ஐதரசன் பாரங் குறைந்ததே ஆகும்.

இதுபோல இராட்சத பலூன்களை வெளிநாடுகளில் விதவிதமான வடிவில் செய்கிறார்கள். அதனுள் ஐதரசன் அல்லது அதேபோன்ற ஈலியம் வாயுவை நிரப்புகிறார்கள். அது பறக்க முயலும். அவ்வேளை ஒரு கூடையை அதனடியில் கட்டி விட்டு மனிதர்கள் ஏறுவார்கள்.

பலூன் உயரப்பறக்கும். மனிதர்களும் பறப்பார்கள். பூமியின் அழகை ரசிப்பார்கள்.

பலூன் மேலே போனால் கீழேவராது. மனிதர்கள் எப்படி கீழே வருவார்கள். பலூனிலுள் உள்ள காற்றைதிறந்து விட்டால் பலூன் கீழே இறங்கும்.

சரி நீங்களும் பறக்கும் பலூன்களை செய்யத்தொடங்குங்கள்.

---

இலங்கையில் கல்வி அறிவி

மலையக மக்கள் இன்றும் ஏமாற்றத்திற்கும் வஞ்சனைக்

சாதாரண மக்களுக்கு இலக்கியத்தை ரசிக்கும் தன்மை

வெளியிடப்பட்ட பதினான்கு புத்தகங்களில் மூன்று தமிழ்

யால் மலையகத்தில் இலக்கியத்துறையில் பலர் கால்

றால் இல்லை என்று தான் கூற வேண்டும்.

றன. இவைகள் தொடர்ந்து வெளிவருமானால் மலையக மக்களிடையே வாசிப்பு முயற்

[illegible] தல்கள், கிளாஸ்களே இங்கு புதிய பொருளாக ஆக்கப்படுகின்றது. கண்ணாடி செய்வதற்கு களிய மணல் தேவை என்று படித்திருப்பீர்கள். களிய மணல் கொண்டு கண்ணாடி தயாரிப்பதற்கு உயர்ந்த தொழில்நுட்பம்வேண்டும். ஆனால் இதனை அரசாங்கமே செய்கின்றது.

பழைய உடைந்த கண்ணாடிகளைக் கொண்டு புதியவை தயாரிக்கும் தொழிற்சாலையே இங்கே உள்ளது. இங்கு ஒரு பெரிய செங்கல் உவை. உள்ளது உள்ளே கடுமையாக நெருப்பு எரிந்து கொண்டிருக்கும். கிட்ட நெருங்க முடியாத வெப்பமாக இருக்கும். அதற்குள் உடைந்த கண்ணாடிகள் இடப்படும்.

இப்படி விரிந்த கண்ணாடிக் குமிழை வேண்டிய வடிவமுள்ள அச்சில் வைத்து இறுக்குவார்கள். அச்சின் வடிவை அந்தக் கண்ணாடிக் குமிழ் பெற்று விடும். இப்போது கண்ணாடிப் பொருள் தயாராகி விட்டது.

நீர்வேலித் தொழிற்சாலையில் விளக்குச் சிமினிகளை, கிளாஸ்களை தயாரிக்கின்றனர். நீங்கள் சுற்றுலா சென்றால் இந்தக் கண்ணாடித் தொழிற்சாலையை தவற விடாதீர்கள். □

டிருந்த நரியின் கண்ணில் திராட்சைக்குலை ஒன்று கண்ணில்பட்டது.



முன்னொருகாலத்தில் இந்த நரியின் பாட்டன் ஒருவன் திராட்சையை சாப்பிட புளிக்கும் என அதனைச் சாப்பிடுவதில்லை.

ஆனால் இங்கு இந்த நரிக்கு பழம் புளித்தாலும் பரவாயில்லை. பசி தீர்ந்தால் போதும் என்ற நிலை. நரிக்கு குலையைக் கவ்வ வசதியாக இருந்தது. குலையைக் கவ்வியது நரி. அந்த வேளை குலையிலிருந்த எறும்புகள் நரியின் முகத்தில் பாய்ந்து கடிக்கத் தொடங்கின.

உடனே நரி துள்ளிப்பாய்ந்து ஓடியது. ஓடும்போது 'திராட்சை புளிக்க மட்டும் செய்யாது. கடிக்கவும் செய்யும்' எனக் கத்தியது.

த. பவதாரணி

6. மின்சாரமணி - [illegible]
7. மின்சார மோட்டார் - தெஸ்லா
8. மேட்டார் சைக்கிள் - இடைமிளர்
9. மைக்ரோ போன் - பேளினர்
10. வாயு விளக்கு - வில்லியம் மார்டக்

ஆக்கம்: காந்திமதி சண்முகராசா

## புதிர்க்கணக்கு

ஒருவனிடம் மூன்று பனங் குலைகள் இருந்தன. அம்மூன்றிலும் தலா பத்துக்காய்கள் இருந்தன. இவை மூன்று குலைகளில் ஒன்றில் ஒருகண் நுங்குளும் மற்றையதில் இருகண் நுங்கும், மூன்றாவதில் மூன்று கண் நுங்குகளும் இருந்தன.

அவன் மூன்று குலைகளையும் மூன்று சிறுவர்களிடம் கொடுத்தான். ஒவ்வொருவரிடமும் பத்துப் பனங்காய்கள் இருக்கவேண்டும். அதேவேளை இருபது கண் நுங்குகளும் இருத்தல் வேண்டும். அப்படியானால் ஒவ்வொருவரிடமும் இந்த மூன்று வகையிலும் எத்தனை காய்கள் இருத்தல் வேண்டும்?

விடை அடுத்த இதழில்

4-5-90 ஆம் திகதி இதழில் வெளியான புதிரின் விடை: 28 நாட்கள்.

விதவிதமான வடிவில் செய்கிறார்கள். அதனுள் ஐதரசன் அல்லது அதேபோன்ற ஈலியம் வாயுவை நிரப்புகிறார்கள். அது பறக்க முயலும். அவ்வேளை ஒரு கூடையை அதனடியில் கட்டி விட்டு மனிதர்கள் ஏறுவார்கள்.

பலூன் உயரப்பறக்கும். மனிதர்களும் பறப்பார்கள். பூமியின் அழகை ரசிப்பார்கள்.

பலூன் மேலே போனால் கீழேவராது. மனிதர்கள் எப்படி கீழே வருவார்கள். பலூனிலுள் உள்ள காற்றைதிறந்து விட்டால் பலூன் கீழே இறங்கும்.

சரி நீங்களும் பறக்கும் பலூன்களை செய்யத்தொடங்குங்கள்.

---

# மலையகத்தில் வெளியீட்டு முயற்சிகள் நூல்களும் சஞ்சிகைகளும் மலையக மக்களின் வாசிப்பும் நாட்டமும் ஒரு கண்ணோட்டம்

**அந்தனி ஜீவா**
ஆசிரியர் ''கொழுந்து''

● கண்டியில் நடைபெற்ற மலையக நூலக அபிவிருத்திகருத்தரங்கில்வாசிக்கப்பட்டகட்டுரை

இலங்கையில் கல்வி அறிவிலும், கல்வி வாய்ப்பிலும் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் மலையக மக்கள். மலையக மக்களின் கல்லாமைக்கும் அரசியல், சமுதாய சூழ்நிலைக்கும்தொடர்புண்டு. உரிமைகள் பறிக்கப்பட்ட போது பாரா முகமாகவும், கொடுமைகள்இழைக்கப்பட்ட போது செயலற்றவர்களாகவும், இந்த மக்கள் எல்லாத் துறைகளிலும் ஒதுக்கப்பட்டவர்களாக அல்லல் படுபவர்கள் மலையக தொழிலாளர்கள். கல்வித்துறையில் தீண்டப்படாதவர்கள் இன்றும் கருதப்படுபவர்கள் மலையக மக்கள்

1830 ஆம் ஆண்டளவில் இலங்கையில் கோப்பித் தோட்டங்களிலும், தேயிலைத் தோட்டங்களிலும் தொழில் செய்வதற்காக கொண்டுவரப்பட்டவர்களுள் பெரும்பாலானோர் கல்வி அறிவற்றவர்களாகவே இருந்தனர். இதனால் இவர்களை எளிதில் ஏமாற்ற முடிந்தது. ஆகவே, இவர்களுக்கு கல்வி அறிவு ஊட்டுவது பற்றி எவரும் கவலைப்படவில்லை.

ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு கோப்பித் தோட்டத்தில் கோப்பி சேகரிப்பு நிலையத்திலிருந்து இரைச்சல் கேட்ட பொழுது தோட்டத்துரையும் அவருடன் இருந்த கிறிஸ்தவ பாதிரியாரும் சென்று பார்த்த பொழுது சில தொழிலாளர்கள் ஒன்று கூடி தமிழில் பைபிள் வாசிப்பதைக் கண்டார்களாம். அதன் பின்னரே தொழிலாளர் மத்தியில் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டு பிடிப்பின் காரணமாக ஆரம்பத்தில் சில கிறிஸ்தவ ஆரம்ப பள்ளிக்கூடங்களும் 1906ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஒற்றை ஆசிரியர் தோட்டப் பாடசாலைகளும் உருவாகின. என இர. சிவலிங்கம் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மலையக மக்கள் இன்றும் ஏமாற்றத்திற்கும் வஞ்சனைக்கும் ஆளானவர்களாகவும், வறுமையின் நிரந்தர தோழர்களாகவும் இருந்து வருகிறார்கள். இன்றைய மலையக மக்களிடையே 40 சதவீத மானவர்கள் முற்றாக கல்வி அறிவு இல்லாதவர்கள். அதாவது 10 இலட்சம் பேரில் 4 இலட்சம் பேருக்கு எழுதப் படிக்க தெரியாது,

கல்வி வசதிகளை பயன்படுத்தி பிற சமூகத்தவர்கள் அடைந்த பொருளாதாரசமூக நன்மைகளை இவர்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர் சமூகமாகவே கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மலையக மக்களின் கல்வி பின்னணியை தொட்டே இவர்களின் வெளியீட்டு முயற்சிகளைப் பார்க்க வேண்டும். 1930க்கு முன்மலை நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் பண வசதி மிக்க ஒரு தனிப்பட்ட வகுப்பைச் சேர்ந்தளர்களாகவே இருந்தனர். அரசாங்க பாடசாலைகளிலும் தங்கள் உயர் கல்வியை மேற்கொள்வதற்கான வசதி இவர்களுக்கு இருந்தன. எனவே இவர்கள் ஆங்கிலத்தையும் தமிழையும் கற்றபடியால் வெளி நாட்டு இயக்கங்களால் வெகுவாக உந்தப்பட்டனர்.

1930ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் தமிழில் மிகவும் சொற்பம். தமிழ் நாட்டிலிருந்து பிரபல சஞ்சிகைகளான லோகோபகாரி, அமிர்தகுறை போதினி, ஆனந்த போதினி, மகாவிகட தூதன், நவசக்தி, மொடர்ன் ரிவியூ ஆகிய சஞ்சிகைகள் மலைநாட்டில் பணம்படைத்த வீடுகளுக்கு வருவதுண்டு.

''மலை நாட்டில் உள்ளவர்கள் எழுத்தறிவில் குறைந்தவர்களாய் இருந்தவர்களுக்கு எழுத படிக்க வாய்ப்புக்களும், சாதாரண மக்களுக்கு இலக்கியத்தை ரசிக்கும் தன்மை இருக்கவே செய்தன என்று மக்கள் கவிமணி ஸி.வி. வேலுப்பிள்ளை தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகின்றார்.

மலையகத்தின் வெளியீட்டு முயற்சிகள் 1830க்குப் பின்னர் வெளிவர ஆரம்பித்தன. அதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் மலையக ஆக்க இலக்கியத்தின் முன்னோடியும் இலங்கையின் முதல் தமிழ் தினசரியின் ஆசிரியருமான கோ. நடேசய்யராவர். மகாகவி பாரதியாரின் பாடல்களை துண்டுப் பிரசுரங்களாக அச்சிட்டு மலையக மக்களிடையே பரப்பியது மட்டுமன்றி தனது துணைவியரான மீனாட்சி அம்மாள் மூலம் அந்த பாடல்களை மலையக மக்கள் மத்தியில் பாடவும் செய்தார்.

மலையக வெளியீட்டு முயற்சிகளுக்கு கோ. நடேசய்யரே முன்னோடி என்று குறிப்பிடலாம். '1931இல் அகில இலங்கை–இந்திய தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்' என்ற பெயரில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே இந்த மக்களை ஓர் அணியில் திரட்டி செயல்பட தூண்டிய முதல் தொழிற் சங்கமாகும். அது சமூகப் பணிகள் ஆற்றி மக்களின்பண்பாட்டைஉயர்த்துவதில் பெரும் பணி ஆற்றியது. அய்யர் பல பத்திரிகைகளை தோற்றுவித்தார். ஆங்லத்திலும் தமிழிலும் அவைகள் வெளியாகின. அவைகளில் குறிப்பிடத் தக்கவை தேசநேசன்-1921, தேசபக்தன்-1924 அவரால் எழுதி வெளியிடப்பட்ட பதினான்கு புத்தகங்களில் மூன்று தமிழ் புத்தகங்கள் அந்தர பிழைப்பு நாடகம், இலங்கை இந்திய ஒப்பந்தம், தொழிலாளர் சட்டப் புத்தம் ஆகிய முழுக்க முழுக்க மலை நாட்டு மக்கள் சம்பந்தப்பட்டவைகளாகும். இவ்வாறு மலையக எழுத்தாளரான சாரல் நாடன் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மலையகத்திலிருந்து ஐம்பதுகளுக்குப் பின்னர் தான் அந்த மக்களைப் பற்றிய சிறு சிறு பிரசுரங்கள் வெளிவர ஆரம்பித்தது. அந்த காலக் கட்டத்தில் இலங்கையின் தேசிய தினசரிகளில் ஒன்றான தினகரன் நாளிதழில் ஆசிரியராக திரு. கைலாசபதி இருந்த பொழுது மலையக படைப்புகளுக்கு களம் அமைத்தார். மலையகத்தின் மூத்த எழுத்தாளரான ஸி.வி.யின் படைப்புகள் தினகரனில் வெளிவர ஆரம்பித்தன. அவர் எழுதிய நடைச்சித்திரங்களும், வீடற்றவன், பார்வதி போன்ற நாவல்கள் மலையகத்தை படம் பிடித்து காட்டியது. மலையகத்திலும் எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை சி.வி.யின் எழுத்து முயற்சிகள் வெளிச்சம் போட்டு காட்டியது. கண்டியிலிருந்து க.ப. சிவம், ஈழக்குமார் ஆகியோர் வெளியிட்ட 'முத்தமிழ் முழக்கம்' என்ற சஞ்சிகை பின்னர் 'மலை முரசு' என்ற பெயரில் வந்தது. இதன் முயற்சியால் மலையகத்தில் இலக்கியத்துறையில் பலர் கால் பதித்தனர். 'மலை முரசு' சஞ்சிகையின் பணிபாராட்டுக்குரியது. இதனைத்தொடர்ந்து மலையகத்தில் பல சஞ்சிகைகள் வெளி வந்தன. மலையகத்திலிருந்து எழுதுபவர்களின் எழுத்துக்களை மலையகத்தில் வாசிக்கச் கூடியவர்கள் நம்மவர்களின் படைப்புக்கள் அச்சில் வெளிவருகின்றன என்ற அவாவுடன் அந்தஎழுத்துக்கள் நம்மைப் பற்றியே எழுதப்படுகின்றன என்ற காரணத்தால் ஆர்வத்துடன் வாசிக்கத்தொடங்கினார்கள். அத்துடன் மலையகத்தைச் சாராதவெளிப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களும் இந்த மக்களின் பின்னணியையும் அவர்களின் வாழ்வியல்புகளையும் அவதானிப்பதற்காக இதனை பெரும் விருப்பத்துடன் படிக்சத் தொடங்குகின்றார்கள்?

மலை நாட்டில் சஞ்சிகைகள் வெளி வந்தது குறைவு. மலையக இலக்கிய வளர்ச்சியைப் பற்றி ஆய்வு செய்ய வருபவர்களுக்கு மலையக எழுத்தாளர்களின் படைப்புகள் நூலுருவில் இல்லாதது அவர்கள் முயற்சிகளுக்கு பெரும் தடையாக அமைகின்றன. மலையக இலக்கிய வளர்ச்சிப் பற்றி ஆய்வாளர்களின் கருத்துப் படி அதிக இலக்கிய முயற்சிகள் 1930 இல் தான் தொடங்குகின்றன. ஓர் அறுபது ஆண்டு கால வரலாறு உண்டு. இந்த அறுபது ஆண்டு காலத்தில் அறுபது நூல்களாவது வெளி வந்திருக்குமா? என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும்.

அறுபதுகளுக்குப் பின்னர் மலையக இளைஞர்களிடையே ஓர் ஆர்வம் பிறந்து தமது மொழி, கலை, இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்டனர். 1956 க்கு பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ரீதியான மாற்றமும், அவர்களையும் பாதித்ததில் வியப்பில்லை. நாமும் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற உணர்வு ஏற்பட்டது. இளைஞர்களிடையே வாசிப்பு பழக்கமும், ஏனைய பிரதேசங்களில் நடைபெறும் வெளியீட்டு முயற்சிகள் பற்றிய அறிவும், ஏற்பட்டது. இந்த கால கட்டத்தில் தான் சி.வி.படைப்புகள், கதைக்கனிகள் மலைக் கொழுந்து, தூரத்துப் பச்சை குறிஞ்சிப் பூ முதலிய நூல்கள் வெளிவந்தன.

எழுபதுகளில் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள், பொருளாதார தாக்கம் என்பனவும், தோட்டத் தொளிலாளர்களிடையே மந்தபோசனை, மரண விகிதம் அதிகரிப்பு, அநாதைகளான நிலை, சிறுவர்கள் தொழில் முயற்சிக்காக வெளியிடங்களுற்கு கொண்டு செல்லப்பட்டது என்பன கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. வாசிப்பு நாட்டத்தையும் கனிசமான அளவு குறைத்தது. மீண்டும் எண்பதுகளின் ஆரம்பத்தில் நிலைமை சீரடைய தொடங்கியது. ஆனால் அறுபதுகளில் ஏற்பட்ட வேகம் எழுபதுகளில் தொடர்ந்திருக்குமானால் இன்று நாம் வெகு வேகமாக முன்னேறி இருப்போம்.

இன்று 'குன்றின் குரல்' 'கொந்தளிப்பு' 'கொழுந்து' 'தாக்கம்' 'ப்ரிய நிலா' போன்ற சஞ்சிகைகள் மலையக மக்களிடையே வாசிக்கும் பழக்கந்தை தூண்டி வருகின்றன. இவைகள் தொடர்ந்து வெளிவருமானால் மலையக மக்களிடையே வாசிப்பு முயற்சிகளுக்கு தூண்டு கோளாக அமையும்.

மலையக் மக்களின் வாசிப்பில் அக்கறை கொண்டு சமூக சேவை நிறுவனங்கள் நூல்களை வாங்கி விநியோகிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றன. மலையக தொழிற் சங்கங்கள், இயக்கங்கள், சமூக சேவை நிறுவனங்கள் கூட்டு முயற்சியாக தோட்டங்கள் தோறும் வாசிகசாலைகள், நூலகங்கள் உருவாக்கும் முயற்சியில் ஈடுபாடு காட்ட வேண்டும். மலையக பாடசாலைகள் அனைத்திலும் நூலகங்களை உருவாக்க வேண்டும். மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில் மலையகத்தில் ஏனைய பிரதேசங்களைப் போல நூல், சஞ்சிகைகள் வெளியிடும் முயற்சிகளில் அக்கறை காட்ட வேண்டும். நல்ல சஞ்சிகைகளை அவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டும்.

மலையக தொழிற் சங்கங்கள், இயக்கங்கள், சமூக நிறுவனங்கள் கூட்டு முயற்சியாக தோட்டங்கள் தோறும் வாசிகசாலைகள், நூலகங் கள் உருவாக்கும் முயற்சியில் ஈடு பாடு காட்ட வேண்டும். மலையக பாடசாலைகள் அனைத்திலும் நூலகங்களை உருவாக்க வேண்டும். மாணவர்களிடையே வாசிக்கும்ஆர்வத்தை தூண்டும் வகையில் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் நூல்கள் சஞ்சிகைகள் வெளியிடும் முயற்சிகளில் நாம் ஈடு பாடு காட்டுவதுடன் அவைகள் அந்த மக்களை சென்றடையும் வகையில் நாம் நூல்களை வாசிப்பதில் நாட்டம் கொள்ளச் செய்ய வேண்டும். □

சிறுகதை

# தாய்மையிலும்....

முற்றத்து நித்தியகல்யாணிச்செடி வெள்ளை வெள்ளையாய்.... ஏராளமாகப் பூத்துக்குலுங்கியது, அவளின் மனத்தைப் போல! பிஞ்சுப் பிள்ளையொன்று தன்பொக்கு வாய்திறந்து வெண்பற்கள் தெரியச் சிரிப்பது பொன்ற உணர்வில் அவள்மனம் மிதக்க .... அந்த இனிப்பான கற்பனையில் தன்னை மறந்து ஒன்றிப்போயிருந்தாள் கோமதி.

''இந்த வீட்டிலை அஞ்சு பேர் இருக்கிறியள்.... குடிக்கிறதுக்கு ஒருவாளி தண்ணி அள்ளிவைக்க ஒருத்தராலையும் ஏலாது.... சும்மா பூத்துச் சொரியிற பூக்கண்டுகளுக்கு மட்டும் அள்ளி அள்ளி ஊத்துங்கோ... '' எல்லாம் நான் விட்ட இடம்தான்....' அவளுடைய தாய் இரைந்துவிட்டு வாளியைத் தூக்கிக் கொண்டு கிணற்றடிக்குப் போகிறாள்.

இப்போதுதான் குளித்துவிட்டு ஈரம் சொட்டச் செட்ட வந்து கொண்டிருந்த அவளுடைய தங்கை பாமதி.. பூக்களையே இமைவெட்டாது பார்த்துக் கொண்டிருப்பவளைக் கண்டதும்... '' பூக்களைத் தான் பறிக்காதீங்க'' என்று குறும்பாகமுணுமுணுத்துக்கொண்டு உள்ளேபோனாள்.

''கேற்றுக்கு வெளியே யாரோ இரைந்து கதைப்பதும்... முன்வீட்டு நாய் மூச்சு விடாமற் குரைப்பதும் கோமதியின் காதில் விழ... ''கேற்'' றைத் திறந்து கொண்டு வெளியே பார்க்கிறாள்.

பலநாட்களாய் எண்ணை பூசப்படாத சுருண்ட பரட்டைத் தலைமயிர்... ஒல்லியாய்... உயர்ந்த கறுப்பு உருவத்துடன் ஒரு சிறுவன்... கறுப்புக் காற்சட்டை அவனுடைய இடுப்பை விடப்பெரிதாக இருந்ததால்... இழுத்துச் செருகியிருந்தான்... ஆகக் கூடியது இவனுக்கு ஏழு அல்லது எட்டு வயதிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டாள் கோமதி.

பௌர்ணமி தினமென்பதால் பள்ளிவிடுமுறையில் வீடுகளிலிருந்த சிறுவர்கள் சிலர் இவனைச் சூழ்ந்திருந்தார்கள். தன் நினைப்பின்றி பாட்டுப் பாடுவதும் ... ஆடுவதுமாக... சிரிப்பதும்... சிணுங்குவதுமாக... அவன் இவளைக்கண்டதும்... என்ன நினைத்தானோ... நின்றுவிட்டான்.

அவள் அவனைச் சூழ்ந்து நின்ற சிறுவர்களை விரட்டிவிட்டு அவனை உள்ளே அழைத்து வந்தாள்

''நீ ஏன் இப்படி றோட்டிலை டான்ஸ் ஆடுகிறாய்?...' என்று கேட்டாள்.

''எனக்குப் பைத்தியமக்கா... அதுதான்...'' என்றான்.

நான் சொல்லுறது பொய் யெண்டால் இதிலை தொட்டுப்பாருங்கோ...'' உச்சந் தலைமயிரை விலக்கிக் காட்டினான்... காய்ந்த வடுவாய் நாலைந்து இழைப் போட்ட, அடையாளம் தெரிந்தது... தெருவில் சிறுவர்களுடன் ஆடிப் பாட்டுப்படித்த அவனின் கண்கள் கலங்கித் தெரிந்தன.

''அப்ப உன்ரை அம்மா ஒண்டும் சொல்லுறேல்லையே?...'

''விசர்ப்பெடியன்...'' உன்னைவைச்சுச் சோறுபோடேலாது...' எண்டு அம்மா தான் துரத்தினவ. அந்த அம்மாவை எனக்கு பிடிக்காதக்கா... அம்மாவாலை தானே நான் இப்படி றோட்டிலை திரியிறன் ...'

'நீவீட்டைபோ றேல்லையே?

''பகல் முழுக்கத் திரிஞ்சு சாப்பிட்டுப் போட்டு... படுக்கிறதுக்கு வீட்டைதான்போறனான் அக்கா...'

'நீ இப்ப சாப்பிட்டிட்டியா?...'

'இல்லை' என்று தலையை ஆட்டினான்.

'சாப்பிடப்போறியா?...'

'ஓம்...' அவன் புளுகத் தோடுவயிற்றைத் தடவினான்.

'உள்ளை வந்திரு' அந்தச் சிறுவனை இருத்திவிட்டு உள்ளே வருகிறாள் கோமதி. மனதுக்குள் வேதனை கவ்விப் பிடித்துக் கொள்கிறது.

இவனைப்போலை எத்தினை சின்னஞ்சிறுசுகள் சரியான பராமரிப்பின்றிச் சீரழிந்து கொண்டிருக்குதுகள்... பெற்றவர்களாலையு..ம் மற்றவர்களாலையும் புறக்கணிக்கப்பட்டு... பிஞ்சுவயதிலேயே நெஞ்சுக்குள் கவலைகளை வளர்த்துக் கொண்டு அநாதரவாய்த் திரிகிறார்கள்...' அவளுக்குத் துக்கம் முட்டி அழுகைவரும்போல இருந்தது'

அவளுடைய தாய் கிணற்றடியில் குளித்துக்கொண்டிருக்கிறாள். வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும்... தடல்புடலாக விரதஏற்பாடுகள்... வீட்டிலிருந்த பாத்திரங்கள் பாய்... தலகணி... பெட்டி... சுளகு... கடகம் என்று எல்லாவற்றையுமே கழுவிக் காயவிட்டிருக்கிறாள் அம்மா. 'முதலில் மனதைச் சுத்தமாக்கிக் கொள்ளவேணும்... அதுதான் விரதத்துக்கு அடிப்படை, கோமதி தனக்குள்ளாக நினைத்துக் கொள்கிறாள்.

கோயிலில் திருவிழா நடக்

அவனிடம் அவனைப்பற்றி நிறைய அறிந்துகொள்ள வேண்டும் போல இருந்தாலும்... ஆழமாக அவனை விசாரிப்பதன் மூலம் அவன் மனதைப் புண்ணாக்கி விடக் கூடாது என்று நினைத்துக் கொள்கிறாள் கோமதி.

'கோமதீ... கோமதீ... உந்த வெள்ளைப் பூவிலை நாலைஞ்சு பிடுங்கி அர்ச்சனைத்தட்டிலை வை.வாறன்... நேரம் போட்டுது...' சொல்லிக் கொண்டு வந்த அவள் தாய்-சாப்பாடு தின்றுகொண்டிருக்கும் சிறுவனைப் பார்க்கிறாள்... அவள் கண்களில் கொஞ்சம் கோபத்தின் பிரதிபலிப்பு...

'நான் இப்பதான் எல்லாம் கூட்டிக் கழுவிச் சுத்தமாக்கிப் போட்டிருக்கிறன்... நீ ஊர்...

விட்டு... காசைப் பெற்றுக் கொண்ட சிறுவன் முன் கடையை நோக்கி ஓடுகிறான்... அவன் போவதை பார்த்துக் கொண்டு நிற்கும் கோமதியை பார்த்து தாய் கத்துகிறாள்.

'உன்னிலை இருக்கிற ஒரு கெட்ட பழக்கம்... உந்த றோட்டிலை போற குழந்தை குஞ்சுகளையெல்லாம் கூட்டி வைச்சுக் கொண்டு கும்மாளம் கொட்டுறது... இந்த நாளையிலை ஒருதற்றை பிள்ளையளையும் நம்பேலாது... விசர்... வறுமை... அனாதை எண்டு நடிச்சு நடிச்சு... களவெல்லே எடுக்கத்திரியுதுகள்... உதுகளிலைஇரக்கம் கொண்டு நீயும் உருகி வழியிறாய்...'

கோமதிக்கு... பெற்றதாயே என்றாலும்... இப்படிச்சொல்வது கோபத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்துகிறது.... ஆனாலும்... தன் கோபத்தை விழுங்கிக் கொண்டு...

தெரியாது... நீ தான் பெரிய மேதை எண்ட நினைப்பு உனக்கு... இந்த உலகத்திலை நாப்பத்தைஞ்சு வருசம் வாழ்ந்து... எத்தினை விதமான மனுஷரையும்... அனுபவங்களையும் கண்டாச்சு... ம்...' மூச்சை இழுத்துவிட்டபடியே அம்மா அர்ச்சனைத் தட்டில் பழம், பாக்கு, வெற்றிலை, சில்லறைக்காசு எல்லாம் எடுத்து வைக்கிறாள் கடவுகளுக்காக... இவள் தாயையே பார்க்கிறாள்...

'என்ரை பிள்ளையைக் கண்ணாலை பாத்து ஆறு வருஷமாகுது... எப்பதான் காணப்போறேனோ...எங்கை இருந்தாலும்... என்ரை பிள்ளை... ஒரு கஷ்டம் துன்பம் இல்லாமல் இருக்க வேணும்... அதுதான் நான் இப்படிக் கோயில் கோயிலா ஏறி இறங்கிறன்...' ஆறுவரு



பேர் தெரியாததுகளை உள்ளை விட்டிட்டாய்...' முணுமுணுத்துக்கொண்டு வீட்டுக்குள் போகிறாள். நல்ல வேளை... சாப்பிடுவதிலேயே குறியாயிருந்த சிறுவனுக்கு... தாய் சொன்னது புரியவில்லை... புரிந்திருந்தால் அவன் மனம் என்னபாடு படும்?...

'தம்பி... உனக்கு என்ன

'அம்மா... கண்ணை மூடிக் கொண்டு, மற்றவையின்ரை மனம் பொசுங்கிப் போற மாதிரிக் கதையாதேங்கோ... எங்கடை சமுதாயத்திலை இப்படி எத்தனையோ சின்னஞ்சிறுசுகள் ஊனமாப் போய் .. அனதையாப் போயிருக்குதுகள்... போதிய அன்பும்... அரவணைப்புமில்லா

டங்களுக்கு முன்னால்...

இராணுவம் வீடு வீடாக நுழைந்து . இளைஞர்களைக் கைதுசெய்து துன்புறுத்திக் கொண்டிருந்த சமயம்...கெடுபிடிகளுக்கஞ்சி.... அந்நிய நாட்டுக்கு அரசியல் தஞ்சம்கோரிச் சென்ற அவளுடைய அண்ணனை நினைத்துக் கண்கலங்

# பாரதச்சுவடுகள்



(15)

- பாப்பாணன்

ஆடி இரண்டான எண்பத்து ஏழிலே
ஆகாயம் பிளந்து வந்தது போல்
வேடிக்கை காட்டியே ஈழத்து வானிலே
வந்தன விரைந்து ஊர்திகளே

வானம் பிளந்தது போல முழங்கியே
வந்தன காண்மிராஜ் ஊர்திகளே
தானம் வழங்கிட தமிழர் களித்திட
தாங்கியும் வந்தன வேறுசில

கழுகுப் போர்முறை கையாண்டு வந்தன
காட்டின வித்தைகள் வானத்திலே
விழுதது என்பது போல இறங்கின
விரைந்தன விண்ணிலே அம்புபோல

சிங்களச் சிப்பாய்க்கு சிறுநீர் கழிந்தது
சீருடையோடு இந்த ஜாலம் கண்டு
எங்களைக் கொன்றிடத்தான் இவன் முதலி
இங்கே அனுப்பினான் என்றழுதார்

கூவிப்பறந்தன குத்தெனப் பாய்ந்தன
குட்டிக் கரணங்கள் போட்டனவே
தாவிப் பறந்தனர் தமிழர் புரிந்திலர்
தவித்துக் குழிகளுள் பதுங்கினரே

வந்தது இந்திய வானஊர்தி பொதி
வழங்கிட என்பதை பின்னறிந்து
சந்தோஷம் மேலிடக் கண்ணீர் விட்டார் தமிழ்
சாதி பிழைத்தது என்றுரைத்தார்

அண்ணார்ந்து பார்த்திட ஆகாய ஊர்தியை
ஆங்கு விழுந்தன வான்பொதிகள்
கண்ணாரக் கண்டதும் களிப்பொடு ஆடினர்
கவலை மறந்தனர் கையசைத்தார்

'பாரசூட்'டின் வழிப் பண்டங்கள் வீழ்ந்திட
பாய்ந்து ஓடிச் சென்றுதான் பொறுக்கி
பாரத நாட்டினைப் பாசத்தோடெண்ணியே
பாட்டிசைத்தார் பாராட்டிசைத்தார்

வண்ண வண்ணப் பொதிவகையான உண்டிகள்
வருத்தம் தணித்திடும் மருந்துவகை
வெண்ணெய்க் கட்டியுடன் வெங்காயம் பருப்பு
வேறுபல பொருள் வீசிச் சென்றார்

முந்திய நாளதில் மோது கடலதில்
முழங்கிய சூரர்கள் வாய் புதைத்தார்
இந்திய ஊர்திகள் வந்து போகும்வரை
இடிந்து நொறுங்கியே ஏங்கி நின்றார்

வந்தவர் போனபின் வானத்தில் இருந்து
வட்டமிட்டுப் பொதி போட்டுச்செல்ல
தந்தவர் சென்றது என்ன வென்றறிய
தங்கள் ஹெலிகளில் வட்டமிட்டார்

பொம்பரும் போயிற்று சீப்பிளேன் போயிற்று
பொடியள்புகழ் மேலும் ஓங்கிச் செல்ல

இவனுக்கு ஏழு அல லது எட்டு வயதிருக்கலாம் என்று நினைத்துக் கொண் டாள் கோமதி.

பௌர்ணமி தினமென்ப தால் பள்ளிவிடுமுறையில் வீடு களிலிருந்த சிறுவர்கள் சிலர் இவனைச் சூழ்ந்திருந்தார்கள். தன் நினைப்பின்றி பாட்டுப் பாடுவதும்... ஆடுவதுமாக... சிரிப்பதும்... சிணுங்குவது மாக... அவன் இவளைக்கண் டதும்... என்ன நினைத்தா னோ... நின்றுவிட்டான்.

அவள் அவனைச் சூழ்ந்து நின்ற சிறுவர்களை விரட்டி விட்டு அவனை உள்ளே அழைத்து வந்தாள்.

''நீ ஏன் இப்படி றோட் டிலை டான்ஸ் ஆடுறாய்?...'' என்று கேட்டாள்.

''எனக்குப் பைத்திய மக்கா... அதுதான்...'' என் றான்.

''உனக்கு பைத்திய மெண்டு ஆர் சொன்னது?...''

''அம்மாவும்... பள்ளிக்குட வாத்தியாரும்...''

''உனக்கு ஏன் பைத்தியம் வந்தது?...''

''நாங்கள் அகதியளாக் கோயிலுக்கை இருந்தனாங் கள்... அப்ப கோயிலுக்கு மேலை ஷெல் விழுந்து... மர மெல்லாம் முறிஞ்சு...கனபேர் செத்தவை... எனக்கு மர மொண்டு தலையிலை விழுந்து மண்டை உடைஞ்சது... அப்ப துவக்கம் வலி வாறது... பள் ளிக்குடத்துக்குப் போனால் அங்கை படிச்சுக் கொண்டி ருக்கேக்குள்ளை வலி வந்தி டும்... வாத்தியார் இனிமேல் பள்ளிக்கு வரவேண்டாம்... போய் மருந்து எடு எண்டு கலைச்சுப்போட்டார்...'' என் னோடை ஒருத்தரும் விளை யாட வாறேல்லை அக்கா... கல்லாலை எறிவாங்கள்...

வர்களாலையும் புறக்கணிக் கப்பட்டு... பிஞ்சுவயதிலேயே நெஞ்சுக்குள் கவலைகளை வளர்த்துக் கொண்டு அநாத ரவாய்த் திரிகிறார்கள்...'' அவ ளுக்குத் துக்கம் முட்டி அழு கைவரும்போல இருந்தது.

அவளுடைய தாய் கிணற் றடியில் குளித்துக்கொண்டிருக் கிறாள். வெள்ளிக்கிழமையும் பௌர்ணமியும்... தடல்புட லாக விரதஏற்பாடுகள்... வீட்டிலிருந்த பாத்திரங்கள் பாய்... தலகணி... பெட்டி... சுளகு... கடகம் என்று எல்லாவற்றையுமே கழுவிக் காயவிட்டிருக்கிறாள் அம்மா. 'முதலில் மனதைச் சுத்தமாக்கிக் கொள்ளவே ணும்... அதுதான் விரதத் துக்கு அடிப்படை, கோமதி தனக்குள்ளாக நினைத்துக் கொள்கிறாள்.

கோயிலில் திருவிழா நடக் கிறது. ஆரம்ப பூசைக்காக முதல்மணி அடிக்கிறது. இன்னமும் அரை மணிநேரத் தில் பூசை மணிகேட்கும்.

''கோமதீ... கோமதீ...'' உடுத்தசட்டையை ஒருக்கால் எடுத்துக் கொண்டு வா பிள் ளை... மறந்துபோனன்...' அவளுடைய அம்மா பரபரக் கிறாள்.

ஒருசிறுவன் பசியுடன் காத் திருக்கிறான் என்கிற உணர் வில் சுறுசுறுப்பாக அம்மா வுக்குச் சட்டையைக் கொடுத் துவிட்டு வருகிறாள்.

குசினிக்குள் நுழைந்து...... அவனுக்குச் சாப்பாடு எடுத்து வருகிறாள். தனக்கு உணவு வருவதைக் கண்டதும்... அந் தச் சிறுவனின் முகம் மழை மேகம் கண்ட மயிலின் தோகையாய் விரிகிறது. அவ னுக்குத் தண்ணீரும் எடுத்து வந்து பக்கத்தில் வைத்து விட்டு அமர்கிறாள்.



பேர் தெரியாததுகளை உள்ளை விட்டிட்டாய்...' முணுமுணுத்துக்கொண்டு வீட் டுக்குள் போகிறாள். நல்ல வேளை... சாப்பிடுவதிலேயே குறியாயிருந்த சிறுவனுக்கு... தாய் சொன்னது புரிய வில்லை... புரிந்திருந்தால் அவன் மனம் என்னபாடு படும்?...

'தம்பி... உனக்கு என்ன வேணும்?...' கோமதி சிறுவ னிடம் கேட்கிறாள். சாப்பிட்டு முடிந்த விரல்களை நக்கிய சிறுவன்... 'அக்கா, எனக்கு ஒரு வலூன் வேண்டித்தாறி யளே... இப்பிடிப் பெரிசாய் ஊதி... நூலிலை கட்டி... உய ரத்திலை பறக்கவிடப்போ றன்...' அவன் தன் இருகை களையும் விரித்து விழிகளை மலர்த்தும் போது அவனுக் குள் ஏராளமான சந்தோஷ அலைகள்...

அவன் கைகழுவிக் கொண் டதும்... 'இந்தா... உந்த முன் கடையிலை வலூன் கிடக் குது... வாங்கிக்கொண்டுவா... ஊதித்தாறன்...' அவள் அவ னிடம் காசை நீட்டினாள்... கழுவிய ஈரக்கையைத் தன் காற்சட்டையிற் துடைத்து

'அம்மா... கண்ணை மூடிக் கொண்டு, மற்றவையின்ரை மனம் பொசுங்கிப் போற மாதிரிக் கதையாதேங்கோ... எங்கடை சமுதாயத்திலை இப்படி எத்தனையோ சின் னஞ்சிறுசுகள் ஊனமாப் போய்.. அனதையாப் போயி ருக்குதுகள்... போதிய அன் பும்... அரவணைப்புமில்லா மல்... வயிற்றுச் சோற்றுக்கே கஷ்டப்பட்டுக்கொண்டு... திரி யிற பிள்ளையளிலை நாங்கள் எங்களாலை முடிஞ்சளவு அக் கறை காட்டவேணும்... நாளைக்கு அமையப் போற சமுதாயத்துக்கு இவையள் நல்லமாதிரியாக வளர்க்கப் படவேணும்...இனிமேல் தயவு செய்து... இந்தப் பிஞ்சுக ளைக் கண்ட வார்த்தைகளா லும்குத்திக்குதறாதேங்கோ... உங்களாலை அரவணைக்க முடியாவிட்டாலும்...இம்சைப் படுத்தாமலாவதுஇருங்கோ..' அம்மாவுக்குச் சொல்கிறாள்.

'ஏதோ எங்களுக்கு ஒண்டும் டங்களுக்கு முன்னால்...

இராணுவம் வீடு வீடாக நுழைந்து. இளைஞர்களைக் கைதுசெய்து துன்புறுத்திக் கொண்டிருந்த சமயம்...கெடு பிடிகளுக்கஞ்சி.... அந்நிய நாட் டுக்கு அரசியல் தஞ்சம்கோரிச் சென்ற அவளுடைய அண் ணனை நினைத்துக் கண்கலங் கியபடியே தாய் வெளியே செல்கிறாள்.

'பிறர்பிள்ளை தலைதடவத் தன்பிள்ளை தானாய் வளரும் என்பார்களே... நீங்கள் தலை யைத் தடவ வேண்டாம்.... வார்த்தை அம்புகளாலை குத்திக் குதறாமலாவது இருக் கத் தெரியாத அம்மாவுக்குக் கூட. பிள்ளைப் பாசம் இருக் கிறதே...' என்று நினைக்க கோமதிக்கு ஆச்சரியமாக இருந்தது மட்டுமல்ல... 'தன் னைப்போலத்தானே...இந்தக் சிறுவர்களையும் ஒருதாய் சுமந்து பெற்றிருப்பாள் ' என்று எண்ணாத.... எண்ணிப் பார்க்கமுனையாத தன் தாய் மீது ஆத்திரமும் ஏற்பட்டது அவளுக்கு. □

## ஆதிலட்சுமி இராசையா

கண்ணாரக் கண்டதும் களிப்பொடு ஆடினர்
கவலை மறந்தனர் கையசைத்தார்

'பாரசூட்'டின் வழிப் பண்டங்கள் வீழ்ந்திட
பாய்ந்து ஓடிச் சென்றுதான் பொறுக்கி
பாரத நாட்டினைப் பாசத்தோடெண்ணியே
பாட்டிசைத்தார் பாராட்டிசைத்தார்

வண்ண வண்ணப் பொதிவகையான உண்டிகள்
வருத்தம் தணித்திடும் மருந்துவகை
வெண்ணெய்க் கட்டியுடன் வெங்காயம் பருப்பு
வேறுபல பொருள் வீசிச் சென்றார்

முந்திய நாளதில் மோது கடலதில்
முழங்கிய சூரர்கள் வாய் புதைத்தார்
இந்திய ஊர்திகள் வந்து போகும்வரை
இடிந்து நொறுங்கியே ஏங்கி நின்றார்

வந்தவர் போனபின் வானத்தில் இருந்து
வட்டமிட்டுப் பொதி போட்டுச்செல்ல
தந்தவர் சென்றது என்ன வென்றறிய
தங்கள் ஹெலிகளில் வட்டமிட்டார்

ஏொம்பரும் போயிற்று சீப்பிளேன் போயிற்று
பொடியள்புகழ் மேலும் ஓங்கிச் செல்ல
தம்பட்டம் அடித்த தானைகள் அஞ்சின
தாக்குதல் சேட்டையும் தணிந்தன காண்

ஒப்பறேஷன்பூ மாலை எனும் பேரில்
ஊர்திகள் வந்து பின் சென்றதனால்
ஒப்பறேஷன்லிப றேஷன் புரிந்தவர்
உதறலெடுத்திட உளறி நின்றார்

அந்நிய நாட்டினுள் அத்துமீறி வந்தார்
ஆத்திர மூட்டிடும செய்கையிது
இந்நிலை நீடிக்கின் இந்திய ஆதிக்கம்
இங்கு நிலைத்திடும் என்றுணர்ந்தார்

கத்திக் கத்தி எங்கும் கண்டனக் கூட்டங்கள்
கட்டுக் கடங்காத காட்டுக் கூச்சல்
பித்துப் பிடித்தவர் போலப் பிதற்றினர்
பெரும் பான்மை இனத்துச் சிங்களவர்

வண்ணத் தொலைக்காட்சி வானொலிப் பேச்சுகள்
வார்த்தைக்கு வார்த்தையாம் கண்டனங்கள்
எண்ணத்தலைப் பட்டான் சின்னப்புத்தி ஜே. ஆர்.
எப்படித் தன்னிலை காப்பதென்று?

– தொடரும்

### ராக்கிங் மெடிக்கல் ஸ்ரைல்

கொழும்பு மருத்துவக் கல் லூரியில் இது நடந்தது.

புதிதாக வந்தவர்கள்பழைய மாணவர்களால் ராக்கிங்செய் யப்பட்டனர்.

மாணவிகளில் ஒருத்தி-தலை நகர்க் கல்லூரி ஒன்றில் படித் தவள். அவளை ஒரு பழைய மாணவன் அழைத்தான்.

நடுங்கியபடி அவள் அவன் முன்சென்றாள்.

இதோ நான்கு சொக்லேட் எடு என்றான்.

எடுத்தாள்.

பிரேத அறைக்குப் போ. அங்கே நான்கு பிரேதங்கள் உள்ளன. ஒவ்வொன்றின் வாயிலும் ஒன்றுவைத்துவிட்டு வா. நீ திரும்பி வந்ததும்நாங் கள் போய்ப் பார்ப்போம். சரி போய் வா என்றான்.

படபடத்த இதயத்தை தைரி யப்படுத்திக் கொண்டு அவள் பிரேத அறையை நோக்கி நடந்தாள். தனக்கு தரப்பட்ட றாக்கிங் சுகமானது என எண் ணிக் கொண்டாள். ஒவ்வொரு பிரேதத்தின் வாயிலும் ஒவ் வொரு சொக்லேட் வைத்துக் கொண்டு போனாள். நாலும் வைத்தாயிற்று. அடுத்தாற் போல் இன்னொன்று கிடப்பது போல் தெரிந்தது. அவள் கடமை முடிந்தது. அறையை விட்டு வெளியேறினாள். அவ் வேளை நங்கி...என்றொரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தாள். அவள் நெஞ்சு படக் படக் என்றது. அந்த ஐந்தாவது 'பிரேதம்' எழுந்து இருந்துகொண்டு, என்ன தங் கச்சி எனக்கு சொக்லேட் இல்லையா? என்று கேட்டது.

அவள் சத்தமிட்டபடி வெளியே ஓடினாள். வெளியே கூடி நின்ற பழைய மாண வர்களின் சிரிப்பொ லியின் மத்தியில்போய் விழுந் தாள்.

ஐந்தாவது பிரேதமாகக் கிடந்தவன் அவள் பின்னால் வந்து நின்றான். □

### றவுண்ட் அப்

அமெரிக்க சுதந்திரப் போர்க்காலத்தில் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்திருந்த ஐரிஸ்காரன் ஒருவன், ஆங்கில இராணுவத்தினர் சிலர் வட்ட மாக ஒரிடத்தில் அமர்ந்து விஸ்கி போத்தல்களு டன் மெய்மறந்து பொழுது போக்குவதைப் பார்த்தான். அவர்களின் அருகில் கிடந்த துப்பாக்கிகளை எடுத் துச் சேர்த்துக் கொண்டு ஐரிஸ் படை வீரன் தன் துப் பாக்கியை அவர்கள் முன்நீட்டி அவர்களை நடத்திக்கொண்டு, அமெரிக்க படை முகாமுக்குச் சென்றான். இச் செய்தி இரா ணுவஜெனரல்ஜோர்ஜ் வாஷிங் டனுக்கு எட்டியது. அவன் ஐரிஸ் வீரனையும் எட்டுக் கைதிகளையும்வரவழைத்தான். சொல்லு, நீ எப்படி இந்த எட் டுப் பேரையும் தனியனாகச்



சிறைப் பிடித்தாய் என்று கேட்டான் ஜெனரல்.

ஐரிஸ்காரன் சொன்னான்-

'ஜெனரல்...நான்இவர்களை றவுண்ட்அப்செய்து பிடித்தேன்' □

பெரும்பான்மை என்பதன் அர்த்தம் சில வேளைகளில் எல்லா மடையர்களும் ஒரே பக்கத்தில் என்பதே. □

### தேரோ குடும்பம்

சிறீலங்காவிலிருந்துசென்ற ஐந்து புத்த குருமார் ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கி னார்கள். குடிவரவு அதிகாரிகள் அவர்களின் பாஸ்போட்களைப் பரிசோதித்தனர்.

நல்லது நீங்கள் ஐந்து பேரும் ஒரு குடும்பத்திலிருந்து வருகிறீர்களா? என்று கேட் டார் அதிகாரி ஒருவர்.

திகைப்படைந்த குரு ஒரு வர், இல்லை...இல்லை.... அப் படியில்லை என்றார்.

ஆச்சரியத்துடன் அதிகாரி கேட்டார்-

''அப்படியென்றால் நீங்கள் எல்லோரும் தேரோ என்ற ஒரே குடும்பப் பெயரை வைத் திருப்பது எப்படி?' □

ராஜ்...எத்தனை தடவைகள் சொல்லி விட்டேன் குசினிக் குள் நின்று விளையாட வேண் டாம் என்று'

'பதினாறு தடவைகள் அம்மா.'

### நிபந்தனைகள்

'நாம் திருமணம் செய்து கொண்டபின் நீங்கள் புகைத் தலை விட்டுவிடுவீர்களா?

'சரி'

தொகுப்பு
**எஸ். பி. கே.**

'குடிப் பழக்கத்தையும் விட்டு விடுவீர்களா?'

'சரி'

'மாலை வேளைகளில் கிளப் பிற்குப் போவதை நிறுத்திவிட முடியுமா?

'சரி'

'அன்பே வேறு எதை விட்டு விட யோசிக்கிறீர்கள்?'

திருமணம் செய்யும் எண் ணத்தை.' □

### சமயோசிதம்

பேராசிரியர் ஒருவர் வகுப்பை அமைதிப்படுத்த முடி யாதபோது கோபமுற்றவராக தன் மாணவரைப் பார்த்து, பண்டைக் கிரேக்க நாகரீகம் பற்றி இரண்டாயிரம் சொற்க ளுக்குக் குறையாமல் ஒரு கட் டுரை எழுதி நாளைக்குக்காட்ட வேண்டும் என்றார்.

ஒரு புத்திசாலி மாணவன், பண்டைக் கிரேக்கம் பற்றிய புத்தகம் ஒன்றின் இரண்டு பக் கங்களைப் படம் பிடித்து அத் துடன் ஒருகுறிப்பும் இணைத்து பேராசிரியரிடம் கொடுத்தான். அக்குறிப்பில்-

'ஒரு படம் ஆயிரம் சொற்க ளுக்குச் சமன் என்பது முது மொழி. இங்கே இரண்டு உள் ளன.' என எழுதப்பட்டிருந் தது.

அதுக்கு 100 புள்ளிகள் கிடைத்தன. □

மகளிர் பகுதி




# தமிழீழப் பெண்களின் தேசிய எழுச்சியும் பெண் விடுதலையும் ●●●

தமிழீழத்தேசியவிடுதலைப் போராட்டக் களத்தில் பெண்களின் பங்களிப்பானது அண்மைக் காலங்களில் முனைப்படைந்து வருகின்றது. தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தமது முழுப்பங்களிப்பும் அவசியமானதென்பதைத் தமிழீழப் பெண்கள் உணரத்தலைப்பட்டுள்ளனர். இத்தேசிய விடுதலைப்போராட்டக் களத்தினூடாகப் பெண் விடுதலையையும் வென்றெடுப்பதற்கான அடிப்படைச் சமூகமாற்றங்களை ஏற்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதி பூண்டுள்ளனர்.

தமிழீழத்தில் பெண்கள் எதிர்நோக்கிவந்துள்ள அடக்கு முறைகள் எண்ணிலடங்காதவை. அரச, அந்நிய அடக்குமுறைகள் ஒருபுறமும், எமது சமூகத்தினுள்ளே காணப்படும் பிற்போக்குவாத சமூக அடக்கு முறைகள் மறுபுறமாக இருதுருவ அடக்குமுறை அழுத்தங்களால் தமிழீழப் பெண்ணினம் காலாகாலமாக நசுக்கப்பட்டு வந்திருக்கிறது.

## அரச பயங்கரவாதமும் அந்நிய ஆதிக்கமும்

தமிழீழப்பிரதேசம் கடந்த சில நூற்றாண்டுகளாகஅடக்கு முறைகளை காலனித்துவம், நவகாலனித்துவம், இன ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம், இராணுவ ரீதியிலான அந்நியத் தலையீடு எனப் பல வடிவங்களிற் சந்தித்து வந்திருக்கிறது. மாறி மாறித் தமிழீழத்தை ஆக்கிரமித்த அந்நிய ஆதிக்கங்கள் திட்டமிட்ட ரீதியில் எம்மை அடக்கியொடுக்கி வந்துள்ளன. இந்தவகையில் தமிழீழ மக்கள் தொகையின் அரைப் பங்கிற்கு மேலான பெண்கள் கல்வி, பொருளாதார, அரசியல் ரீதியிலமைந்த அடக்குமுறைகளால் பாதிக்கப்பட்டு வந்துள்ளனர். படிப்படியாக அரச பயங்கரவாதமானது திட்டமிட்ட இன அழிப்பு முயற்சிகளாகவும், நிலப்பறிப்பு முயற்சிகளாகவும் விரிவடைந்தது. 1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட இன அழிப்புக்களாலும், தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியமையாலும் எமது பெண்கள் மிகவும் பாதிப்புற்றனர். இதைத் தொடர்ந்து தமிழர் பாரம்பரியத் தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளும் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. இக்கோர நிகழ்வுகளின் போது தமிழீழப் பெண்ணினம் கண்ட பலாத்காரங்களும், கொலைகளும் எண்ணிலடங்காதவை. பலாத்காரமானது பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளெல்லாவற்றினதும் உச்சவடிவமாகும். இவை மட்டுமன்றி, அகதிகளாகிப்பெண்கள் பட்டு வருகின்ற அவலங்களும் நாமறியாதவையல்ல. ஸ்ரீலங்காவின் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் மலையகத் தமிழ்ப் பெண்கள் எங்குமில்லாதவாறு மிகக் கேவலமாக ஒடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கல்வியிற் பின் தங்கியவர்களாக ஆண்களை விடக் குறைந்த ஊதியத்துடன் கடுமையான உடலுழைப்பைத் தரவேண்டியஇயந்திரங்களாக அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர்.

## சமூக ஒடுக்கு முறைகள்

எமது சமூகத்தினுள் விரவியுள்ள பிற்போக்குவாத, பசுமைவாத அடக்குமுறைகள் பல வடிவங்களில் அமைந்துள்ளன. சீதனக் கொடுமை தொட்டு சாதியக் கொடுமை வரை பெண்ணினம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆண் மேலாதிக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களாக, சமூக அழுத்தங்கள் காரணமாகக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புத் துறைகளில் ஒரு குறித்த வரம்பிற்குட்படுத்தப்பட்டவர்களாக, தமிழ் சமூகத்தைப் பொதுவாகப் பாதித்துவரும் சாதியமைப்புகளால் பிளவுபடுத்தப்பட்டவர்களாக, தோட்டங்களிலும் வயல்களிலும் ஆண்களை விடக் குறைந்த கூலிக்கு கடுமையான உடலுழைப்பை நல்க வேண்டியவர்களாக அடக்குமுறைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சீதனக் கொடுமையின் கொடூரங்களுக்கு எமது பெண்கள் இரையாகி வருகின்றனர். இவை தவிர, கலாசாரத்தினது பெயராலும் பெண்கள் மீது சமூக அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டு வருகின்றது.

*பெண்விடுதலை குறித்த கருத்துக்கள் மேற்தட்டுவர்க்கப் பெண்களிடையே மட்டும் கருத்தளவிற் காணப்பட்டன. இவை செயல் வடிவம் பெறாதவையாகவே இருந்து வந்தன. ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கப் பெண்களையும் இணைத்ததாக எதுவும் இருக்கவில்லை. நாட்டில் பரந்துபட்ட ரீதியில் இவ்வெண்ணக் கருவூலத்துடன் சகல ஆண்களையும், பெண்களையும் இணைக்க முடியவில்லை.*

இவ்வாறாக, இரு துருவ அழுத்தங்களால் நசுக்கப்பட்டுள்ள பெண்ணினம் அவ்வப்போது இவற்றிற்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தான் என்ன என்பதை நோக்குவோம்.

அரச ஒடுக்கு முறையின் கொடூர வடிவங்களான இன அழிப்பு, நில ஆக்கிரமிப்பு, மொழியுரிமைப்பறிப்பு ஆகியவற்றுக்கெதிரான மென்முறைப்போராட்டங்கள்மேற்கொள்ளப்பட்ட காலங்களில் பெண்கள் பரவலாகப் பங்களித்தனர். ஆனால் இம்மென்முறைப் போராட்டங்களுக்கெதிராகக் கொடிய வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு இறுதியில் அரசஒடுக்குமுறையானது முழுமையான இராணுவ வடிவம் பெற்ற போது தமிழ் மக்கள் மென்முறைப் போராட்டங்களில் நம்பிக்கையிழக்கத் தொடங்கினர்.

மறுபுறத்தில், சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களும் இருக்கத்தான் செய்தனர். பெண் விடுதலை குறித்து கருத்துக்கள் மேற்தட்டுவர்க்கப் பெண்களிடையே மட்டும் கருத்தளவிற் காணப்பட்டன. இவை செயல் வடிவம் பெறாதவையாகவே இருந்துவந்தன. ஒடுக்கப்பட்ட தொழிலாள வர்க்கப் பெண்களையும் இணைத்தாக எதுவும் இருக்கவில்லை. நாட்டில் பரந்துபட்ட ரீதியில் இவ்வெண்ணக் கருவூலத்துடன் சகல ஆண்களையும், பெண்களையும் இணைக்க முடியவில்லை. சமூக அமைப்பின் பிரிவுகளை ஊடறுத்து பெண்களை ஒன்றிணைக்கவியலாத தன்மை காணப்பட்டது. சுருங்கக் கூறின், பெண் விடுதலை என்பது ஒட்டுமொத்தமாக வெறும் போலிக் கற்பனாவாதமாகவே வளர்ந்து வந்தது. அடக்குமுறைகளின் பல்வேறு பரிமாணங்களினால் சிக்குண்டு கிடந்த பெண்களுக்கு கற்பனாவாதக் கொள்கைகளினால் எந்த வகையிலும் உளவியல்மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. ஆண்வர்க்கமானது பெண்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் அடக்குமுறையின் கொடூரங்களைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும் ஆண்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய இந்த உளவியல் மாற்றத்தையும் வெறும் கற்பனாவாதக் கொள்கைகளினாற் சாதிக்க இயலவில்லை. இவை மட்டுமன்றி இக்கருத்துக்களை வெளியிட்டவர்களே நடைமுறையில் அவற்றைப் பின்பற்றாத நிலையானது பெண் விடுதலையைக் கொச்சைப் படுத்துவதாக அமைந்தது.

இந்த நிலையில் பெண்விடுதலைக்கான ஆரம்பம் செயன்முறை வடிவில் உருப்பெற வேண்டியது நியதியாகின்றது. செயல்வடிவில் உருப்பெறும் நடவடிக்கைகளினாலேயே பெண்விடுதலைக்கான பாதையில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்த இயலும்.

## பெண் விடுதலைக்கான பாதையில் முதலிற் செய்யப்பட வேண்டியது தான் என்ன?

பெண்களுக்கு விடுதலை அவசியம் என்பதை அனைவருமே ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் பெண்கள் மீதான அடக்குமுறை தொடர்வதற்கான காரணம் தான் என்ன என ஆராயப்புகின், சமூகத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலார் மத்தியிலும் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை உளவியல் மாற்றம் ஏற்படுத்தப்படாதமையே இதற்கான காரணம் என்பதை உணரமுடியும். செயன்முறைவடிவத்திலமையாத கருத்துக்களாலும், கற்பனாவாத கொள்கைகளாலும் இதற்கு உளவியல்மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் போனதை முன்கண்டோம். செயன்முறை ரீதியிலான நடவடிக்கைகளாற் தான் உளநிலையின் அடித்தளத்தையே புரட்சிகரமாகமாற்றியமைக்க முடியும். முழுச்சமூகமும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சினை ஒன்றைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் ஆண்களோடு பெண்களும் தம்மை முழுமையாக ஈடுபடுத்துவதன் மூலம் தமது ஆற்றலையும், சமூகத்தில்மறைக்கப்பட்டு வந்துள்ள தமது முக்கியத்துவத்தையும் நிலை நிறுத்தமுடியும்; தமது சக்தியைச் சமூகத்திற்குப் புரிய வைக்க முடியும்; பெண்களிடையே தன்னம்பிக்கையைப் பெருக்கவும் இது துணைபுரியும். இவை மட்டுமன்றி ஆண்களிடையே தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்துள்ள உளவியல் ரீதியிலான தனித்தன்மையை (ஆண் மேலாதிக்கத்திற்குக் காரணமான அடிப்படைக் காரணியை) மாற்றியமைக்க முடியும் பழமைவாதிகளின் மூடக் கொள்கைகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்துவிடமுடியும். தமிழீழத்தின் முழுச் சமூகமும் தேசிய விடுதலையை வேண்டி நிற்கின்றது. தேசிய விடுதலைப் போராட்டக்களமானது அனைவரதும் பங்களிப்பை வேண்டி நிற்கின்றது. எனவே இச்சந்தர்ப்பத்தில் பெண்கள் தம்மையும் தேசிய விடுதலைப் போராட்டக் களத்தில் இணைத்துக் கொள்வது அவசியமானது மட்டுமன்றி பெண் விடுதலைக்கான போராட்டப் பாதையில் முதலிற் செய்யப்பட வேண்டியதுமாகும். இவ்வாறு தேசிய விடுதலைப் போராட்டக்களத்தில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டதன் மூலம் தேசிய விடுதலையை வென்றெடுத்ததுடன் தமக்கெதிரான சமூக அடக்குமுறைகளையும் தகர்த்து, பெண்விடுதலையைக் கணிசமான அளவு வென்றெடுத்து விட்டநாடுகளின் வரலாறுகளும் இந்த வரலாற்று உண்மையைப் பகருகின்றன.

*எமது சமூகத்தினுள் விரவியுள்ள பிற்போக்குவாத, பழமைவாத அடக்குமுறைகள் பல வடிவங்களில் அமைந்துள்ளன. சீதனக்கொடுமை தொட்டு சாதியக் கொடுமை வரை பெண்ணினம் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டு வந்திருக்கிறது.*

## பெண்களின் முழுமையான விடுதலைக்கு அத்தியாவசியமாக ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள்

1) பெண்கள் மத்தியிலும் ஆண்கள் மத்தியிலும் உள நிலைகளில் மாற்றம்.

2) பழமைமரபுவாதக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தல்.

3) பெண்ணினம் பொருளாதாரக் காரணிகளில் பிறரைச் சார்ந்திருத்தலை மாற்றியமைத்தல்.

பெண்கள் தேசியவிடுதலைப் போராட்டத்தில் பங்கேற்பதன் மூலம் சாதிக்கப்படக் கூடியவை.

1) நாட்டின் தேசிய விடுதலையை வென்றெடுத்தல்.

2) பெண்களிடையே தமது ஆற்றல் குறித்த தன்னம்பிக்கையைப் பெருக்குவதுடன் சமூக அமைப்பின் காரணமாகப் பிளந்துபட்டுக் கிடக்கும் பெண்களை ஒருமுகப்படுத்தி அவர்களிடையிற் புரிந்துணர்வினை ஏற்படுத்தல்.

3) பெண்களின் ஆற்றலை அவர்களின் செயற்பாடுகள் மூலம் சமூகத்திற்கு உணர்த்துவதால் பழமைவாதிகள் மரபுக் கொள்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தலும், ஆண்

தொடரும்

நன்றி: சுதந்திர தாகம்

---

“ஈழத்துத் தமிழர் கலைகளுள் ஒன்றாகிய நாடகக் கலை பற்றி விரிவாகவும் ஆராய்ச்சி நெறியுடனும் இதுவரை எவரும் நூல்வடிவிலே எழுதவில்லை. அக்குறையை நீக்கு முகமாகத் திரு. க. சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல் வெளிவருகின்

பட்டம் பெற்றார். 1952 ஆம் ஆண்டில் முதன் முதலில் பதுளை- ஊவாக் கல்லூரியிலே ஆசிரியராக கடமையேற்று, கல்வி கற்பிக்கத் தொடங்கினார். தனது விடா முயற்சியினாலும் கல்வியிலிருந்த ஆர்வம் காரணமாகவும் வெளிவாரியாக 1968 ஆம் ஆண்டு கலை மாணிப் பட்டத்தையும் 1975 ஆம் ஆண்டு

புதுமைக்கும் இடையே ஓர் பாலம் அமைத்தவர் என்றால் மிகையாகாது.

சொக்கனைத் தெரியாதவர்கள் ஈழத்தில் எவரும் இல்லை என்றே கூறிவிடலாம். இந்த அளவுக்கு இவரது பெயர் ஈழத்தின் எல்லாப்பகுதிகளும் பிரபல்யம் அடைந்துள்ளது சொக்கனை நாம் ஓர் நடமாடும் கலைக்களஞ்சியமாக

தமிழ்ப் பேராசிரியர் வி. செல்வநாயகம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைஞர் சொக்கனது நாடகங்கள் பல அக்காலத்திலே வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. இப்பத்திரிகையில் புனிதவதி, கவிஞன் பரிசு, பரீட்சைப் பிஷாசு, கவிஞன் பலியாகியது, ஆகிய நாடகங்கள் பிரசுரிக்கப்பட்டன. கலைஞர்




கட்டுரையினைச் சமர்ப்பித்மதை குறிப்பிடத்தக்கது.

கலைஞர் சொக்கன் அவர்களது பணிகளை நாம் முன்னர் குறிப்பிட்டவாறு கல்விப் பணி, சமயப்பணி, சமூகப் பணி என்று மூன்று பிரதான அம்சங்களுள், சொக்கன் அவர்கள் கல்விப் பணியில் பிரதான இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சொக்கன் அவர்கள் ஈழத்தில் உள்ள பல்வேறு சமய, சமூகப் பொது ஸ்தாபனங்கள், சபை

நவகாலனித்துவம், இன ஒடுக்குமுறை, அரச பயங்கர வாதம், இராணுவ ரீதியிலான அந்நியத் தலையீடு எனப் பல வடிவங்களிற் சந்தித்து வந்திருக்கிறது. மாறி மாறித் தமிழீழத்தை ஆக்கிரமித்த அந்நிய ஆதிக்கங்கள் திட்டமிட்ட ரீதியில் எம்மை அடக்கியொடுக்கி வந்துள்ளன. இந்தவகையில் தமிழீழ மக்கள் தொகையின் அரைப் பங்கிற்கு மேலான பெண்கள் கல்வி, பொருளாதார, அர

லாதவாறு மிகக் கேவலமாக ஒடுக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கல்வியிற் பின் தங்கியவர்களாக ஆண்களை விடக் குறைந்த ஊதியத்துடன் கடுமையான உடலுழைப்பைத் தரவேண்டியஇயந்திரங்களாக அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளனர்.

### சமூக ஒடுக்கு முறைகள்

எமது சமூகத்தினுள் விரவியுள்ள பிற்போக்குவாத, பசுமைவாத அடக்குமுறைகள் பல வடிவங்களில் அமைந்துள்

இவ்வாறாக, இரு துருவ அழுத்தங்களால் நசுக்கப்பட்டுள்ள பெண்ணினம் அவ்வப்போது இவற்றிற்கெதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தான் என்ன என்பதை நோக்குவோம்.

அரச ஒடுக்கு முறையின் கொடூர வடிவங்களான இன அழிப்பு, நில ஆக்கிரமிப்பு, மொழியுரிமைப்பறிப்பு ஆகியவற்றுக்கெதிரான மென்

வும் இருக்கவில்லை. நாட்டில் பரந்துபட்ட ரீதியில் இவ் வெண்ணக் கருவூலத்துடன் சகல ஆண்களையும், பெண்களையும் இணைக்க முடியவில்லை. சமூக அமைப்பின் பிரிவுகளை ஊடறுத்து பெண்களை ஒன்றிணைக்கவியலாத தன்மை காணப்பட்டது. சுருங்கக் கூறின், பெண் விடுதலை என்பது ஒட்டுமொத்தமாக வெறும் போலிக் கற்

அவசியம் என்பதை அனைவருமே ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் பெண்கள் மீதான அடக்குமுறை தொடர்வதற்கான காரணம் தான் என்ன என ஆராயப் புகின், சமூகத்தில் ஆண், பெண் ஆகிய இருபாலார் மத்தியிலும் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை உளவியல் மாற்றம் ஏற்படுத்தப்படாதமையே இதற்கான காரணம் என்பதை உணரமுடியும். செயன்முறைவடிவத்திலமையாத

போராட்டக்களமானது அனைவரதும் பங்களிப்பை வேண்டி நிற்கின்றது. எனவே இச்சந்தர்ப்பத்தில் பெண்கள் தம்மையும் தேசிய விடுதலைப் போராட்டக் களத்தில் இணைத்துக் கொள்வது அவசியமானது மட்டுமன்றி பெண் விடுதலைக்கான போராட்டப் பாதையில் முதலிற் செய்யப்பட வேண்டியதுமாகும். இவ்வாறு தேசிய விடுதலைப் போராட்டக்களத்தில் தம்மை

கும் பெண்களை ஒருமுகப்படுத்தி அவர்களிடையிற் புரிந்துணர்வினை ஏற்படுத்தல்.

3) பெண்களின் ஆற்றலை அவர்களின் செயற்பாடுகள் மூலம் சமூகத்திற்கு உணர்த்துவதால் பழமைவாதிகள் மரபுக் கொள்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தலும், ஆண்

தொடரும்

நன்றி: சுதந்திர தாகம்

---




# மணி விழாக்கண்ட கலைஞர் சொக்கன்

**வண்ணை ப.கணேசலிங்கம் B. A (Hons)**

"ஈழத்துத் தமிழர் கலைகளுள் ஒன்றாகிய நாடகக் கலை பற்றி விரிவாகவும் ஆராய்ச்சி நெறியுடனும் இதுவரை எவரும் நூல்வடிவிலே எழுதவில்லை. அக்குறையை நீக்கு முகமாகத் திரு. க. சொக்கலிங்கம் அவர்களின் இந்நூல் வெளிவருகின்றது. அந்தவகையிலே இந்நூலுக்கு ஒரு சிறப்புண்டு. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் முதுகலை மாணிப்பட்டத்திற்காகத் தமிழ் மொழி மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளில், இதுவே முதன்முறையாக நூல் வடிவு பெறுகின்றது. இது இந்நூலுக்கு இன்னொரு சிறப்பாகும்''

என சொக்கன் அவர்களின் ''ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி' என்ற நூலின் அணிந்துரையில் முன்னாள் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர். கலாநிதி. சு.வித்தியானந்தன் குறிப்பிட்டுள்ளார்.

வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள் சிறந்த நாடக ஆசிரியராகவும் நடிகராகவும் சிறுகதை ஆசிரியராகவும், நாவல் ஆசிரியராகவும் கவிஞராகவும் கட்டுரையாளராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், பாடநூலாசிரியராகவும், பேச்சாளராகவும் விரிவுரையாளராகவும் தமிழர் மரபு நெறியாளராகவும், பொதுப்பணியாளராகவும், கல்விப்பணியாளராகவும், போன்ற இன்னோரன்ன துறைகளிலும் நன்கு பாண்டித்தியம் பெற்ற ஓர் பல் துறைக்கலைஞராக மிளிர்கின்றார்.

சொக்கன் அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையிலும், வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும் கற்றார். யாழ். ஸ்ரான்லிக்கல்லூரியிலே (கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில்) ஆங்கில மொழியினை நன்கு கற்றுத் தேறினார். இவர் 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1951 ஆம் ஆண்டு காலம் வரை பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலே பயிற்சி பெற்றார். 1953 ஆம் ஆண்டு தொடக்கம் 1955ஆம் ஆண்டுவரை இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் தமிழ் டிப்பிளோமாப் பட்டம் பெற்றார். 1952 ஆம் ஆண்டில் முதன் முதலில் பதுளை- ஊவாக் கல்லூரியிலே ஆசிரியராக கடமையேற்று, கல்வி கற்பிக்கத் தொடங்கினார். தனது விடா முயற்சியினாலும் கல்வியிலிருந்த ஆர்வம் காரணமாகவும் வெளிவாரியாக 1968 ஆம் ஆண்டு கலை மாணிப் பட்டத்தையும் 1975 ஆம் ஆண்டு முதுகலை மாணிப்பட்டத்தையும் பெற்றார். தமிழ் மொழியில் வித்துவான் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

ஆசிரியர் சொக்கன் அவர்கள் ஆசிரியராகவும் அதிபராகவும், தற்காலிகமாக பலாலி கோப்பாய் பயிற்சிக் கல்லூரிகளிலே தமிழ், இந்துசமய விரிவுரையாளராகவும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது தற்பொழுது கோண்டாவில் கொத்தணி அதிபராக இருந்து (01-06-1990) அன்று ஓய்வு பெற்றார்.



சொக்கன் அவர்கள் மொத்தமாக முப்பத்தேழு இலக்கியங்களை படைத்த, ஆக்க இலக்கிய கர்த்தாவாக விளங்குகின்றார்.

சொக்கனது வரலாறானது ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றிலும், ஈழத்து கலை இலக்கிய வரலாற்றிலும், ஈழத்து சமய இலக்கிய வரலாற்றிலும் ஈழத்து சிறுகதை, நாவல் இலக்கிய வரலாற்றிலும் முக்கியமான ஓர் இடத்தினைப் பெற்றுவிட்டது என்றால் அது மிகையாகாது. சொக்கனது பணிகளை நாம் கல்விப்பணி சமயப்பணி, சமூகப்பணி என்ற மூன்று கோணங்களில் நோக்கலாம்.

தமிழிலக்கிய உலகிலே சொக்கனவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஓர் பாலம் அமைத்தவர் என்றால் மிகையாகாது.

சொக்கனைத் தெரியாதவர்கள் ஈழத்தில் எவரும் இல்லை என்றே கூறிவிடலாம். இந்த அளவுக்கு இவரது பெயர் ஈழத்தின் எல்லாப்பகுதிகளும் பிரபல்யம் அடைந்துள்ளது சொக்கனை நாம் ஓர் நடமாடும் கலைக்களஞ்சியமாக விளங்குகின்றார். எனக் கூறலாம்.

சொக்கன் அவர்கள் சிறந்த நாடகக் கலைஞராக விளங்குகின்றார். தனது பத்துவயதிலே சிறு பாத்திரம் ஏற்று நடிக்கத் தொடங்கினார். தமது ''ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி', என்ற நூலின் முகவுரையிலே' பத்து வயதிலே சிறிய பாத்திரமொன்றினை ஏற்று நடிகனாய் நாடகத்தோடு தொடர்புகொண்ட நான் காலப்போக்கில் நாடகாசிரியனாக, நெறியாளனாக, போட்டிநடுவனாக நாடக விமர்சகனாக, அந்தக்கலையின் பலதுறைகளிலும் ஈடுபட்டுபெற்ற அனுபவமே இவ்வாய்விலே ஈடுபட என்னைத் தூண்டிற்று 'எனகுறிப்பிட்டமை மனங் கொள்ளத்தக்கவை.

வித்துவான் க. சொக்கன் அவர்கள் 1948 ஆம் ஆண்டு யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் ஆங்கிலம் கற்கின்ற காலத்தில், சுத்தானந்த பாரதியார் எழுதிய ஏழைபடும்பாடும் (பிரெஞ்சு நாவலின் மொழிபெயர்ப்பு) என்ற கதையினை வாசித்த உணர்வினாலே, அக்கதையைச் சுருக்கி, நாடகமாக எழுதியதோடு, சகமாணவர்களும் தானும் சேர்ந்து நடிந்ததோடு, அந்நாடகத்தை நெறியாக்கம் செய்தமை குறிப்பிடத்தக்கது. 1948 ஆம் ஆண்டில் ஆசிரியரது முதலாவது வானொலி நாடகமான ''கவிஞன்பலி'' என்ற நாடகம் வானொலியில் முதன் முதலில் ஒலிபரப்பப்பட்டது. அக்காலத்தில் இலங்கை வானொலி நாடகத் தெரிவுக் குழுவில் ஓர் ஆங்கத்தவராக தமிழ்ப் பேராசிரியர் வி. செல்வநாயகம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

கலைஞர் சொக்கனது நாடகங்கள் பல அக்காலத்திலே வெளிவந்த ஈழகேசரிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டன. இப்பத்திரிகையில் புனிதவதி, கவிஞன் பரிசு, பரீட்சைப் பிஷாசு, கவிஞன் பலியாகியது, ஆகிய நாடகங்கள் பிரசுரிக்கப்பட்டன. கலைஞர் சொக்கன் அவர்கள் நாடகத் துறையிலே மேன்மேலும் சிறப்புற்று விளங்குவதற்கு காரணங்கள் பல இருந்தன. ஹற்றன் சென் ஜோன் பொஸ்கோ கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றும் பொழுது, அங்குள்ள தமிழ் மன்றத்தினுடைய போசகராக கடமையாற்றும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. இதனால் இக்கல்லூரியிலே தயாரிக்கப்படுகின்ற நாடகங்களின் பொறுப்பாசிரியராகவும், நாடகங்களை நெறிப்படுத்துபவராகவும் கடமையாற்றினார். பல நாடகங்களை கல்லூரி மாணவர்களைக் கொண்டு தயாரித்து நடித்து, பலரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

சொக்கன் அவர்களது நாடகங்கள் பல அகில இலங்கை ரீதியில் பரிசுகளைப் பெற்றமை சிறப்பம்சமாகும். 1960-1961 ஆண்டுகளில் இலங்கை கலைக்கழக நாடகக் குழு நடாத்திய நாடகப் பிரதிப் போட்டியிலே ''சிலம்பு பிறந்தது''சிங்ககிரிகாவலன்' என்ற இரு நாடகங்களும் தொடர்ந்து இரு ஆண்டுகளும் பரிசுகள் பெற்றுள்ளன.

சொக்கன் அவர்கள் 1963 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரை யாழ். இந்துக் கல்லூரியிலே ஆசிரியராகக் கடமையாற்றுகின்ற காலப்பகுதியிலே, இங்கு கல்வி கற்கின்ற மாணவர்களை நாடகத் துறையிலே வழி நடத்தினார். 1968 ஆம் ஆண்டு சொக்கன் பழக்கிய ''ஞானக் கவிஞன் '' என்ற நாடகம் கலைக்கழக நாடகக் குழு பாடசாலைகளுக்கிடையே நடாத்திய போட்டியில் பரிசு பெற்றமை குறிப்பிடத் தக்கது. 1972 ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ் தினப் போட்டியையொட்டி, திருக்கோணமலையில் நடந்த நாடகப் போட்டியில், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களுடைய ''கவுரி வீசி காவலன்'' என்ற நாடகம் அகில இலங்கை ரீதியிலே பரிசு பெற்றதோடு, அனைவரது பாராட்டினையும் பெற்றது இந்த நாடகத்தை சொக்கன் அவர்களே எழுதி நெறியாக்கம் செய்துள்ளார்.

சொக்கனது ''இரட்டை வேஷம்''என்ற நாடகம் 1961 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தினரது தமிழ்ச் சங்கத் தமிழ் விழாவில் மேடையேற்றப்பட்டது. இந் நாடகத்தை பேராசிரியர் கா. சிவத்தம்பி நெறியாக்கம் செய்தார். இந்நாடகத்திலே கவிஞர் இ. முருகையனது தம்பியார் திரு. இ. சிவானந்தன் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார். யாழ். மாநகர சபை மண்டபத்தில் நந்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட புத்தக வெளியீட்டுக் கழகத்தினரால் '' சிங்கை கிரிச் காவலன் '' என்ற நாடகம் இரண்டு தடவைகள் மேடை ஏற்றப்பட்டு ,அனைவரது பாராட்டினைப் பெற்றது. 1968 ஆம் ஆண்டு அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம், சொக்கன் எழுதிய ''தெய்வப் பாவை'' என்ற நாடகத்தை, இவரது மாணவர்களைக் கொண்டே மேடையேற்றியது. 1974 ஆம் ஆண்டு ''தெய்வப்பாவை'' என்ற நாடகத்தினை அகில இலங்கை சேக்கிழார் மன்ற நிதியுதவிக்காக, யாழ். வீரசிங்கம் மண்டபத்திலே அரங்கேற்றப் பட்டது. இந்த நாடகத்தினை பிரபல நாடகக் கலைஞர் எஸ்.ரி அரசு அவர்கள் நெறியாக்கம் செய்தார்.

1976 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 ஆம் ஆண்டு வரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலே கலைஞர் சொக்கன் அவர்கள் விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்ற காலங்களிலே பல நாடகங்களை தயாரித்து மேடையேற்றினார். இக்கலாசாலையிலே வருடந்தோறும் நடைபெறுகின்ற தமிழ்த் தின விழாவில் இவரது நாடகங்கள் மேடையேற்றப்படுவது குறிப்பிடத்தக்க ஓரம்சமாகும். நாட்டியவுலகிலே முதன்மை பெற்று விளங்குகின்ற நாட்டிய மேதை வேலானந்தன் அவர்களுக்கு பல நாட்டிய நாடகங்களை எழுதிக் கொடுத்து மேடையேற்றியுள்ளார். உதாரணங்களாக ''சீதாபகரணம்'' கர்ணன்'' என்ற நாட்டிய நாடகங்களைக் குறிப்பிடலாம். சொக்கன் அவர்கள் சிறுவயது முதல் ஆசிரியர், விரிவுரையாளர், அதிபர் என்ற பல்வேறு நிலைகளிலும் கடமையாற்றுகின்ற பொழுது, நாடகத்துறையிலே மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கியமையினால், தனது முதுகலை மாணிப்பட்டத்துக்கு ''ஈழத்துத் தமிழ் நாடக இலக்கிய வளர்ச்சி'' என்ற தலைப்பிலே இலங்கைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்மதை குறிப்பிடத்தக்கது.

கலைஞர் சொக்கன் அவர்களது பணிகளை நாம் முன்னர் குறிப்பிட்டவாறு கல்விப் பணி, சமயப்பணி, சமூகப் பணி என்று மூன்று பிரதான அம்சங்களுள், சொக்கன் அவர்கள் கல்விப் பணியில் பிரதான இடத்தை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சொக்கன் அவர்கள் ஈழத்தில் உள்ள பல்வேறு சமய, சமூகப் பொது ஸ்தாபனங்கள், சபைகள், மன்றங்கள், கழகங்கள், வெளியீட்டுத் திணைக்களங்கள் ஆகியவற்றிலே பிரதானமான பங்கேற்று, அன்று தொட்டு இன்று வரை ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற நாவுக்கரசரின் வாக்கு இணங்கச் செயற்க்கிபட்டு வருகின்றார்.

ஈழத்து நாடகங்களின் வரலாறு, பண்புகள் ஆகியன பற்றிக் காலத்துக்குக் காலம் பலர் கட்டுரைகள் வரைந்துள்ளனர். இவ்வாறான உதிரிக் கட்டுரைகள் ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றினை முழுமையாக எமக்கு அளிப்பதாய் இல்லை. அவற்றிலே கூறப்பட்டுள்ள கருத்துக்களை அநுசரித்துக் கொண்டு பண்டைய ஈழத் தமிழர் நாட்டுக் கூத்துக்கள் தொடக்கம் 1977 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாண வளாகத்தில் மேடையேற்றப் பட்ட மகாகவியின் ''புதியதொரு வீடு ''என்னும் நாடகம் வரையிலான ஈழத்துத் தமிழ் நாடக வரலாற்றை முழுமையாக அளித்துள்ள சொக்கனுக்குத் தமிழுலகம் பொதுவாகவும் நாடகக் கலையுலகம் சிறப்பாகவும் கடமைப் பட்டுள்ளன. மணி விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் கலைஞர் சொக்கனது நாடகங்களின் ஆக்க முயற்சிகள் பற்றி இங்கு சிந்தித்திருப்பது சாலவும் பொருத்தமான ஒன்றாகும்.

☐ நந்தியாவட்டைக்குக் கண்வியாதியைத் தடுக்கும் சக்தி உண்டு. கண்களில் வியாதி வரும்போது இந்தப் பூவைப் பயன்படுத்தினால் குணம் தெரியும்.

ஆய்வு



# தமிழீழத்தின் தேசிய வளங்களும் பொருளாதார மேம்படுத்தலும்-2

சென்றவாரத் தொடர்ச்சி

5) சில காலப்பகுதியில் மிதமாகக் கிடைக்கும் காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி போன்ற உணவுப் பொருட்களை அவை அரிதாகக் கிடைக்கும் காலப்பகுதியில் உபயோகிக்கக் கூடிய முறையில் பதப்படுத்தப்பட்டன.

மேலே குறிப்பிட்டவை ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்ட அம்சங்களிற் சிலவாகும். தவிர, எரிபொருளுக்கு மாற்றாக அற்ககோலைக் கொண்டு இயங்கக் கூடிய சுழல் நீர்ப்பம்புகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நீண்டகாலப் பொருளாதாரத் திட்டம்

சுதந்திர தமிழீழத்தின் விவசாய, தொழிற்துறைகளைச் செம்மையாக விருத்தி செய்து, சுய பூர்த்தியுள்ள பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்த நாடாகத் தமிழீழத்தைக் கட்டியெழுப்பும் நோக்கோடு, நீண்டகால அடிப்படையில் எமது நிரந்தர வளங்களைப் பயன்படுத்துவதையும், அபிவிருத்தி செய்வதையும் அடிப்படையாகக் கொண்டதே இத்திட்டமாகும்.

இத்திட்டத்தின் அம்சங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:-

அ) கடல்வளம்

உலகிலேயே பலவகையான மீன் இனங்கள் உள்ள பிராந்தியமாக தென்கிழக்காசியப் பிராந்தியம் விளங்குகின்றது. ஆனால் கைத்தொழில் நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன, விஞ்ஞான தொழில்நுட்பமுறைகளின் பற்றாக்குறைவால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வளம் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.

திருக்கோவில்-மட்டக்களப்பு-திருகோணமலை-முல்லைத்தீவு-யாழ்ப்பாணம்-மன்னார்-காரைதீவு வரையான சுமார் 600 கி.மீட்டர் நீளமான கடற்பிராந்தியத்தைக் கொண்ட தமிழீழம் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கும், மீன்வளர்ப்புத்திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஏற்றதாகும்.

இக்கடற் பிராந்தியங்களுக்கு அண்மையில் பல ஆறுகளும் ஓடுவதால் பெரிய அள

குறைந்தது 60,000 குடும்பங்கள் இக் கரையோரங்களிற் குடியமர்த்தப்பட்டு, குறைந்தது 3,35,000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க முடியுமெனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இவற்றைத் தவிர பதனிடல், விற்பனை, ஏற்றுமதி ஆகியவற்றின் மூலமும் மேலும் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

சிங்கறால் இன மீன்வளர்ப்புத் திட்டத்திற்கு ஏற்றதாக இன்று மேலைத்தேய நாடுகள் செயற்கை முறையில் கடல்நீரைச் சூடாக்குகின்றன. ஆனால் எமது கடற் பிராந்தியத்தைச் சுற்றியுள்ள நீரின் வெப்பநிலை சிங்கறால் இன உற்பத்திக்கு ஏற்றதாயுள்ளது. எனவே இத்திட்டம் இங்கு ஊக்குவிக்கப்படும் வாய்ப்புகளும் உள்ளன.

ஆ) பனைவளம்

எமது மண்ணில் இன்று 20 இலட்சத்திற்குமேல் பனைகள் காணப்படுகின்றன. பனையிலிருந்து பெறப்படும் ஒடியலானது அரிசி, மா, கிழங்கு என்பவற்றை விடக் கூடிய அளவில் காபோவைதரேற்றைக் கொண்டது. ஒரு கிராம் ஒடியலிலிருந்து 3.58 கிலோக் கலோரி சக்தி பெறப்படலாம். கோதுமை மாவின் இறக்குமதியைக் குறைத்து ஒடியலின் பாவனையை ஊக்குவிக்க வேண்டும். தவிர, பனைகளிலிருந்து இறக்கப்படும் பதநீர் சீனி உற்பத்திக்கு ஏற்றது. இது குளிர்பானம், இனிப்புவகை என்பவற்றின் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படக் கூடியது.

இ) கைத்தொழிற் துறை

இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட இழப்புக்களினால் யப்பானின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஆனால் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் மக்களின் விடாமுயற்சியினாலும், நவீன கைத்தொழிற் திட்டங்களாலும் மிகவும் குறைந்தளவு மூல, கனிப்பொருள் வளங்களைக் கொண்டிருந்தபோதும் இன்று பொருளாதாரத்தில் ஜப்பான் முன்னணி வகிக்கின்றது.

தமிழ்ப்பகுதிகளில் காணப்படும் கண்ணாடி, களிமண், மொனோசைட் ZIRKONIUM SILICATE போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு தொழிற்துறைகள் ஆரம்பிக்கப்பட முடியும்.

மிகக் குறைந்த விலையில் பெறப்படும் வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு வாழைச்சேனை காகிதத்தொழிற்சாலையில் மேற்கொள்ளப்படும் காகித உற்பத்தி தமிழீழம் முழுவதற்கும் போதுமானது. இத்தொழிற்சாலை நன்கு விஸ்தரிக்கப்படின் காகிதம் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களும் உண்டு.

தமிழீழப் பகுதியில் ஏறக்குறைய 20,000 ஏக்கரில் உற்பத்தி செய்யப்படும் கரும்பை மூலப்பொருளாகக் கொண்டு அம்பாறை, கந்தளாயில் உள்ள சீனித் தொழிற்சாலைகளில் 30-40 ஆயிரம் தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. இத்தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்படின் சீனி உற்பத்தியை மேலும் பலமடங்கு பெருக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளன.

தமிழீழப் பிரதேசங்களான புல்மோட்டை, திருக்கோவில் பகுதிகளிலிருந்து பெறப்படும் இல்மனைற் ஏற்றுமதி செய்வது தவிர்க்கப்பட்டு, கப்பல், விமானங்கள், ஏவுகணைகள் என்பனவற்றின் தயாரிப்புக்குப் பயன்படும் டைட்டேனியம் என்னும் விலையுயர்ந்த உலோகத்தை இல்மனைற்றிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிற்றுறைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்

ஈ) விவசாயம்

விவசாயத்துறையை விஞ்ஞான ரீதியில் விருத்தி செய்யும்போது மனிதவளம் உள்ளிட்ட சகல வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்தும் வகையிலான திட்டமிடலே அவசியமாகின்றது. கூட்டுறவு ரீதியில் அமைந்த இத்திட்டங்கள் எமது மண்ணுக்குரிய தானிய வகைகளைப் பயிரிடல், களஞ்சியப்படுத்தக் கூடிய தானிய மற்றும் கிழங்கு வகைகளைப் பயிரிடல் கைத்தொழிற்றுறைக்கு வேண்டிய மூலப்பொருட்களைப் பெறக் கூடியஉற்பத்திகளைப் பெருக்குதல், என்பவற்றை நோக்க

மேலும் வடக்குக் கிழக்கின் விவசாய நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படின் அரிசி முதல் மற்றைய தானிய வகைகள் வரையான தேவைக்கு தமிழீழம் மற்றைய நாடுகளை நம்பியிருக்க வேண்டிய நிலைமை தோன்றாது.

இத்தகைய முழுமையான பயன்பாட்டிற்கு ஏற்றரீதியில் நீர்ப்பாசனத்துறை விருத்தி செய்யப்படலும் நவீன இரசாயன உரங்கள் பற்றிய அறிவு வளர்க்கப்படலும் அவசியமாகின்றது.

உ) மின்சக்தி எரிபொருள்

இன்று மேலைத்தேய நாடுகளில் சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி பெறப்படுகின்றது. வருடத்தில் 75%மான நாட்களில் சூரியசக்தியைப் பெறக் கூடிய எமது மண்ணில், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன மூலம் சூரிய சக்தியிலிருந்து மின்சக்தியைப் பெறும் முயற்சிகளை மேற்கொள்ளமுடியும்.

தமிழீழத்தின் சில பகுதிகளில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்ட காற்றாடிகள் நீர்ப்பாசனத்துறையில் தொடர்ந்து விஸ்தரிக்கப்படலாம்.

இன்று இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உயிரின, தாவரக் கழிவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு உருவாக்கப்படும் உயிரினவாயு பல நகரங்களில் விளக்குகள் எரிப்ப

வேண்டும். மேலும் உயிரின வாயு பிரித்தெடுக்கப்பட்ட கழிவுகள் மிகச்சிறந்த பசளையாகப் பயன்படுத்தலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊ) அந்நியச்செலவாணியும் மூலதனமும்

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உழைப்பால் கிடைக்கும் அந்நியச் செலாவணியானது இன்று ஸ்ரீலங்காவில் நலிந்து வரும் பொருளாதாரத்தைக் காக்கவே பயன்படுகிறது. காணியாகவும் நகையாகவும் முடங்கும் இந்த மூலதனங்களைக் கொண்டு புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் (ROOT) நீண்டகாலப் பொருளாதாரத் திட்டத்தின் சுருக்கமான சில அம்சங்களாகும். மேலும் இந்நிறுவனம் புதிய துறைகளில் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது. இதன் அடிப்படையில் ROOT தமிழீழ அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு ஒன்றைக் கடந்த மார்ச் மாதம் இலண்டனில் நடாத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தின் அரசியற் புறச்சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்துள்ள கல்விமான்கள், தொழில்நுட்பவியலாளர்கள், மருத்துவர்கள் மற்றும் பல் துறையாளர்கள் சுதந்திரத் தமிழீழத்தின் பொருளாதாரப் புனர்நிர்மாணத்தை வெற்றிகரமாகச் சாதிக்கவும், சுரண்டல் முறைகளற்ற ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்த ஒரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொ ட பொருளாதாரத்தை நெறிப்படுத்தவும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் சோசலிசப் பொருளாதாரத் திட்டமானது சுரண்டல் முறைகள் அற்ற, ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்த சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டது. இக்கோட்பாட்டைச் செயற்படுத்தும் வகையில் எமது பொருளுற்பத்தி வடிவங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கமான தமிழீழ ஆய்வு நிறுவனம் (Research Organisation of Tamil Eelam) தமிழீழத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. நெருக்கடிகாலப் பொருளாதாரத் திடடங்கள், நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்கள், ஆராய்ச்சிகள், ஆய்வுகள், மாநாடுகள் என Root இன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன.

இக் கட்டுரையானது சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்புகளையும், Root இன் செயற்பாடுகள். எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் சுருக்கமாக ஆய்வு செய்கின்றது.



கவிதை

## ஆக்கிரமிப்பின் தோல்வி

வெறியின் கதிர்களாய்
விரிந்து பரந்த
அடக்கு முறைகளைச்
சுமந்து கொண்டு
ராட்சதப் பட்டாளம்
இறக்குமதியாகி வந்தது
எங்கள் நிலத்திற்கு

மண்ணின் கௌரவமோ
ஆக்கிரமிப்பென்ற
அகோரச் சிறையில்.

ஆயுத முனைகள் பதித்த
தீச் சுவடுகளிலே
சமாதானத்தை வரைந்து
இரத்தத்தால் வர்ணம் பூசிய
எரியும் நிகழ்வுகளில்
வாழ்க்கை.

வந்ததன் அர்த்தத்தை
கொலையால்- கற்பழிப்பால்
கோடிட்டுக் காட்டினார்கள்:
இவர்கள்-
வெறியின் ரூபத்தை
வெளிச்சத்தில் காட்டியதால்
எங்களது-
இலட்சியம் சுமந்த முகங்கள்
இருளில் புதைந்தனவே.

பாவம் இவர்கள்,
எழுச்சிகளாய் எழுந்துநிற்கும்
நெருப்புப் பாறைகளான
எங்களை
தூசுகளாய் ஆக்கவந்து
இன்று
துரத்தப்பட்டவர்களாய்ப் போனார்கள்.

படையெடுப்புகளால்
செயலிழந்து போவதற்கு
நாங்கள் ஒன்றும்
காகிதச் சருகுகளல்ல
கனல் பொறிகள்.

நாங்கள்
கைகளில் போடப்பட்ட விலங்குகளை
கழுத்தில் இறுக்கப்பட்ட சுருக்குகளை
உடைத்தெறிந்ததும்
அறுத்தெறிந்ததும்
மக்கள் ஆதரவாலும்
மண்ணின் வீரத்தாலும்,

விழித்தலின் வடிவத்தை

மீன் இனங்கள் உள்ள பிராந்தியமாக தென்கிழக்காசியப் பிராந்தியம் விளங்குகின்றது. ஆனால் கைத்தொழில் நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன, விஞ்ஞான தொழில் நுட்பமுறைகளின் பற்றாக்குறைவால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வளம் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.

திருக்கோவில்-மட்டக்களப்பு-திருகோணமலை-முல்லைத்தீவு-யாழ்ப்பாணம்-மன்னார்-காரைதீவு வரையான சுமார் 600கி.மீட்டர் நீளமான கடற்பிராந்தியத்தைக் கொண்ட தமிழீழம் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கும், மீன்வளர்ப்புத்திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஏற்றதாகும்.

இக்கடற் பிராந்தியங்களுக்கு அண்மையில் பல ஆறுகளும் ஓடுவதால் பெரிய அளவிலான மீன் வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ள முடியுமெனவும், இதன் மூலம்

ஒடியலின் பாவனையை ஊக்குவிக்க வேண்டும். தவிர, பனைகளிலிருந்து இறக்கப்படும் பதநீர் சீனி உற்பத்திக்கு ஏற்றது. இது குளிர்பானம், இனிப்புவகை என்பவற்றின் தயாரிப்பிலும் பயன்படுத்தப்படக் கூடியது.

*இ) கைத்தொழிற் துறை*

இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட இழப்புக்களினால் யப்பானின் பொருளாதாரம் சீர்குலைந்தது. ஆனால் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் மக்களின் விடாமுயற்சியினாலும், நவீன கைத்தொழிற் திட்டங்களாலும் மிகவும் குறைந்தளவு மூல, கனிப்பொருள் வளங்களைக் கொண்டிருந்தபோதும் இன்று பொருளாதாரத்தில் ஜப்பான் முன்னணி வகிக்கின்றது.

தமிழ்ப்பகுதிகளில் காணப்படும் கண்ணாடி, களிமண், சுண்ணாம்புக்கல் மற்றும் இரசயானப் பொருட்களான

குப் பயன்படும் டைட்டேனியம் என்னும் விலையுயர்ந்த உலோகத்தை இல்மனைற்றிலிருந்து பிரித்தெடுக்கும் தொழிற்றுறைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்

*ஈ) விவசாயம்*

விவசாயத்துறையை விஞ்ஞான ரீதியில் விருத்தி செய்யும்போது மனிதவளம் உள்ளிட்ட சகல வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்தும் வகையிலான திட்டமிடலே அவசியமாகின்றது. கூட்டுறவு ரீதியில் அமைந்த இத்திட்டங்கள் எமது மண்ணுக்குரிய தானிய வகைகளைப் பயிரிடல், களஞ்சியப்படுத்தக் கூடிய தானிய மற்றும் கிழங்கு வகைகளைப் பயிரிடல் கைத்தொழிற்றுறைக்கு வேண்டிய மூலப்பொருட்களைப் பெறக் கூடியஉற்பத்திகளைப் பெருக்குதல், என்பவற்றை நோக்கமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

ஒழிந்த சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டது. இக்கோட்பாட்டைச் செயற்படுத்தும் வகையில் எமது பொருளுற்பத்தி வடிவங்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அங்கமான தமிழீழ ஆய்வு நிறுவனம் (Research Organisation of Tamil Eelam) தமிழீழத்தின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது. நெருக்கடிகாலப் பொருளாதாரத் திடடங்கள், நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்கள், ஆராய்ச்சிகள், ஆய்வுகள், மாநாடுகள் என Root இன் செயற்பாடுகள் விரிவடைந்து வருகின்றன.

இக் கட்டுரையானது சிங்கள அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்புகளையும், Root இன் செயற்பாடுகள். எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் சுருக்கமாக ஆய்வு செய்கின்றது.

விஸ்தரிக்கப்படலாம்.

இன்று இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உயிரின, தாவரக் கழிவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு உருவாக்கப்படும் உயிரினவாயு பல நகரங்களில் விளக்குகள் எரிப்பதற்கான சக்தியைக் கொடுக்கின்றது. இம்முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட

வெற்றிகரமாகச் சாதிக்கவும், சுரண்டல் முறைகளற்ற ஏற்றத்தாழ்வுகள் ஒழிந்த ஒரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொ ட பொருளாதாரத்தை நெறிப்படுத்தவும் தமது ஆற்றல்களையும் அறிவையும் பிரயோகிக்க முன்வரவேண்டும்: □

எங்களை
தூசுகளாய் ஆக்கவந்து
இன்று
துரத்தப்பட்டவர்களாய்ப் போனார்கள்.

படையெடுப்புகளால்
செயலிழந்து போவதற்கு
நாங்கள் ஒன்றும்
காகிதச் சருகுகளல்ல
கனல் பொறிகள்.

நாங்கள்
கைகளில் போடப்பட்ட விலங்குகளை
கழுத்தில் இறுக்கப்பட்ட சுருக்குகளை
உடைத்தெறிந்ததும்
அறுத்தெறிந்ததும்
மக்கள் ஆதரவாலும்
மண்ணின் வீரத்தாலும்,

விழித்தலின் வடிவத்தை
துயின்றதாய்க் கனவு கண்டு
தோல்வி கொண்டதும்,
விடுதலையின் உதயத்தில்
ஆக்கிரமிப்பைப் பரவிவைத்து

அஸ்தமனமாக்கத் துடித்ததும்,
எங்கள்-
புரட்சிக்கு ஈடுதராமல்
புறமுதுகு காட்டியதும்
ஏமாறியதன் ரகஸியத்தை
ஏற்றுக் கொள்ளாதோ?

இனிவரும் உதயங்கள் யாவும்
எமது குரல்களை
அங்கீகரித்தே
அடியெடுத்து வைக்கும். □

**எம். எல். எம். அன்ஸார்**

# உளவியல் கட்டுரை

□ சென்ற வாரத் தொடர்ச்சி

## தனியாள் வேறுபாட்டுக் காரணிகளும் அதனை ஓர் ஆசிரியர் அறிந்துகொள்வதன் அவசியமும்

அடுத்து சமூக வளர்ச்சியிற் செல்வாக்குப் பெறும் இம் மூன்று காரணிகளையும் நோக்கின், தனியாள் சமூகப் பொருத்தப் பாடடைவேத சமூக மயமாக்கல் எனப்படும் சமூக மயமாக்கலால் ஒருவன் தன் முனைப்பு நிலையிலிருந்து விடுபட்டு சமூக நோக்குடையவனாக மாறுகின்றான். ஒரு வகுப்பறையை நோக்கும் போது அங்கு ஒரு பிள்ளை கல கலப்பாகவும் இன்னொரு பிள்ளை அமைதியாகவும், ஒருபிள்ளைகருமமே கண்ணாகவும், இன்னொரு பிள்ளை அதற்கு மாறாகவும் இவ்வாறு பல ரகமுடையவர்களாக இருப்பதைக் காணலாம். சமூக அடிப்படையில் காணப்படும் இவ்வேறுபாடுகளை சமூக வளர்ச்சியில் காணப்படும் தனியாள் வேறுபாடுகளாகக்கொள்ளமுடியும். ஒரு சமூக வளர்ச்சியில் அவனது பரம்பரை சூழல் என்ற இரண்டும் செல்வாக்குப் பெறுகின்றன. அதேபோல் உளவியல் உடலியல் ரீதியாக மனிதர்களிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளும் சமூக வளர்ச்சியில் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. அழகுள்ளவர்கள், அங்கவீனர்கள், நோயாளிகள், ஆரோக்கிய மானவர்கள், செல்வந்தர், வறுமையானவர்கள் எல்லோருக்கும் சமூகத்தின் மதிப்பு ஒரேவகையானதல்ல. எனவே அவர்களது மனவெழுச்சி வளர்ச்சியின் போக்குகளும் மாறுபாடடையும். அதேபோல் மனிதன் வளருகின்ற சமூகச்சூழல் அவனது வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கின்றது. எல்லாக் குடும்பங்களிலும் ஒரே விதமாக சமூகச் சூழலோ ஒரே விதமான குழந்தை வளர்ப்பு முறையோ இருப்பதில்லை. இதற்கமைய ஒவ்வொரு குடும்பத்தினாலும் சமூக மயமாக்கப்படும் பிள்ளையின் வளர்ச்சியமைப்பில் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. வகுப்பறையில் சில பிள்ளைகள் தன்னம்பிக்கையற்று எதற்கும் முன் செல்லாது தளர்வுடன் முன் நிற்பவராகவும் சிலர் இதற்கு முற்றிலும் மாறுபாடுள்ளவராகவும் இருப்பர் பிள்ளைகள் பின் வாங்குவதற்குத் தேவையற்ற பாதுகாப்பு, தேவையற்ற அன்பு சுத்தம் என்பவற்றைத் தீவிரமாகப் பின்பற்றுவதே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இன்னும் சிலர் முரட்டுத்தனத்தையும்வன்செயலில் ஈடுபாட்டை காட்டுவதையும் அவதானிக்கலாம். இறுக்கமான சட்டதிட்டங்களுக்கு உட்படுகின்ற பிள்ளைகளே இவ்வாறு நடப்பதாகச் சமூகவியலாளர் கருதுகின்றனர். மிகவும் கட்டுப்பாடான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழுகின்ற அவஸ்காக் கோத்திரத்தைச் சேர்ந்த பிள்ளைகள் போட்டி ஆக்கிரமிப்புத் தன்மையுள்ளவர்களாகவும் ஜனநாயக சூழ்நிலையில் வாழும் நிவ்கினி கோத்திரப் பிள்ளைகள் அன்பு சமாதானம் போன்ற குணநலன்களுடன் விளங்குவதற்கும் அவர்கள் வாழும் சூழலின் தாக்கமே காரணமாகும் என மார்கரட்மீட் மேற்கொண்ட ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே சமூக வளர்ச்சியில் தனியாள் வேறுபாடுகள் ஏற்படுவதில் ஒவ்வொரு வரும் வாழுகின்ற சமூகச் சூழல் பெருஞ் செல்வாக்குச் செலுத்துவதை அறியலாம். இவ்வாறு பல்வேறு காரணிகள் தனியாள் வேறுபாட்டினை ஏற்படுத்தக் காலாக அமைகின்றது.

இத் தனியாள் வேறுபாடுகள் பற்றிய அறிவு ஓர் ஆசிரியருக்கு மிகவும் அவசியமாக அமைகின்றது. பல்வேறு திறன்கள், விருப்புக்கள், நடத்தைகள், கோலங்கள் என்பவற்றுடன் கூடிய உயிருள்ள ஒரு குழுவினருடன் செயற்பட வேண்டியவரே ஒரு ஆசிரியர். எனவே இவரது பணி சிக்கலான ஒன்றாகும். இலங்கையிலும், ஏனைய வளர்முக நாடுகளிலும் இன்னும் வகுப்பறைக் கற்பித்தல் முறையே காணப்படுகின்றது. சமவயதுள்ளவர்களை ஒரே வகுப்பில் வைத்துச் செயற்படுத்தும் இம்முறையைப் பல்வேறு காரணங்களால் கல்வித் துறையிலிருந்து நீக்கவியலாதிருப்பதனை ஆசிரியர்கள் அறிவர். ஒரு வகுப்பில் வயதடிப்படையில் சமத்துவம் நிலவினாலும் நுண்ணறிவு, திறமை, விருப்பு,நோக்கு என்பவற்றில் வேறுபாடு இருப்பதனை அறியலாம். இவர்கள் அனைவருக்கும் போதிய அளவு வெற்றிகரமான கல்வி அனுபவத்தை அளிக்கவேண்டுமானால் அவர்களிடையே நிலவுகின்ற வேறுபாடுகளைப் பற்றி அறிந்திருத்தல் ஒரு ஆசிரியருக்கு எல்லா வகையிலும் பயனுள்ளதாக அமையும்.

இன்று நடைமுறையிலுள்ள வகுப்பறைக் கற்பித்தல் முறையின் கீழ் ஒவ்வொரு மாணவன் மீதும் ஆசிரியர் தனிப்பட்ட கவனம் செலுத்த இயலாதிருப்பதினால் திறமையற்ற மாணவர் உற்சாகமிழக்க வேண்டி ஏற்படுவதுடன் திறமை மிக்கவர்களுக்குக் கூட கல்வியில் வெறுப்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு. ஆகையால் ஓர் ஆசிரியர் எல்லாச் சந்தர்ப்பத்திலும் பிள்ளைகளிடம் காணப்படும் வேறுபாடு தொடர்பாக இயன்றளவு கவனம் செலுத்திக் கற்பித்தல் அனுபவத்தை அளிக்க வேண்டியுள்ளது இதற்குப் பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகள் பற்றிய அறிவு ஆசிரியர்க்கு அவசியம்.

வகுப்பறைக் கற்பித்தல் முறையிலே திறமையானவர்களுக்கு வெற்றியும், திறமையறறவர்களுக்குத் தோல்வியும் கிடைத்தல் பரவலாக இடம் பெறும் சம்பவமாகும். ஆகையால் திறமையற்றவர்களிடையே புறக்கணிப்பு ஏற்படுமேயன்றி உற்சாகம் ஏற்பட மாட்டாது. தனியாள் வேறுபாடுகளைப் பற்றிய அறிவுள்ள ஓர் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் வெற்றி பெற்று திருப்தி அடையும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் தமது வகுப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.அதனால் திறமையற்ற மாணவரும் உற்சாகத்துடன் கற்பர்.

புலக்குறைபாடுள்ள பிள்ளைகள் அக்குறைபாட்டின் மூலம் பாதிப்பேற்படாதிருக்க பிள்ளைகளை இனங் கண்டு முன் வரிசையில் அமர்வித்தல் உரத்துப் பேசுதல், கட்புல, செவிப்புல கருவிகளைத் தெளிவாக்கல் என்பன மூலம் சிறந்த அனுபவத்தை பெற்றுக் கொடுக்கலாம். இப்பிள்ளைகள் அதிருப்திக்குட்படாது சுமுகமாக கருமமாற்ற தனியாள் வேறுபாடுகள் பற்றிய அறிவு ஓர் ஆசிரியர்க்கு அவசியமாகும்.

இன்று வகுப்பறையில் போட்டி, பரிசளிப்பு,புகழுதல் போன்ற ஊக்கல் முறைகளைப் பயன் படுத்துவதனால் திறமையான மாணவர்கள் மட்டுமே திருப்தி உற்சாகம் அடைகின்றனர். ஆகவே திறமையற்ற பிள்ளைகளுக்கும் ஒருவகை வெற்றியைப் பெற்றுக் கொடுக்கவும் ஊக்கமளிக்கும் ஊடகங்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

**செல்வி அமுதாஇராமநாதர் (B A Hons)**
கல்விப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்-

## வள்ளுவ வாக்கியம்

அன்பு!

அளவிட முடியாத வகையில் அன்பு வியாபிக்கிறது. அதுஉள்ளங்களில்வாழ்கிறது. உலகில் இன்பமாய் உலவுகிறது.

பிறந்த பொழுதிலிருந்து மடியும்வரை ஒவ்வொரு உயிரும் அன்பின் சுகத்தை அனுபவிக்கிறது. அல்லது அதனை நாடித் தவிக்கிறது. பேசாத வார்த்தையில் அன்பு பொதிந்திருக்கும். மறவாத நினைவிலும் அன்பு வாழ்ந்திருக்கும். அன்பு சொல்லால் விளம்ப முடியாத நிறைவுக்கு உரியது. வாடிய மனத்திற்குப் பெருநிழல் போலவும் வரண்ட பூமிக்கு புது மழை போலவும் அமைவது அன்புதான். ஈகையின் உயர்வும் காதலின் சிறப்பும் தாயின் பரிவும் அன்பினால் ஆனவை. கொடை தயை என்னும் அறவடிவங்கள் யாவும் அன்பின் சாயலே.

எனினும் மறந்திடாதே, அறம் மாத்திரமின்றி மறம் என்ற வீரமும் அன்பினால் உதிப்பாதே! அது தன்னை ஈந்து செயற்படுகிறது; துணிந்து உலகைக் காக்கிறது. வெற்றிக்கு வழி காண்கிறது!

(குறள் 76)



# சிறைப்பட்ட சிந்தனைகள்

.20 - 10 - 89

இன்று எனது நண்பர் சுந்தரின் படத்தை அவரது சகோதரி விசிற்றில் கொண்டு வந்து காட்டி இவர் உயிருடன் இருக்கிறாரா? என்று கேட்டார். எனக்கு நிச்சயமாகத் தெரியும் இவர் உயிருடன் இல்லையென்று. ஆனாலும் இதை எப்படி நேரடியாகச் சொல்வது? நான் அறிந்த வரை இந்த முகாமில்இல்லை. இனி வேறு எங்காவது தான் முயற்சி செய்யுங்கள் என்றேன். வேறெப்படிச் சொல்வது? இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான இவன் கல்வியங்காட்டில் உள்ள தனது நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றபோது குறிப்பிட்ட அந்த நண்பரை எதிர்பார்த்துக் காத்திருந்த இந்திய இராணுவத்தினர்இவனைப்பிடித்து அடித்து சித்திரவதை செய்ததில் இவனது உயிர் பிரிந்துவிட்டது. 1987ஆம் ஆண்டிலேயே இச்சம்பவம் நடந்தது. இரண்டு வருடங்களுக்குமேலாகியும் இவனைப் படுகொலை செய்ததை ஒப்புக் கொள்ளாத இந்திய இராணுவம் 'பலாலியில் பார், K. K. S.இல் பார் என்று தேடவிட்டிருக்கிறது.

இரண்டு பிள்ளைகளும் தாயும் இந்த இரண்டு வருடமும் படாதபாடுபடுகின்றனர். என்றைக்கோ ஒரு நாள் ஆள் திரும்பி வருவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே ஒரு குழந்தையைத் தூக்கி வைத்தபடி இவன் இருக்கும் போட்டோ ஒன்றை இந்திய இராணுவத்தினர் என்னிடம் காட்டி இவரைத் தெரியுமா? என்று கேட்டனர். நான் இல்லையென்று கூறிவிட்டேன். தெரியும் என்று சொன்னால் எப்படித் தெரியும்? எங்கே இவர் அறிமுகமானார்? என்றெல்லாம் கேள்வி கேட்டு என்னைச் சிக்கலுக்குள்ளாக்கி விடுவார். நாங்கள் சொல்வதில் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் வந்தால் சித்திரவதையும் அனுபவிக்க நேரிடும். இதை விட தெரியாது என்று சொல்வது பல விதத்திலும் மேல். ஏனெனில் என்னைப் பற்றிய விசாரணைகளில் சுந்தர் என்பவனின் பெயர் எந்தவிதத்திலும் சம்பந்தப்படவில்லை. இப்போது இவரைத் தெரியும் என்றால் வேறு யார்யாரைத் தெரியும் என்று கேள்வி கேட்டுத் துளைத்து எடுத்து விடுவார்கள். நான் சொல்வதால் ஏதாவது நன்மை இருந்தாலும் பரவாயில்லை. எனவே மனதைக் கல்லாக வைத்துக் கொண்டு தெரியாது என்று சொல்லி விடுவேன். இது வரை சுந்தரைப்போல்பலரது போட்டோக்களுக்கும் தெரியாது என்றே பதில் சொல்லியுள்ளேன்.

'ஆளைத் தனியாக வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டோம்' என்று அச்சகோதரி கூறினார். அப்போது இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகள் எவ்வளவு தூரம் மக்களுக்குப் பரிச்சயப்பட்டு விட்டது என்று நினைத்துக் கொண்டேன். அத்துடன் எங்காவது ஒரு நம்பிக்கைக் கீற்று தென்படாதா? என்ற அவர்களின் தவிப்பையும் உணர முடிந்தது. விசாரணைகள் செய்யும்போது விசாரிக்கப்பட வேண்டியவர் இவ்வாறு தனிமையாக அடைத்து வைக்கப் படுவதுண்டுதான். ஏனெனில் ஏற்கனவே பிடிபட்டு அனுபவம் உள்ளவர்கள் சில மார்க்கங்களைத் தெரியப்படுத்தி விடுவார்கள் என்பதால் இவ்வாறு செய்வதுண்டுதான். ஆனால் இப்போது வெளியில் பிடிபட்டு வருபவர்கள் அங்கேயே சக்கையாகப் பிழிபட்டு கையைக் காலை இழுத்துக் கொண்டு நேரே ஆஸ்பத்திரிக்குத் தான் போக வேண்டியவர்களாகவருவதால் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட வேண்டியவர்களுக்காக வைத்திருக்கும் 'இருட்டு அறை'யை தமது உத்தரவுக்குக் கீழ்ப்பணிய மறுக்கும், கைதிகளை அடைத்து வைப்பதற்காக உபயோகிக்கிறார்கள். பெரும்பாலும்இருட்டு அறைக்கு அனுப்பப்படுவர்களுக்கு மூன்று நாட்களுக்கு உணவு கொடுக்கக் கூடாது என உத்தரவு இருக்கும்.

இவ்வாறு அடைத்து வைத்திருக்கப்படும் கைதிகளுக்கு எப்படியாவது உணவு வகைகளைக் கொடுக்க நமது பையன்கள் முயற்சி செய்வதுண்டு. பிடிபட்டால் கிடைக்கும் நரக வேதனையான தண்டனைகளை அனுபவிப்பதும் உண்டு. ஆனாலும் புதிதாக இருட்டு அறைக்கு ஒருவர் வந்துவிட்டால் அவரது நலன்களைப் பார்ப்பதற்கென்றே ஒரு குழு இயங்கும். கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதனும் இந்த இருட்டறையைத் தரிசித்தவர்களில் ஒருவர். இருட்டு அறைக்கு வாஞ்சிநாதன் சென்றதால் 'வெஞ் சிறையில் போட்டாலும்' என்றெல்லாம்கவிதைகளுடன் வெளி வந்தார், அந்த வகையில் தமிழுக்கு லாபம்.

எந்த இடத்திலும் சுந்தர் இல்லையென்பது தெளிவாகிவிட்டது. விசிற் முடிந்து வெளியே வந்தேன். தூரத்தில் இன்னொரு தாய் ஒரு போட்டோவைக் காட்டி ஆமியுடன் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். பாவம் இந்தத் தாயும் இத்துடன் எத்தனையாவது தடவை தனது மகனைப் பார்க்க அலைகின்றாளோ? பாவம், மீள முடியாத இடத்துக்குச் சென்ற இவனது மகனைப் பற்றிப் பொய் சொல்ல இன்னொரு ஆமியும் அந்த இடத்துக்குச் சென்றதைக் கண்டேன். □

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உலகக்கிண்ண...

தமது அணிக்குப் பாதகமானதுஎன்கிறார். மாரடோனா நேப்பிள்ஸ்அணிக்காக வழமையாக ஆடும் Sao Paulo மைதானத்தில் ஆர்ஜென்ரீனா அணியின் போட்டிகள் நிகழவுள்ளமை மாரடோனாவுக்குள் சாதகமாகலாம், வெற்றி வாய்ப்புகள் பற்றிய கோ மாரடோனா கருத்துத் தெரிவிக்கையில் தமது அணி இடம் பெறும் B பிரிவு றுமேனியா, ரஷ்யா, கபரூன் என்னும் அணிகளைஉள்ளடக்கி இருப்பதால் தாங்கள் கடுமையாக முயற்சிக்க வேண்டியிருக்கும் என்கிறார்.

அதே நேரம் சுவீடன் கோஸ்ராறிக்கா, ஸ்கொட், லாந்து என்பவற்றை உள்ளடக்கிய பிரேஸில் பிரிவு அதற்குச் சாதகமானது என்கிறார் மாரடோனா. தமதுபிரிவினையைக் காட்டிலும் பெல்ஜியம், உருகுவே, ஸ்பெயின், தென்கொரியா ஆகியவற்றைக் கொண்டு E பிரிவு மிகக் கூடிய போட்டிமிக்கதென்பதை மாரடோனாஒப்புக் கொள்கிறார்.

1982, 1986 ஆகிய கடந்த இரு உலகக்கிண்ண போட்டிகளின் இறுதியாட்டத்திற்கு பிரவேசித்தும் துரதிஷ்டவசமாக வெற்றி வாய்ப்பை நழுவவிட்ட மேற்கு ஜேர்மனி அணி இம்முறையும் ஏறக்குறைய சமபலம் பெற்ற வீரர்களைக் கொண்டு விளங்குகிறது. எனினும் அணி எவ்வளவு பலம் பெற்று இருப்பினும் தனி ஒரு 'நட்சத்திர வீரரின்' பங்களிப்பு இன்றி எந்த அணியும் இறுதி வெற்றியை அடைதல் கடினம். 1982 போட்டிகளில் ஒரு போலோ றோஸி (இத்தாலி) போன்று 1986 போட்டிகளில் ஒரு மாரடோனா (ஆஜென்ரீனா) போன்று ஒரு வீரரின் அற்புத ஆட்டத்திறன் உதைபந்தாட்டத்தில் அவசியமானதாகும். ஐக்கிய அரபுக் குடியரசு, யுகொஸ்லாவியா, கொலம்பியா ஆகிய நாடுகளுடன் தன் ஆரம்ப நிலை போட்டிகளில் மோதவுள்ள மேற்கு ஜெர்மனிக்கு Rodi Voeller, Jurgen Kinsmann ஆகிய வீரர்களின் கணிசமான பங்கு வெற்றிக்கு அவசியம்,

சென்ற தடவை (1986) கால் இறுதியாட்டத்தில் இறுதியில் சம்பியன்களான ஆஜென்ரீனா வீரர்களிடம் சர்ச்சைக்குரிய வகையில் தோல்வியுற்ற இங்கிலாந்து அணி இம்முறை நாற்பது வயதான உலகின் சிறந்த கோல் காப்பாளர் பீற்றர் ஷெல்ரனைக் கொண்டு விளங்குகின்றது. காரி லின்கர் (Gary Lineker) ஜோன் பானெஸ் (Jahn Barnes) போன்ற பிரபல்யமான ஆட்டக்காரர்களும் இங்கிலாந்து தன் 1966 இன் சரித்திரத்தை மீள நிலைநாட்ட கடுமையாக முயற்சிக்கவுள்ளனர்.

நமது ஆசியாக்கண்டத்தின் சாதனை உலகக்கிண்ண உதைபந்தாட்டங்களைப் பொறுத்த வரையில் புறக்கணிக்கத்தக்க வகையில் மிகச் சொற்ப அளவிலேயே காணப்படுகின்றது. வடகொரிய அணி 1966 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற உலககிண்ண ஆட்டங்களில் கால இறுதி நிலைவரை முன்னேறியது. இதுவே ஆசியா பெருமைப் படத்தக்க ஒரே சந்தர்ப்பமாகும்.

இத்தடவை உலகக் கிண்ணத்தை கைப்பற்றுவது யார் என்பது பற்றி ஏராளமான ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் சிறப்பானவையாக நாம் மேலே இனங்கண்ட எந்தவொரு அணியும் உலகக் கிண்ணத்தைச் சுவீகரிக்க வாய்ப்புக்களுள்ளன. இந்த இடத்தில் ஆஜென்ரீனா அணி பயிற்சியாளரான Carlos Bilardo இன் கருத்து மிகப் பொருத்தமானதாகும். அவர் கூறுகிறார் 'சிறப்பான உடல்நிலையும் சிறந்த நுட்பமான ஆட்ட அணுகுமுறையும் உடையோரே வெற்றி பெறுவர்.' ஜூலை 8ஆந்திகதி றோம் நகரின் ஒலிம்பிக் ஸ்ரேடியத்தில் ஒரு புதிய சரித்திரம் படைக்கப்படப் போவது உறுதி. ஆனால் அச்சரித்திரத்தின் நாயகர்கள் யார் என்பதை தற்போது கூற இயலாதிருப்பதே உதைபந்தாட்டத்தின் சிறப்பு. □



CHARLES SPENCER CHAPLIN

சிரிப்பு, பூமியில் வாழ் உயிரினங்களில் மனிதனுக்கு கிடைத்த அரும் சொத்து. வாழ்க்கையில் எத்துணை

புறப்பட்டதன் மூலம் திரையுலகை எட்டியவர் சப்ளின்.

கார்னோ நகைச்சுவை கழகத்தில் (Carno Comedy Com-

சப்ளினும் யோசனையுடன் வேடம் புனையும் அறைக்குச் சென்று உடைகளை அணிந்தார். சப்பாத்தை கால்களில் மாட்டினார். பைக்குள் கையை விட்டார். பை பெரிதாக இருந்தது. உணர்வு பெற்று தன் உடைகளைப் பார்த்தார். அவருக்கு சிரிப்பு வந்துவிட்டது. . ஆம் அவர் அணிந்திருந்தது பெரிய காற்சட்டை, சட்டை, சப்பாத்து. திடீரென சப்ளினிற்கு யோசனை வந்தது. 'என் உடையே எனக்குச் சிரிப்பாக இருந்தால் இதையே பார்க்கும் மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்? இதையே தன் முத்திரை உடையாக்கிக் கொண்டார். மக்களை சிரிப்பில் ஆழ்த்தி தன் வசம் கவர்ந்தும் கொண்டார்.

சப்ளின் தன் படங்களில் ஏற்கும் பாத்திரங்கள் உயர் அந்தஸ்துகளில் இருக்கும் வறிய நிலையிலும் விலகி ஒரு பணக்கார அந்தஸ்தையும் பெற்றார். முதலாம் உலக யுத்த காலத்தில் உலகில் திரையுலகில் முழுவளர்ச்சி கொண்டதாக அமெரிக்க ஹொலிவூட் திகழ்ந்தது. அவ்வுலக யுத்த காலத்தில் உலக நாடுகளெங்கும் போர் வீரர்கட்கான ஹொலிவூட் படங்கள் பறந்தன. அந்த வேளையில் உலகளாவிய மட்டில் சப்ளின் பிரபலமானார்அவ்வேளையில் சப்ளின் முழுமையான படங்களில் நடித்தார். அதாவது சப்ளின் கதாநாயகனாக நடித்த படங்கள். இந்தப் படங்கள் தான் பலரின் மன நலம் காக்கும் அபூர்வ மூலிகையாகவும் இன்று திகழ்கின்றன.

### சப்ளின் படங்கள்

### தஹிட் (The kid)

1920 வெளியான சப்ளின் என்ன ருசி என்ற அளவில் சப்பாத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சப்ளின் சப்பாத்து ஆணிகளை எலும்பாக நினைத்து வாயால் உறிஞ்சினார். நூல்களை நூடில்சாக நினைத்து முள்ளுக்கரண்டியால் கிளறி உண்டார். இது கோல்ட் ரஷ்ஸில் ஒரு காட்சி. இது 1925இல் எடுக்கப்பட்டது. இப்படம் வந்தகாலம் வரை ஊமைப் படங்களே திரையிடப்பட்டன. ஒலி எதுவுமற்ற வெறும் நடிப்பே திரையில் வந்தது.

1927இல் முதல் பேசும் படம் உருவானது. தஜெஸ் பாடகன்' என்ற படம் பேசும் படமாக வந்த முதல் படம். தொடர்ந்து பேசும் படங்கள் வந்தன. ஆனால் சப்ளின் படங்கள் பேசாது. ஆனால் நடிக்கும். பின்னணியில்நகைச் சுவை இழைந்தோடும். நடிப்பிற்கேற்ற இசை ஒலிக்கும்.

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## உளவியல் கட்டுரை

வாயிலாகத் திருப்தியுணர்வைப் பெற்றுக் கொடுக்கவும் முயற்சிப்பதற்கு தனியாள் வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு தேவையான பரிகாரம் அளிக்கின்ற திறமை ஆசிரியர்களுக்கு மிக அவசிய மாகும்.

□ நுளம்புக் கடி கடுமையா? ஓர் இரும்புச் சட்டியைச் சூடாக்கி அதனுள் கொஞ்சம் சூடத்தூளைத் தூவி விடுங்கள்.

(ஆஜென்ரீனா) போன்று ஒரு வீரரின் அற்புத ஆட்டத்திறன் உதைபந்தாட்டத்தில் அவசியமானதாகும். ஐக்கிய அரபுக் குடியரசு, யுகொஸ்லாவியா, கொலம்பியா ஆகிய நாடுகளுடன் தன் ஆரம்ப நிலை போட்டிகளில் மோதவுள்ள மேற்கு ஜெர்மனிக்கு Rodi Voeller, Jurgen Kinsmann ஆகிய வீரர்களின் கணிசமான பங்கு வெற்றிக்கு அவசியம்,

சென்ற தடவை (1986) கால் இறுதியாட்டத்தில் இறுதியில் சம்பியன்களான ஆஜென்ரீனா வீரர்களிடம் சர்ச்சைக்குரிய வகையில் தோல்வியுற்ற இங்கிலாந்து பதை தற்போது கூற இயலாதிருப்பதே உதைபந்தாட்டத்தின் சிறப்பு. □

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### உளவியல் கட்டுரை

வாயிலாகத் திருப்தியுணர்வைப் பெற்றுக் கொடுக்கவும் முயற்சிப்பதற்கு தனியாள் வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு தேவையான பரிகாரம் அளிக்கின்ற திறமை ஆசிரியர்களுக்கு மிக அவசியமாகும்.

□ நுளம்புக் கடி கடுமையா? ஓர் இரும்புச் சட்டியைச் சூடாக்கி அதனுள் கொஞ்சம் சூடத்தூளைத் தூவி விடுங்கள். நுளம்பு பறந்து விடும்.

# உலகினைச் சிரிப்பால் மயங்கவும், வியக்கவும் வைத்த மேதை சார்லி சப்ளின்




சிரிப்பு, பூமியில் வாழ் உயிரினங்களில் மனிதனுக்கு கிடைத்த அரும் சொத்து. வாழ்க்கையில் எத்துணை இடர்கள் வரினும் அத்துணை இடர்களிலும் அவனுக்குச் சற்று நேர இன்பமளிப்பது சிரிப்பு. இந்த அருங்கொடைச் சிரிப்பை வரவழைக்க மனிதன் பலவேறு வழிகளில் முயற்சிக்கின்றான். நகையுணர்வுடைய நூல்களைப் படிப்பதன் மூலமும், படங்களைப் பார்ப்பதன் வழியிலும் மனிதன் தன் கவலையை மறந்து சிரிக்கின்றான்.

திரைப்படங்களில் நகைச்சுவை என்றதும் நம் கண்ணிற்குள் ஓராயிரம் நகைச்சுவை நடிகர்கள் தெரியலாம். அங்கு அந்த நகைச்சுவை கலைஞர்களில் மன்னனாக ஒருவர் திகழ்வதைக் காணலாம். நகைச்சுவை நடிகர்களுக்கு சிலைவைத்துள்ளது என்றால் அது இருவருக்குப் பொருந்தும். ஒருவர் தமிழ்த் திரையில் என். எஸ். கிருஷ்ணன், மற்றவர் ஆங்கிலத் திரையில் சார்ளி சப்ளின்.

வார்த்தை ஜாலம் எதுவும் செய்யாமல் தன் கால்களினால், கைகளினால், முகத்தினால் கோமாளித்தனங்களை வரவழைத்து மக்களைக் கவர்வதில் வெற்றி கண்டவர் சார்ளி சப்ளின். தொழ தொழத்த சட்டை, ஒரு கறுப்புத் தொப்பி, முகத்திலே கிட்லர் மாதிரியான மீசை. கையிலோர் ஊன்றுகோல். இவைதான் சப்ளினின் முத்திரைகள்

இந்த வேடத்தில் வேகமாக நடப்பார். திடீரென குத்துக்கரணமாக விழுவார். சைக்கிளில் ஏறுவார். எங்கேயாவது கால்வாய்களில் சைக்கிளை விடுவார். இப்படி நகைச்சுவையை நடிப்பில் காண்பித்தவர் சப்ளின்.

1899 ஆம் ஆண்டு ஏப்ரல் 16இல் லண்டனில் பிறந்தவர். 'சார்ள்ஸ் ஸ்பென்சர் சப்ளின்' என்ற சார்ளி சப்ளின் சிறு வயதிலே மிக கஷ்டப்பட்டவர். தாயார் நாடகங்களில் நடித்துப் பெறும் பணத்தில் தான் வாழ்க்கை. தற்செயலாக ஒரு நாடகத்தில் பாடப் புறப்பட்டதன் மூலம் திரையுலகை எட்டியவர் சப்ளின்.

கார்னோ நகைச்சுவை கழகத்தில் (Carno Comedy Company) சப்ளினின் கலை வாழ்க்கை ஆரம்பமானது. அமெரிக்காவில் சூறாவளியாக இந்த நாடக நிறுவனம் சுற்றியது. நிறுவன நாடகங்களில் சப்ளினின் திறமையைக் கண்டு ஹொலிவூட்டின் 'கீஸ்ரோன்' திரை நிறுவனத்தின் திரைப் படங்களுக்காக அவரை ஒப்பந்தம் செய்தார் இயக்குனர் 'மக்சென்னற்'; படங்களில் நடிப்பதற்கு அவருக்குக் கிழமைக்கு 150 டொலர்கள் சம்பளம்.

1914இல் மக்சென்னற்றின் முப்பத்தைந்து படங்களில் சப்ளின் நடித்தார். இம்முப்பத்தைந்து படங்களிலும் சப்ளின் நடித்த காட்சிகளை தயாரித்து இயக்கியது சப்ளின் தான்.

சப்ளினின் தோற்ற முத்திரைகளுள் பிரதானமானது அவரது உடைகள். ஒரு மாமிச மலை போட வேண்டிய உடையை சப்ளின் போட்டிருப்பார். இந்தத் தோற்றமே மக்களுக்குச் சிரிப்பை ஊட்டிவிடும். இதற்குள் நடிக்க ஆரம்பித்தால் சிரிப்பிற்குப் பஞ்சம் ஏதும் உண்டோ?

இந்த தொழதொழ உடையை சப்ளின் தெரிந்தெடுத்தது ஒரு தற்செயல் தான். அப்போது சப்ளின் திரையுலகில் பிரபலமான நேரம். பல நிறுவனங்கள் அவரை நடிக்க ஒப்பந்தம் செய்த நேரம். அன்று ஒரு அரங்கில் மூன்று நிறுவனப் படங்களில் நடிக்கிறார். மூன்று படங்களிலும் நகைச்சுவைக் காட்சிகளை இயக்குவது சப்ளின் தான். ஒரு கதிரையில் உட்கார்ந்து சுருட்டைப் பற்றிக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்தார். அந்தநேரம் இவரை திரையுலகிற்கு அறிமுகப்படுத்திய 'மக்சென்னற்' சப்ளினிடம் 'ஒரு நகைச்சுவைக் காட்சி எடுக்க வேண்டும். வேடத்தைப் போட்டுக் கொண்டு வாருங்கள்' என்றார்.

சப்ளினும் யோசனையுடன் வேடம் புனையும் அறைக்குச் சென்று உடைகளை அணிந்தார். சப்பாத்தை கால்களில் மாட்டினார். பைக்குள் கையை விட்டார். பை பெரிதாக இருந்தது. உணர்வு பெற்று தன் உடைகளைப் பார்த்தார். அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது. ஆம் அவர் அணிந்திருந்தது பெரிய காற்சட்டை, சட்டை, சப்பாத்து. திடீரென சப்ளினிற்கு யோசனை வந்தது. 'என் உடையே எனக்குச் சிரிப்பாக இருந்தால் இதையே பார்க்கும் மற்றவர்களுக்கு எப்படி இருக்கும்? இதையே தன் முத்திரை உடையாக்கிக் கொண்டார். மக்களை சிரிப்பில் ஆழ்த்தி தன் வசம் கவர்ந்துகொண்டார்.

சப்ளின் தன் படங்களில் ஏற்கும் பாத்திரங்கள் உயர் அந்தஸ்துகளில் இருக்கும் ஒருபணக்காரனாக, கவிஞராக, அரசியல்வாதியாக... இப்படி ஓர் உயர் அந்தஸ்தைத்தான் சப்ளின் தேர்ந்தெடுத்து நடிப்பார். பாத்திரங்கள் உயர் அந்தஸ்தில் இருந்தபோதும் அவை செய்யும் காரியங்கள் சின்னத்தனமாக இருக்கும். இந்தச் சின்னத்தனமான செய்கைகளை மக்களிடம் சப்ளின் பாராட்டுப் பெற்று நிலைக்க வைத்தது.

அக்காலத்தில் திரைப்படங்களில் நகைச்சுவைக் காட்சிகள் இரண்டு அல்லது மூன்று நிமிடத்திற்கு நிலைக்காது. ஆனால் சப்ளின் நடித்த காட்சிகள் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் நிலைத்தன. இதற்கு சப்ளினின் திறமையை காரணம் என உலகின் திரை வல்லுனர்கள் உணர்ந்தனர்.

'கிஸ்ரோன்'' நிறுவனத்தில் சப்ளின் தன் திறமை முழுவதையும் காட்ட முடியவில்லை. காரணம் அந்நிறுவன படங்களில் பிரதான திரைப் படத்தில் மக்களுக்கு சோர்வளிக்கும் காட்சி வரும் போது மட்டும் சப்ளின் காட்சிகளை அவ்வப்போது சேர்ப்பார்கள். இதனால் சப்பிளினை மக்கள் முழுமையாக உணர முடியாது போனது.

ஆனால் கீஸ்ரோன் ஒப்பந்தம் முடிந்த பின்னர் இவர் சேர்ந்த எஸ்.என்.எ.என்ற நிறுவனத்தில் பூரண சுதந்திரத்துடன் சப்ளின் செயற்பட்டார். 15 நிமிடங்கள் முழுமையாக இவரது காட்சி தொடர்ந்து காண்பிக்கப்பட்டது. 1914 முதல் 1917 வரையில் சப்ளின் மக்களிடம் முழுமையாக ஈடுபட்டார். அத்துடன் தன் வறிய நிலையிலும் விலகி ஒரு பணக்கார அந்தஸ்தையும் பெற்றார். முதலாம் உலக யுத்த காலத்தில் உலகில் திரையுலகில் முழுவளர்ச்சி கொண்டதாக அமெரிக்க ஹொலிவூட் திகழ்ந்தது. அவ்வுலக யுத்த காலத்தில் உலக நாடுகளெங்கும் போர் வீரர்கட்கான ஹொலிவூட் படங்கள் பறந்தன. அந்த வேளையில் உலகளாவிய மட்டில் சப்ளின் பிரபலமானார் அவ்வேளையில் சப்ளின் முழுமையான படங்களில் நடித்தார். அதாவது சப்ளின் கதாநாயகனாக நடித்த படங்கள். இந்தப் படங்கள் பலரின் மன நலம் காக்கும் அபூர்வ மூலிகையாகவும் இன்று திகழ்கின்றன.

### சப்ளின் படங்கள்

### தஹிட் (The kid)

1920 வெளியான சப்ளின் நாயகனாக நடித்த நீண்ட திரைப்படம் ஒரு மணி நேரத் திரைப்படம்.

சப்ளின் ஜக்கி கூகன் என்ற அனாதைக் குழந்தையை எடுத்து வளர்க்கிறார். குழந்தையும் இவரிடம் அன்பு கொள்கிறது. திடீரென ஒரு நாள் குழந்தையின் தந்தை குழந்தையைப் பறித்துக் கொண்டு போகிறார். அந்த வேளை குழந்தையை தூக்கிச் செல்ல [சப்ளின் செய்யும் செயல்களே படத்தின் பிரதான காட்சி. குழந்தையை தூக்கிச் செல்ல அவர் செய்யும் செயல்கள் சிரிப்பை வரவழைப்பதாகவும், அதன் மேல் அவர் கொண்ட பாசம் அனுதாபத்தை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

உலகின் பெரியோர், சிறியோர் மனதில் இடம் பிடித்த படம் இது.

### த சேர்க்கஸ் (TheCircus)

இத்திரைப் படத்தில் சேர்க்ஸில் செய்யும் கோமாளித் தனங்களை ரசிக்கலாம்.

### கோல்ட் ரஷ் (The Gold rush)

ஒரு சுரங்கம். தங்கம்தோண்டும் சுரங்கம். தங்கத்தை சுரங்கத்தில் தேடுபவராக சப்ளின் நடிக்கிறார். சுரங்கத்தில் தங்கத்தை எடுப்பதற்காக அவர் புரியும் சாகசங்களே திரைப் படத்தில் உயிர் நாடி.

தங்கத்தைதேடும் ஆசையில் அந்த சப்ளின் சாப்பிட மேசையில் அமர்ந்தார். அங்கு ஒரு சப்பாத்து இருந்தது. தங்க நினைவில் இருந்த சப்ளின் சப்பாத்தை வாட்டிய கோழியாக நினைத்தார். விறுவிறுவென கடித்தார். ஆகா என்ன ருசி என்ற அளவில் சப்பாத்தை சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சப்ளின் சப்பாத்து ஆணிகளை எலும்பாக நினைத்து வாயால் உறிஞ்சினார். நூல்களை நூடில்சாக நினைத்து முள்ளுக்கரண்டியால் கிளறி உண்டார். இது கோல்ட் ரஷ்ஸில் ஒரு காட்சி. இது 1925இல் எடுக்கப்பட்டது. இப்படம் வந்தகாலம் வரை ஊமைப் படங்களே திரையிடப்பட்டன. ஒலி எதுவுமற்ற வெறும் நடிப்பே திரையில் வந்தது.

1927இல் முதல் பேசும் படம் உருவானது. தஜொஸ் பாடகன்' என்ற படம் பேசும் படமாக வந்த முதல் படம். தொடர்ந்து பேசும் படங்கள் வந்தன. ஆனால் சப்ளின் படங்கள் பேசாது. ஆனால் நடிக்கும். பின்னணியில்நகைச்சுவை இழைந்தோடும். நடிப்பிற்கேற்ற இசை ஒலிக்கும்.

பேசும் படம் வந்தபோதும் அவை பெற்ற செல்வாக்கை விட ஊமையான சப்ளின் படங்களே கூடுதலான செல்வாக்கைப் பெற்றன.

சப்ளினின் படங்களில் மிகச் சிறந்தது என பாராட்டப்பட்டது ஒஸ்கார் விருது பெற தகுதியானது என தரம் நிர்ணயிக்கப்பட்ட படம் 'சிற்றி லைற்ஸ்' (City Lights)

ஒருகண்பார்வையற்ற இளம் பெண் பூ விற்பவள். மிகவும் ஏழை. அவள் பூக்களை வெகுவாக விற்கவில்லை. அதனால் அவள் துன்பம் மிகையானது. இதனை சப்ளின் கண்டார். அவரும் ஓர் ஏழை. ஆனால் அந்த கண் பார்வையற்ற ஏழைக்கு உதவவிரும்பினார். பலரிடம் திருடி அவள் கைகளில் தினமும் நாணயங்களை வைத்து வந்தார்.

சி. தவபாலன்

ஒரு தடவை அவர் திருடிய போது பெருந் தொகைப் பணம் அவர் கைக்கு வந்தது. வந்த பணத்தைக் கொண்டு குருட்டுப் பெண்ணின் பார்வைக் குறையைப் போக்கினார். இத்துணைக்கும் அந்தப் பெண் தனக்கு இவ்வுதவிகளைச் செய்வது ஒரு பணக்காரர் என எண்ணி வந்தாள். அவள் கண்பார்வை பெறும் வேளை திருட்டுக் குற்றத்திற்காகச் சிறை சென்றுவிட்டார் சப்ளின்.

சில ஆண்டுகள் கழிந்தன. வீதியில் ஒருவன் (சப்ளின்) பைத்தியக்காரனாய் திரிவதை அச்சிறு பெண் காண்கிறாள். அவனையோ வீதிச் சிறுவர்கள் பைத்தியக்காரனென சித்திரவதை செய்கின்றனர். இது கண்டு இரக்கம் கொள்கிறாள் அப் பெண், தினம் தோறும் சப்ளின் கையில் ஒரு பூவையும் நாணயத்தையும் வைக்கிறாள், நாளாக நாளாக சப்ளின் கையில் படும் ஏதோ பழக்கமான கையை உணர்கிறாள். அவ்வேளை அவள் தனக்குள் உதவி செய்தது இந்த சப்ளின் என அறிகிறாள். உடனே '"you are that '''நீயா' என ஏளனமாகக் கேட்டுவிட்டு போகிறாள். காதல் என்பது காலத்திற்கேற்ப கோலமிடும் என்ற வகையில் இத்திரைப் படம் எடுக்கப்பட்டது.

சப்ளின் அப்பாவித்தனத்தைப் பார்க்கும் போதுகண்ணில் நீரை வரவழைக்கும் சோகம் தென்படும். இதற்காகஇதனை ஒரு சோகப்படம் என எடுக்கலாகாது. இதிலும் நகைச்சுவை இழையோடும் காட்சிகள் உண்டு. அதில்ஒன்று இது.

ஒரு விருந்து நடக்கின்றது. தெரியாத்தனமாக சப்ளின் விசில் ஒன்றை விழுங்கி விட்டார். அவரால் பேச முடியவில்லை. ஆனால் விக்கல் வந்தது. ஒவ்வொருமுறை விக்கும் போதும் விசில் சத்தம் கேட்கும்.

ஒருமுறை ஊதும்போதுஊர் நாய்கள் கூடிவிடும். மறு முறை ஊதுகையில் வாடகைக்காரர்கள் வந்துவிடுவர்.

அடுத்த முறை குதிரை வண்டிகள்... என மாளிகையைச் சுற்றி நிறையக் கூடி விடும்.

தகிறேற் டிக்ரெக்ற்றர் (The Great Dictator...)1940ல் எடுக்கப்பட்டது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் பாசிசவாதியான நாசிக் கட்சியின் தலைவன் கொடுங்கோலன் கிட்லரை, கிண்டல் செய்வதற்காக எடுக்கப்பட்ட படம்.

இதில் கிட்லராக நடிப்பவர் சப்ளின். கிட்லர் செய்யும் ஒவ்வொரு செயலையும் ஒரு கோமாளித்தனம் என நடித்துக் காட்டுகிறார் சப்ளின். மிக மிக நகைச்சுவை இழையோடும் படம் இது.

இப் படத்தில் சப்ளின் முழுமையாக கிட்லர் வேடத்தில் நடிக்க வில்லை. ஆரம்பத்தில் யூத இன சவரத் தொழிலாளியாக இருந்து ஒருவாறு கிட்லரின் அரணிற்குள்நுழைகிறார். அங்கு கிட்லர் இல்லாத சமயம் கிட்லராக மாறி நடிக்கிறார்.

இவைதவிர த மொடேர்ண் ரைம் (The modern Time) போன்ற படங்களும் வந்துள்ளன.

மனிதன் ஒருவனை இலகுவில் உணர்ச்சி வசப்படுத்தலாம், அழவைக்கலாம். ஆனால் சிரிக்க வைக்க முடியாது.

கவலையற்ற மனிதன் எவனுமில்லை. கவலை என்பது ஒரு நோய், அதனை மறக்கடித்துச் சிரிக்க வைப்பவன்ஒரு மருத்துவன் எனலாம்.

இவ் வகையில் சப்ளின்கூட ஒரு மருத்துவ மேதை எனலாம்.

உணர்ச்சி வசப்பட்டு சோகத்தைப் பிழிய நடிப்பது இலகுவானது. ஆனால் பிறரை சிரிக்க வைக்க வார்த்தைக் கோல மெதுவு மற்று நகைச்சுவையாக நடிப்பது மிகவும் கடினம். ஆனால் அதனை எல்லாம் கடந்து உண்மையில் நடித்த ஒருவர் சார்ளி சப்ளின்.

உலகில்எவ்வளவோ கலைப் படங்கள் வரலாம். ஆனால் சார்லிசப்ளினின் திரைப்படங்களுக்கு எக் கலைப்படங்களும் ஈடாகாது.

குறிப்பு:- சப்ளின் பிறப்பு, 16.ஏப்ரல் 1889, இறப்பு: 25 டிசம்பர் 1977. தனது சுயசரிதையை(Mybigorabhy)நூலாக எழுதினார். அவரது பேச்சுக்கள் நூல்களாகவந்தன. இவரதுபேச்சில்என்றும்சமத்துவம் இருக்கும். சமத்துவத்தை விரும்பியவர். அதனால் சமத்துவ நாடான சோவியத் ரஷ்யா மேல் பற்றுக் கொண்டவர். தனது சொந்த வாழ்க்கையில் இறக்கும் வரை துன்பத்தையே கண்டவர் சப்ளின்

# ஒரு பொறி + ஒரு வார்த்தை = ஒரு போர்!

ஒரு சிறு பொறி ஒரு பெரிய மாளிகையையே அழிக்கும் என்பார்கள்.

ஒரு பொலிஸ்காரரின் திமிர் பிடித்த அசமந்தத்தனம் ஒரு யுத்தத்தையே ஏற்படுத்திப் பல உயிர்களைப் பலி கொண்டுள்ளது.

சிங்கள வியாபாரியின் தாக்குதலைத் தாங்க முடியாத முஸ்லிம் வியாபாரி மட்டக்களப்புப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்ட போது அந்த முறைப்பாட்டை ஏற்க மறுத்த சிங்களப் பொலிஸ்காரர் முஸ்லிம் வியாபாரியை அங்கிருந்து கலைத்து விட்டார்.

தனக்கு நியாயம் கிடைக்கவில்லை என்ற மனக்குமுறலோடு வெளியேறிய அந்த முஸ்லிம் வியாபாரி விடுதலைப் புலிகளிடம் முறையிட்டார்.



## வார:சாரம்

நடந்தது என்னவென்பதை அறிவதற்காக சிங்கள வியாபாரியை விடுதலைப் புலிகள் தேடிச்செல்ல அவர் பொலிஸ் நிலையத்துக்குள் போய்ப் புகுந்து கொண்டார்.

பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற விடுதலைப் புலிகளை சமாளித்துவிட்டுப் பின்னர் அவர்களைத் தாக்குவதற்குப் பொலிசார் ஆயத்தப்படுத்தியிருககனறனா.

இதன் விளைவு பொலிஸ் நிலையத்தைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டனர். இதே சமயம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இதர பொலிஸ் நிலையங்களும் தாக்குதலுக்கு உஷாராகின. புலிகள் இந்த பொலிஸ் நிலையங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

களுவாஞ்சிக்குடியில் பொலிஸ் நிலையத்தினுள் முகாமிட்டிருந்த இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் போர் மூண்டது. இதே சமயம் கல்முனை வாடிவீட்டிலிருந்து இராணுவம் கடற்கரை வீதி வழியாகப் புறப்பட்டு நகருக்குள் பிரவேசிக்க எத்தனித்திருக்கிறது. இதனால் இங்கும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் மோதல் ஏற்பட்டிருக்கிறது.

கொழும்புக்குத் தகவல் கிடைத்ததும் இலங்கை விமானப்படையின் ஹெலிக்கொப்ரர்களும் குண்டுவீச்சு விமானங்களும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு கடற்படைப் படகுகளும் அனுப்பிவைக்கப்பட்டன.

ஹெலிக்கொப்ரர்கள்சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன; விமானங்கள் குண்டு வீசித் தாக்கின. கடலிலிருந்து கடற்படைப் படகுகள் குண்டுகளால் தாக்கின.

இதன் விளைவாகப் பொது மக்கள் பலர் உயிரிழந்தனர். மற்றும் பலர் காயமடைந்தனர். வீடுகள், கட்டிடங்கள் சேதமடைந்தன.

பொலிஸார் பலரும் இராணுவத்தினர் பெருமளவிலும் கொல்லப்பட்டனர். விடுதலைப் புலிகளின் தரப்பிலும் சிலர் மரணமடைந்தனர்.

கடந்த பதினோராம் திகதி இச்சம்பவம் ஆரம்பமானது. முன்னரே திட்டமிட்டபடி பன்னிரண்டாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்துக்குவந்த நீதி அமைச்சரும், வடக்கு கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப். ஹமீத் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார். போர் நிறுத்தத்துக்கு உடன்பாடு செய்துகொண்டார். பதின்மூன்றாம் திகதி நண்பகலுடன் போரை நிறுத்துவதற்கு இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் போர் நிறுத்தத்துக்குப் பதிலாக ஹெலிக்கொப்ரர், விமானம், கடற்படைப் படகுகளின் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் தீவிரமடைந்தன.

போர்நிறுத்தம் மீறப்பட்டது. தொடர்ந்து சண்டை நடந்துகொண்டிருக்கிறது. போர் மேலும் பல இடங்களுக்குப் பரவிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது வவுனியா. ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையங்களும் புலிகளின் வசமாகிவிட்டன.

எஸ்.எம்.ஜி

இனி மீண்டும் அகதிகள் பிரச்சினை ஏற்படும்.

இப்பொழுது போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப்பட்டுவிட்டன தொலைபேசித் தொடர்புகள் அரைகுறையாக இருந்தவையும் முற்றாக நின்று விட்டன.

மட்டக்களப்பில் மோதல் ஆரம்பமானதுமே பாதுகாப்பு அமைச்சு உடன் தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் நிலைமையைச் சமாளித்திருக்கலாம்.

ஆனால் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பாராளுமன்றத்தில் வார்த்தையை அதிகமாகக் கொட்டியது நிலைமையை மேலும் மோசமடையச் செய்திருக்கிறது.

எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருக்கும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை நோண்டிவிடுவதற்குத் தவறுவதில்லை. மட்டக்களப்புச் சம்பவம் பற்றி பாராளுமன்றத்தில் புதிய எதிர்க்கட்சித் தலைவர் அநுராபண்டாரநாயக்காபிரச்சினையைக் கிளப்பிவிட பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா றப்பர் பந்து போல் துள்ளியிருக்கிறார்.

வார்த்தையை அளந்து பேசத் தெரியாத ரஞ்சன் ''வரதராஜப் பெருமாளின் கதிதான் பிரபாகரனுக்கும் கிடைக்கும்'' என்று உளறியிருக்கிறார்.

வரதராஜப்பெருமாள் இந்திய இராணுவத்தின் பாதுகாப்பில் வந்து இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடன் முதல்அமைச்சர் பதவி வகித்து இந்திய உளவுப்பிரிவான 'றோ' வின் மூளையிலும் இந்திய வெளிவிவகார அமைச்சின் மூளையிலும் இயங்கி ''ஈழ சோஷலிஸ குடியரசு'' பிரகடனத்துக்கு ஒரு வருட அவகாசம் கொடுத்து இந்தியப் படையுடனேயே திரும்பிச் சென்றவர்.

இலங்கை மண்ணைப் பற்றியோ, ஈழ மண்ணைப் பற்றியோ, மக்களைப் பற்றியோ வரதராஜப்பெருமாளுக்குக் கவலையில்லை!

வரதராஜப்பெருமாள் முன்னரும் மண்ணைப்பற்றியோ, மக்களைப்பற்றியோ கவலைப்படாமல் தமிழ் நாட்டுக்குத் தப்பியோடியவர். மீண்டும் இந்தியப் படையுடன் இங்கு திரும்பி ''சுகபோகங்களை'' அனுபவித்து விட்டு அவரது சகபாடிகளும் அவரது ஆட்களும் மக்களைக் கொலை செய்தும் கொள்ளையடித்தும் அட்டகாசம் புரிந்த போதும் அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் இந்தியப் படையுடனேயே திரும்பிச் சென்றவர்.



இத்தகைய வரதராஜப்பெருமாளுடன் பிரபாகரனை ஒப்பிடலாமா? என்று ரஞ்சன் விஜேரத்தினா சிறிது கூடச் சிந்திக்காதது ஏனோ?

பங்களூருக்குக் கொண்டு சென்ற போதும் டில்லிக்குக் கொண்டு சென்ற போதும் இந்திய அரசு ஐம்பது லட்சம் ரூபாய் கொடுத்து மேலும் கோடி கோடியாகப் பணம் கொடுப்பதாக வாக்களித்த போதிலும் தன் கொள்கையிலிருந்து ஓர் அங்குலம் கூட விட்டுக் கொடுக்காத மன உறுதி படைத்த பிரபாகரனை வரதராஜப் பெருமாளுடன் ஒப்பிட்டால் யாருக்குத்தான் ஆத்திரமேற்படாது!

உலகின் நாலாவது பெரிய படையென்பது தெரிந்தும் அதன் படை பலத்தை நன்கு உணர்ந்திருந்தும் அதை எதிர்த்து நின்று போராடி வெற்றி கண்ட வீரன் பிரபாகரனுடன் இந்தியப் படையின் பாதுகாப்புடன் வந்து இந்தியப்படையின் பாதுகாப்புடனேயே சென்று தலைமறைவாகிவிட்ட வரதராஜப்பெருமாளுடன் ஒப்பிட்டு ரஞ்சன் விஜேரத்தினா பேசலாமா?

இந்திய அரசு போராளிகளின் ஆயுதங்களைப் பறித்த போது ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் குடிக்காமல் வைராக்கியத்துடன் சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்து அவரது உடல் நிலை மோசமடைந்துவருகிறதென்ற வைத்திய அறிக்கை டில்லிக்குச்சென்றது. பின்னர் ஆயுதங்களை திருப்பிக் கொடுக்கப்பட்டபின்னரே உண்ணாவிரதத்தைக் கைவிட்ட உறுதி மிக்க பிரபாகரனுடன் பெருமாளை ஒப்பிடலாமா?

மட்டக்களப்பு பொலிஸ்காரர் தட்டி விட்டசிறுபொறியும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் அளந்து பேசாத வார்த்தைகளும் ஒரு யுத்தத்தை உருவாக்கி வளர்த்து விட்டிருக்கிறது! ஜனாதிபதி பிரேமதாசாவின் சமாதான சுகவாழ்வு முயற்சி என்னவாமோ?


## பனை அபிவிருத்திச் சபை

### சந்தைப்படுத்தும் உதவியாளர்

### பதவி

கொழும்பு கற்பக விற்பனை நிலையத்தில் கடமையாற்றுவதற்கு சந்தைப்படுத்தும் உதவியாளருக்கான பதவி ஒன்று நிரப்பப்படவுள்ளது.

தேவைப்படும் தகைமைகள்:

க. பொ. த (உயர் தரம்) பரீட்சையில் 4 பாடங்கள் சித்தியுடன் சந்தைப்படுத்தும் உதவியாளர் அல்லது அதே போன்ற சேவையில் 5 வருட கால அனுபவம் உடையவராகவும், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய


## சுகாதார கருத்தரங்கு

(வ்சேடநிருபர்)

பளைப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியரின் முயற்சியால் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை சங்கத் தலைவர் திரு. ஏ.பி. ஜோர்ஜ் தலைமையில் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பதின்நான்கு கிளை முகாமையாளர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட மேற்படி கருத்தரங்கு இப்பிரதேசத்தில்

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நூல் அறிமுகவிழாவும் சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

''தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும் இலக்கண ஒப்புமை'' என்ற நூலின் அறிமுகவுரையை க. சொக்கலிங்கம் நடத்துவார். இவ்

## உலகக்கிண்ணப் போட்டியில் எதிர்பாராத முடிவுகள்

இத்தாலியில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் தொடர்ந்தும் எதிர்பாராத முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன.

மிகவும் பலம் வாய்ந்ததும் ஐரோப்பிய சாம்பியன்களுமான ஒல்லாந்துக்கும் எகிப்துக்கும் இடையிலான போட்டி தலா ஒரு கோலுடன் சரிசமமாக முடிவுற்றது.

இதே வேளை பிரிவு 'ஈ' ஆட்டமொன்றில் ஆசிய நாடான தென்கொரியாவை பெல்ஜியம் அணி 2 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. இன்றைய ஆட்டங்கள் : 'ஏ' பிரிவு - இத்தாலி - ஐ . அமெரிக்கா, 'பி' பிரிவு - கமரூன் - ரோமானியா 'டி' பிரிவு - யூக்கோஸ்லாவியா - கொலம்பியா.

## ரிக்கற்றுக்கள் இல்லை

## முஸ்லிம் கழகம் வெற்றியீட்டியது

(விசேடநிருபர்)

'' தூய ஒளி '' சுற்றுக் கிண்ணத்தை யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டிக்கொண்டது.

கடந்த 10. 6. 90 மாலை குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகத்தை 4-0 கோல்கள் போட்டு யாழ். முஸ்லிம் விளையாட்டுகழகம் சாம்பியனாகத் தெரிவானது.

மின்னொளியில் நடாத்தப்

பொலிசார் ஆயத்தப்படுத்தி வீதி வழியாகப் புறப்பட்டு ... நிறுத்துவதற்கு இருதரப் ... மோசமடையச் செய்திருக்கி ... தப்பியோடியவர். மீண்டும் ... விட்டுக் கொடுக்காத மன ... வாமோ?


## பனை அபிவிருத்திச் சபை

### சந்தைப்படுத்தும் உதவியாளர்

### பதவி

கொழும்பு கற்பக விற்பனை நிலையத்தில் கடமை யாற்றுவதற்கு சந்தைப்படுத்தும் உதவியாளருக்கான பதவி ஒன்று நிரப்பப்படவுள்ளது.

தேவைப்படும் தகைமைகள்:

க. பொ. த (உயர் தரம்) பரீட்சையில் 4 பாடங்கள் சித்தியுடன் சந்தைப்படுத்தும் உதவியாளர் அல்லது அதே போன்ற சேவையில் 5 வருட கால அனுபவம் உடையவராகவும், தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளும் பேசத் தெரிந்தவராகவும் 45 வயதிற் குட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும். கொழும்பில் வசிப்பிடத்தைக் கொண்ட விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளத் திட்டம்:-

25, 200 – 7 X 600 - 5 X 900 - 33, 000.

சபையினால் நிர்ணயிக்கப்படும் காசுப்பிணை செலுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் சகல கல்விச் சான்றிதழ், அனுபவம், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றுடன் 23-06-90 இல் பனை அபிவிருத்திச் சபையின் தேசிய வீடமைப்புச் செயலகத்தில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் 9 . 30 மணிக்கு (காலை) நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

-தலைவர்

பனை அபிவிருத்திச் சபை.

(B 1163)


## சுகாதார கருத்தரங்கு

(விசேடநிருபர்)

பளைப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். எல். சேவியரின் முயற்சியால் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கான சுகாதாரக் கருத்தரங்கு கடந்த 9ஆம் திகதி சனிக்கிழமை சங்கத் தலைவர் திரு. ஏ.பி. ஜோர்ஜ் தலைமையில் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பதின்நான்கு கிளை முகாமையாளர்களும் ஊழியர்களும் கலந்து கொண்ட மேற்படி கருத்தரங்கு இப்பிரதேசத்தில் நடைபெற்ற முதல்முயற்சியாகும்.

''உணவுப் பொருட்களும் கையாளும் முறைகளும்'' என்னும் தலைப்பில் யாழ் மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவா, ''தொற்று நோய்களும் தடுப்பு முறைகளும்'' என்னும்தலைப்பில் கிளிநொச்சி சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் இராஜேந்திரம், ''சூழல்சுகாதாரம்' என்னும் தலைப்பில் பளைப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் திரு ஆர். எல். சேவியர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து சகலருக்குமான கலந்துரையாடல் இடம் பெற்றது.

இறுதியில் அனைவருக்கும் திரு. ஆர். சேவியர் நன்றி தெரிவித்தார். (21)

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நூல் அறிமுகவிழாவும் சனிக்கிழமை பிற்பகல் 4. 00 மணிக்கு நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

''தமிழ் மொழியும் ஜப்பானிய மொழியும் இலக்கண ஒப்புமை'' என்ற நூலின் அறிமுகவுரையை க. சொக்கலிங்கம் நடத்துவார். இவ் விழாவிற்கு ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தலைமை தாங்குவார். ஆய்வுரையினை எஸ். சிவலிங்கராஜாவும் பதிலுரையினை இந் நூலின் ஆசிரியர்களில் ஒருவரான திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

## உலகக்கிண்ணப் போட்டியில் எதிர்பாராத முடிவுகள்

இத்தாலியில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகளில் தொடர்ந்தும் எதிர்பாராத முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன.

மிகவும் பலம் வாய்ந்ததும் ஐரோப்பிய சாம்பியன்களுமான ஒல்லாந்துக்கும் எகிப்துக்கும் இடையிலான போட்டி தலா ஒரு கோலுடன் சரிசமமாக முடிவுற்றது.

இதே வேளை பிரிவு 'ஈ' ஆட்டமொன்றில் ஆசிய நாடான தென்கொரியாவை பெல்ஜியம் அணி 2 - 0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்துள்ளது. இன்றைய ஆட்டங்கள் : 'ஏ' பிரிவு - இத்தாலி - ஐ . அமெரிக்கா, 'பி' பிரிவு - கமரூன் - ரோமானியா ,டி' பிரிவு - யூக்கோஸ்லாவியா - கொலம்பியா.

## ரிக்கற்றுக்கள் இல்லை

(கஞுவாஞ்சிக்குடி)

திருச்கோணமலை புகையிரத நிலையத்தில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக மட்டக்களப்பிற்கான புகையிரத பிரயாணச் சீட்டுக்கள் வழங்கப்படவில்லை.

கல்லோயாவில் புகையிரதச் சீட்டைப் பெறுவதற்கு திருக்கோணமலையில் இருந்து பெற்ற புகையிரத பயணச் சீட்டையும் சமர்ப்பிக்கவேண்டும். புகையிரதச் சீட்டைத் தவறவிடுவோர் கல்லோயாவில் புகையிரதச் சீட்டைப் பெறுவது சிரமமாகும். இதனால் அனுபவமற்ற பிரயாணிகள் பலத்த அசௌகரியங்களுக்கு ஆளாகவேண்டி ஏற்படுகின்றது. (45)

## முஸ்லிம் கழகம் வெற்றியீட்டியது

(விசேடநிருபர்)

'' தூய ஒளி'' சுற்றுக் கிண்ணத்தை யாழ். முஸ்லிம் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டிக்கொண்டது.

கடந்த 10. 6. 90 மாலை குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகத்தை 4-0 கோல்கள் போட்டு யாழ். முஸ்லிம் விளையாட்டுகழகம் சாம்பியனாகத் தெரிவானது.

மின்னொளியில் நடாத்தப்பட்டு வந்த கரப்பந்தாட்டப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி எ. கழகத்தை உடுவில் சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4 - 1 என்னும் அடிப்படையில் 15-13, 15-10, 14-16, 15-12 புள்ளிகள் பெற்று வெற்றிக்கிண்ணத்தைத்தட்டிக்கொண்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள்யாழ். தளபதி கிட்டுவின் தாயார் திருமதி சதாசிவம் இராஜலட்சுமி பரிசுகள் வழங்கினார். (21)


## மல்லாகத்தில் சகாய விலையில்...

சகல அரிவு வேலைகளும் குறித்த தவணையில் செய்து கொடுக்கின்றோம்.

சகல மரங்களும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளவும்

சகல மரங்களும் கொள்முதல் செய்யவும்

நாடுங்கள்...

சுதா மர அரிவு ஆலை

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

(B-978)



## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்குப்பிரதேச சபை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்தின் கீழ்க்காணும் வேலைகளுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 28.6.90 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாவும் விசேட ஆணையாளர், வலிகாமம் கிழக்குப்பிரதேச சபை, நீர்வேலி என விலாசமிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது இவ் அலுவலகததில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் போடலாம். கேள்வியைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை வேலையின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச்செலுத்தி கோப்பாய் உப அலுவலகத்தில் 25.6 90 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் பெயர்: | கேள்விப் பிணை: | கேள்விப் பத்திரக் கட்டணம்: |
|---|---|---|
| 1. கோப்பாய் வடக்கு சந்தை அமைத்தல் | 1000 ரூ. | 100 ரூ. |
| 2. கோப்பாய் வடக்கு மயான சுற்றுமதில் வேலை | 500 ரூ. | 75 ரூ. |

திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்

விசேட ஆணையாளர்

வலி. கிழக்குப் பிரதேச சபை
தலைமை அலுவலகம்,
நீர் வேலி

12. 06. 1990

B-1167


## ஈராண்டு கண்ணீர் அஞ்சலி!



செபமாலை ஜியபிறவுண்

மலர்வு: 13 - 1 - 71 உதிர்வு- 15 - 6 - 88

கணப் பொழுதும் உன் நினைவு
கடுகளவும் மறைவில்லை
கண்முன்னே நிற்கின்றாய்
கருத்தினிலே சிரிக்கின்றாய்
பாட்டில் அடக்கமுடியவில்லை
நீ வாழ்ந்த காலங்களை
உத்தமனார் அருளினிலே
உறங்கிடுவாய் நிம்மதியாய் !

61, பீச் றோட்,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

R/358

உன்பிரிவால் வாடும்
அன்புப் பெற்றோர்
சகோதரிகள்.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# வவுனியா நகரம் மீண்டும் வழமைக்குத் திரும்பியது!

(வவுனியா)

விடுதலைப் புலிகளினால் வவுனியா பொலிஸ் நிலையம் முற்றுகையிடப்பட்டு, அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதையடுத்து ஏற்பட்ட பரபரப்பும், அச்சநிலையும் மாறி வவுனியா நகரம் வழமைபோல் இயங்குவதை அவதானிக்க முடிகிறது.

முற்றுகையிடப்பட்ட தினமான கடந்த புதன்கிழமை மாலை, புலிகளின் அனுமதி பெற்று இலங்கை இராணுவத்தினர், வவுனியா, மன்னார் வீதியில் அமைந்துள்ள இலங்கை இராணுவத்தினரின் இன்னொரு முகாமுக்கு வந்து சென்றனர்.

மூன்று வாகனங்கள் சகிதம் இவர்கள் வரும்போது, வவுனியா கண்டிவீதி பன்சாலை அருகில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். கைக்குண்டொன்று வீசி மக்களைப் பீதியடைய வைத்தனர்.

விடுதலைப்புலிகள் மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் பற்றியும், கைக்குண்டு வீச்சுப் பற்றியும் இலங்கை இராணுவ முகாமுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தவறுதலாக நடந்துவிட்டதுஎனக் காரணம் சொல்லப்பட்டதாம்.

நேற்று வழமை போல வவுனியா நகரம் காட்சியளித்தது. விளை பொருட்களின் விற்பனையும், கொள்வனவும் இடம் பெற்றது. வாகன ஓட்டங்கள் வழமைபோல நடைபெற்றன. அலுவலகங்கள் யாவும் இயங்கின.

வவுனியா பொலிஸ் நிலையம் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## வவுனியாவில் உரத்தின் சில்லறை விலை அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் உரவிற்பனை செய்யப்படும் கடைகளில், சில்லறைக்கு உரம், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

யூரியா உரத்தின் விலை அந்தர் ஒன்று 395 ரூபாவாகும். ஆனால் இதே உரம், சில்லறைவிலைக்கு விற்பனை செய்யும் போது, ஒரு கிலோ கிராம் உரத்தின்விலை 8 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே கணக்கின் படி கூட்டிப் பார்க்கும் போது, ஒரு அந்தர் யூரியாவின் விலை 425 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதை அறிய முடிகிறது.

இது பற்றி உரவிற்பனைக் கடையொன்றில் கேட்ட போது. நாம் உரத்திற்கு வரி செலுத்தும் காரணத்தினாலேயே அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது என்று கூறப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குறைந்தளவிலான பயிர் செய்யும் விவசாயிகள் மேற்படி அதிகவிலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதனால் பெரிதும் பாதிப் படைந்துள்ளனர்.

அண்மையில் பொருட்களைக் கூடிய விலைக்கு விற்

கிளிநொச்சி

## பாடசாலைகளுக்கு மதிய உணவு முத்திரை

(கிளிநொச்சி)

பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகளை உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளும்படி கிளிநொச்சி, கண்டாவளை, பளை. பூனகரி உதவி அரசாங்க அதிபர் சகல பாடசாலைகளின் கொத்தணி அதிபர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் திரு. எஸ். அமிர்தலிங்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நாலு உதவி அரசாங்க அதிபர்களிடம் 32 ஆயிரம் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

...யிடம் 16 ஆயிரத்து 330 மதிய உணவு முத்திரைகளும், கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சதா தனபாலசிங்கத்திடம் 6 ஆயிரத்து 642 மதிய உணவு முத்திரைகளும் பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். கந்தசாமியிடம் 3 ஆயிரத்து 674 மதிய உணவு முத்திரைகளும், பூனகரி உதவி அரசாங்க அதிபர் பாலசுப்பிரமணியத்திடம் 5 ஆயிரத்து 343 மதிய உணவு முத்திரைகளும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை மாணவர் தொகைக்கேற்ப உணவு முத்திரைகளை பெற்றுக்கொள்

## சொக்கனின் தேநீர் விருந்து

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் மணிவிழா நாயகனான க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் வழங்கும் நன்றி பாராட்டல் தேநீர் விருந்து இடம் பெறும்.

## அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களை இழைத்து தமிழ்பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருந்த இந்தியப் படையினரை இந்த மண்ணைவிட்டு விரட்டியடிப்பதற்காக ஸ்ரீ லங்கா அரசு நிபந்தனையற்ற முறையில் எம்மை பேச்சு வார்த்தைக்கு அழைத்த வேளையில் நாம் எமது இலட்சியத்திற்கு எவ்வித ஊறும் நேராத வகையில் எதுவித விட்டுக் கொடுப்புக்களும் அற்ற நிலையில் ஸ்ரீ லங்கா அரசோடு யுத்த நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்த முடிவெடுத்தோம்.

பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் மக்கள் மீது பகைமை வெறுப்புணர்வுகளைக் கொண்டுள்ள சிங்கள இராணுவம் தமிழ் பகுதிகளில் இருப்பதில் பயனில்லை என்பதையும், அவர்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னலும் இடையூறும்தான் தொடரும் என்பதையும் ஸ்ரீ லங்கா அரசுக்கு தொடர்ந்து இடித்துரைத்து வந்தோம்.

இந்தியப் படையை எப்படியாயினும் வெளியேற்றியே ஆக வேண்டும் என்ற நெருக்கடியான நிலையில், அந்த நேரத்தில். தமிழீழப் பகுதிகளில் இருந்து சிங்களப் பொலீசாரை முற்றாகத் திருப்பி அழைப்பதற்கும் தமிழீழத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எண்ணிக்கையையும் முகாம்களையும் குறைப்பதற்கும் ஸ்ரீ லங்கா அரசு ஒப்புக் கொண்டதுடன் சில பகுதிகளிலிருந்து சிங்களப் பொலீசாரையும் திரும்பப் பெற்றுள்ளது.

### ஆயுதப்படை அதிகரிப்பு

ஆனால் இந்தியப்படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா அரசுதான் ஒப்புக் கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, தற்போது தமிழீழப் பகுதிகளில் ஆயுதப் படையின் எண்ணிக்கையை குறைப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரைக் கொண்டுவந்து குவிக்கும் நடவடிக்கையில் இறங்கி இருக்கின்றது.

பேச்சுவார்த்தையின் போது

...

பெருமாளுடன் எமது தலைவரை ஒப்பிட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் அதையும் பொருட்படுத்தாமல் அமைச்சர் ஹமீத்துடன் பேசி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கென முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால், சிங்கள அரசோ அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்குப்பதிலாக யுத்



## சட்டவிரோத நெற்பயிரை அழித்துவிடத் தீர்மானம்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்தின்கீழ் சிறுபோக நெற்செய்கையின் போது சட்ட விரோதமாக 300 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தில் செய்கை பண்ணப்பட்ட நெற்பயிர்களை அழித்து சட்ட ரீதியாக நெற்பயிர் செய்கை பண்ணப்பட்ட சுமார் 4500 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்குவதென இரணைமடு திட்டக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

மேற்படி திட்டக் குழுக் கூட்டம் இரணைமடு திட்ட முகாமையாளர் திரு. வி. கதிரவேலு தலைமையில் திட்ட குழு அலுவலகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டது.

இக் கூட்டத்தில் நீர்ப்பாசன திணைக்களம், காணி ஆணையாளர் திணைக்களம், இரணைமடுத் திட்ட உபகுழுக்கள், விவசாய திணைக்களம் கமநல சேவைத்திணைக்களம் ஆகியவற்றின் பிரதி நிதிகளும் விடுதலைப் புலிகளின் அரசு கூட்டுத்தாபன இணைப்பாளர் திரு. சிவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி நீரப்பாசன பொறியியலாளர் திரு. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது.

இரணைமடுக் குளத்திலுள்ள நீர் முழுவதையும் வழங்கினாலும் சட்ட விரோதமாகச் செய்யப்பட்ட பயிர்களுக்கும் சட்டப்படி செய்யப்பட்ட பயிர்களுக்கும் நீர் வழங்க முடியாது.

இன்னும் 2 மாதத்திற்கு காணக் கூடிய நீர்தான் குளத்திலிருக்கிறது சட்டப்படி விதைக்கப்பட்ட வயல்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் சட்ட விரோதமாகச் செய்கை பண்ணப்பட்ட வயல்களுக்கு நீர் விநியோகம் செய்வது தடுக்கப்பட வேண்டும். இரண்டுக்குமே நீர்வழங்கினால் இரண்டிலிருந்தும் பயன் பெற முடியாதுபோய் விடும் என்றும் கூறினார்.

...யிகள் அடாத்தாக விவசாயம் செய்துள்ளதாக எமக்குப் புகார்கள் கிடைத்துள்ளன. இயக்கத்தின் பெயரைப் பாவித்து எவரும் சட்ட விரோதச் செயல்களைச் செய்ய எமது இயக்கம் அனுமதிக்க மாட்டாது அப்படிச் செய்தவர்களின் பெயர்களை உடனடியாக மாவட்ட பொறுப்பாளருக்கோ அன்றி பிரதேச பொறுப்பாளருக்கோ அறிவியுங்கள்.

திட்ட உபகுழுக்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இணைந்து கவனமாகச் செயல்பட்டிருந்தால் ஆரம்பத்திலேயே அத்துமீறல் பயிர்ச் செய்கையை தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இது போன்று காலந் தாழ்த்திநடவடிக்கை எடுப்பதை நிறுத்தி சூட்டோடு சூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

சட்டப்படி விவசாயம் செய்தவர்களின் பயிரை எவ்வாறாயினும் காக்க வேண்டும்

இக் கூட்டத்தில் விவசாய திட்ட குழுக்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவது சகலரின் கடமையாகும் என்றார்.

அடாத்து வேளாண்மையை அழித்து, சட்டப்படி வேளாண்மை செய் பவர்களுக்கு நீர்

# மதிய உணவு முத்திரை

(கிளிநொச்சி)

பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகளை உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளும்படி கிளிநொச்சி, கண்டாவளை, பளை, பூனகரி உதவி அரசாங்க அதிபர் சகல பாடசாலைகளின் கொத்தணி அதிபர்களுக்கும் அறிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் திரு. எஸ். அமிர்தலிங்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நாலு உதவி அரசாங்க அதிபர்களிடம் 32 ஆயிரம் பாடசாலை மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் எஸ். வேலுப்பிள்ளையிடம் 16 ஆயிரத்து 330 மதிய உணவு முத்திரைகளும், கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சதா தனபாலசிங்கத்திடம் 6 ஆயிரத்து 642 மதிய உணவு முத்திரைகளும் பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். கந்தசாமியிடம் 3 ஆயிரத்து 674 மதிய உணவு முத்திரைகளும், பூனகரி உதவி அரசாங்க அதிபர் பாலசுப்பிரமணியத்திடம் 5 ஆயிரத்து 343 மதிய உணவு முத்திரைகளும் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை மாணவர் தொகைக்கேற்ப உணவு முத்திரைகளை பெற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகிறார்கள் (49)

# ஆர்ஜென்ரீனா வெற்றி

புதனன்று நடைபெற்ற 'பி' பிரிவு ஆட்டமொன்றில் ஆர்ஜன்ரீனா சோவியத் ரஷ்யாவை 2-0 என்ற கோல் வித்தியாசத்தில் தோற்கடித்து முக்கிய வெற்றியொன்றைப் பெற்றுள்ளது. சோவியத் ரஷ்யா தான் விளையாடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியுற்றுள்ளது.

இன்னொரு 'ஈ' பிரிவு ஆட்டமொன்றில் இரு தடவை உலக சம்பியன்களான உருகுவே, ஸ்பெயின் உடன் கோல்கள் ஏதுமற்ற டிரா மட்டுமே செய்துகொள்ள முடிந்திருக்கிறது.

இன்றைய ஆட்டங்கள்:
பிரிவு 'ஏ' ஆஸ்திரியா–செக்கோஸ்லவாக்கியா பிரிவு 'டி' - மே. ஜேர்மனி - ஐக்கிய அரபு எமிரேஸ்.

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி நாளை சனிக்கிழமை 16 ஆம் திகதி பி. ப. 2–15 அளவில் கல்லூரி வளாகத்தில் அமைந்திருக்கும் ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறும்.

கொழும்புத்துறை புனித பிறான்சிஸ் சேவியர் குருமட அதிபர் அதி. வண. கலாநிதி எஸ். ஜே. இம்மானுவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## ஆனையிறவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறியவருகிறது.

அதேவேளை ஆனையிறவு தடைமுகாமில் அதிகாலை கிளிநொச்சி நோக்கி சென்றவர்கள் பலத்த தாக்குதல்களுக்குள்ளாகினர் இவர்கள் கொண்டு சென்ற வாகனங்கள் பொருட்கள் அனைத்தும் பறிமுதலாக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஆனையிறவு இராணுத்தினரால் இவர்கள் அடித்து துரத்தப்பட்டனர் இவ்வாறு தாக்குதலுக்குள்ளானவர்களில் ஜோசப் ஜெபதாஸ் என்பவர் தனது இருபத்தொன்பதாயிரம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை பறிகொடுத்துள்ளார். (அ)

## ஹமீத் இன்று

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுக் காலை பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இன்று வரும் அமைச்சர் ஹமீத் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தை ஒரு முடிவிற்குக் கொண்டு வருவது பற்றி முக்கியமாகப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிய வருகின்றது.

இச் சந்திப்பின்போது புலிகள் தரப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா, செயலாளர் யோகரெட்ணம் யோகி, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியம் (பேபி) ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து பலமணி நேரம் நீடித்த துப்பாக்கி சமரில் சங்கிலி, சுதன், ஆகிய இரண்டு போராளிகளும் மரணத்தை தழுவிக்கொண்டனர். (அ)

கிராம் உரத்தின்விலை 8 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே கணக்கின் படி கூட்டிப் பார்க்கும் போது, ஒரு அந்தர் யூரியாவின் விலை 425 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதை அறிய முடிகிறது.

இது பற்றி உரவிற்பனைக் கடையொன்றில் கேட்ட போது. நாம் உரத்திற்கு வரி செலுத்தும் காரணத்தினாலேயே அதிக விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது என்று கூறப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குறைந்தளவிலான பயிர் செய்யும் விவசாயிகள் மேற்படி அதிகவிலைக்கு உரம் விற்பனை செய்யப்படுவதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

அண்மையில் பொருட்களைக் கூடிய விலைக்கு விற்பனை செய்வது பற்றி விடுதலைப் புலிகள் வருத்தம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் சில ஆடம்பரப் பொருட்களுக்கு மட்டுமே வரிவிதிக்கப்பட்டுள்ளது. இதையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சில கடைக்காரர்கள் ஏனைய பொருட்களையும் அதிக விலைக்கு விற்பனை செய்து மக்களைச் சுரண்டி வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## லொறி மோதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரியூசன் வகுப்பிற்குச் செல்வதற்காகச் சைக்கிலில் வந்த இம்மாணவியை எதிர்த்திசையில் வேகமாக வந்த லொறி மோதியதனாலேயே இவ்விபத்து ஏற்பட்டது. இவரின் இடுப்பிற்கு மேலால் லொறிச்சக்கரங்கள் ஏறியதால் உடல் நசுங்கிச் சிதைந்து காணப்பட்டது. லொறியை ஓட்டிவந்த சாரதி லொறியை நிறுத்தாமல் தப்பி ஓடிவிட்டார். இதுபற்றிவிடுதலைப் புலிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

விசாரணைக்காக உடல் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. (மு)

## அனுராதபுரம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரவு வவுனியா வரை வந்து நிறுத்தப்படவிருந்த ரயில் சேவை வவுனியா அரசாங்க அதிபர் எடுத்த நடவடிக்கையை அடுத்து காங்கேசன் துறை சென்றது என தெரிவிக்கப்பட்டது. (தி)

## ராணுவ

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

இக்குண்டு வீச்சால் காயமடைந்த பெருந்தொகை பொதுமக்கள் யாழ்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் எண்ணிக்கையையும் முகாம்களையும் குறைப்பதற்கும் ஸ்ரீ லங்கா அரசு ஒப்புக் கொண்டதுடன் சில பகுதிகளிலிருந்து சிங்களப் பொலீசாரையும் திரும்பப் பெற்றுள்ளது.

### ஆயுதப்படை அதிகரிப்பு

ஆனால் இந்தியப்படை இங்கிருந்து அகற்றப்பட்ட பின்னர் ஸ்ரீலங்கா அரசுதான் ஒப்புக் கொண்டபடி செயற்படாதது மட்டுமல்ல, தற்போது தமிழீழப் பகுதிகளில் ஆயுதப் படையின் எண்ணிக்கையை குறைப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் ஆயிரக்கணக்கான ஆயுதப் படையினரைக் கொண்டுவந்து குவிக்கும் நடவடிக்கையில் இறங்கி இருக்கின்றது.

பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொண்டபடி பாராளுமன்றத்தின் மூலம் (2/3 பெரும்பான்மை பலத்தின் மூலம்) எடுக்கவேண்டிய அரசியல் நடவடிக்கைகளை போதிய பெரும்பான்மையின்மையால் ஸ்ரீ லங்கா அரசு மேற்கொள்ள முடியாது தாமதப்படுத்துவதை ஓரளவு பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், தொலைபேசியின் மூலமோ கடிதத்தின் மூலமோ உத்தரவிட்டு செயற்படுத்தக் கூடிய தமிழ்ப்பகுதிகளிலிருந்து சிங்களப் பொலிசாரை திருப்பி அழைப்பது போன்ற நடவடிக்கைகளையும் ஸ்ரீலங்கா அரசு மந்தப்படுத்தி, சிங்களப் பொலிசாரை தமிழீழப் பகுதிகளில் தொடர்ந்து நிலை கொள்ள வைத்திருப்பதானது ஸ்ரீலங்கா அரசின் உள்ளக்கிடக்கையை நன்கு தெளிவுபடுத்துகிறது. கிழக்கு மாகாணத்தில் எமக்கும் சிங்களப் படைகளுக்கும் இடையில் கடந்த 3 நாட்களாக நடைபெற்றுவரும் இந்தப் போர் எம்மால் இடையே வலிந்து தொடக்கப்பட்டதொன்றல்ல கொடுத்த வாக்குறுதிகளை மீறி ஸ்ரீலங்கா ஆட்சியாளரால் தமிழீழத்தில் திணித்து வைக்கப்பட்டிருந்த சிங்களப் பொலிசாரின் தொடர்ச்சியான ஆத்திரமூட்டல்களினாலும், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு அவர்கள் இடையூறு விளைவித்ததினாலுமே ஏற்பட்டது.

### ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள்

கடந்த 12-6-90 அன்று, யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவது பற்றி எம்மோடு பேச்சுவார்த்தை நடத்த ஒருபுறமும் ஸ்ரீலங்கா நீதி அமைச்சர் ஹமீத்தை அனுப்பிய சிங்கள அரசு பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளையில் ஸ்ரீலங்கா பாராளுமன்றத்தில் இன்னொரு அமைச்சர் எமது இயக்கத்தை கிரிமினல்கள் என்று இழித்துரைத்தும், இனத் துரோகியான வரதராஜப் பெருமாளுடன் எமது தலைவரை ஒப்பிட்டும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட போதிலும் அதையும் பொருட்படுத்தாமல் அமைச்சர் ஹமீத்துடன் பேசி யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்கென முடிவு செய்து நேரமும் குறித்தோம்.

ஆனால், சிங்கள அரசோ அதன்பின் குறிப்பிட்ட நேரத்தில் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வதற்குப்பதிலாக யுத்தத்தைத் தொடர்வதற்கும் அதை விரிவுபடுத்துவதற்குமான நடவடிக்கைகளில் வேகமாக இறங்கியிருக்கிறது.

முப்படைகளையும் ஏவிவிட்டு ஆகாய, கடல், தரை மார்க்கமாக தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசு தீவிரப்படுத்தியிருக்கிறது. மக்கள் அடர்த்தியாக வாழும் பகுதிகளில் விமான செல் தாக்குதல்களினால் பொதுமக்களுக்குப் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. அம்பாறையில் பல இடங்களில் முகாம்களை விட்டு வெளியேறிய சிங்கள ஆயுதப்படையினர் தமிழ் முஸ்லிம் பெண்களை பாலியல் வன்முறைக் குள்ளாக்கியிருப்பதுடன், நூற்றுக்கும் அதிகமான மக்களை வெட்டிக் கொன்றுள்ளனர்.

மேலும் மூவாயிரத்துக்கும் அதிகமான ஆயுதப்படையினரை கொழும்பில் இருந்து ஸ்ரீலங்கா அரசு கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழீழ மக்கள்மீது பெரும் தாக்குதலை நடத்திவரும் ஸ்ரீலங்கா அரசின் ஆயுதப் படையினருக் கெதிராக கடந்த 4 நாட்களாக நடைபெற்ற யுத்தத்தில் எமது 45 வீரர்கள் களபலியாகியுள்ளனர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்கான வேள்வித் தீயில் தம்மை அவித்துக் கொண்ட அந்த 45 வீரர்களுக்கும் நாம் எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம் ஸ்ரீலங்கா ஆயுதப்படையின் அடக்கு முறைகளுக்கு எதிராக தொடர்ந்தும் எமது போராட்டத்தை நடத்துவதற்கு உறுதி பூண்டுள்ளோம்.

தமிழீழ மக்களுக்காக நாம் நடத்தி வரும் போரில் பார்வையாளராக இருந்து எம்மைப் பாராட்டுவதையோ விமர்சனம் செய்வதையோ விட்டு விட்டு தமிழீழ மக்கள் அனைவரும் பங்காளிகளாக மாறி களத்தில் நிற்கும் எம்முடன் இணைந்து செயற்படுமாறு வேண்டுகின்றோம்.

தென இரணைமடு திட்டக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டது.

மேற்படி திட்டக் குழுக் கூட்டம் இரணைமடு திட்ட முகாமையாளர் திரு. வி. கதிரவேலு தலைமையில் திட்ட குழு அலுவலகத்தில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறை

ரும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சி நீரப்பாசன பொறியியலாளர் திரு. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது.

இரணைமடுக் குளத்திலுள்ள நீர் முழுவதையும் வழங்கினாலும் சட்ட விரோதமாகச் செய்யப்பட்ட பயிர்களுக்கும் சட்டப்படி செய்யப்பட்ட பயிர்களுக்கும் நீர் வழங்க முடியாது.

இன்னும் 2 மாதத்திற்கு காணக் கூடிய நீர்தான் குளத்திலிருக்கிறது சட்டப்படி விதைக்கப்பட்ட வயல்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால் சட்ட விரோதமாகச் செய்கை பண்ணப்பட்ட வயல்களுக்கு நீர் விநியோகம் செய்வது தடுக்கப்பட வேண்டும். இரண்டுக்குமே நீர்வழங்கினால் இரண்டிலிருந்தும் பயன் பெற முடியாதுபோய் விடும் என்றும் கூறினார்.

விடுதலைப் புலிகளின் சார்பில் திரு. சிவா பேசுகையில் கூறியதாவது.

விடுதலைப் புலிகளின் பெயரைப் பாவித்து சில விவசா

பாளருக்கோ அன்றி பிரதேச பொறுப்பாளருக்கோ அறிவியுங்கள்.

திட்ட உபகுழுக்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இணைந்து கவனமாகச் செயல்பட்டிருந்தால் ஆரம்பத்திலேயே அத்துமீறல் பயிர்ச் செய்கையை தடுத்து நிறுத்தியிருக்க முடியும். இது போன்று காலந் தாழ்த்திநடவடிக்கை எடுப்பதை நிறுத்தி சூட்டோடு சூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்

சட்டப்படி விவசாயம் செய்தவர்களின் பயிரை எவ்வாறாயினும் காக்க வேண்டும்

இக் கூட்டத்தில் விவசாய திட்ட குழுக்களால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவது சகலரின் கடமையாகும் என்றார்.

அடாத்து வேளாண்மையை அழித்து, சட்டப்படி வேளாண்மை செய் பவர்களுக்கு நீர் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை ஊரியான் திட்ட உபகுழு முன்வைத்தது. இப்பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. (49)

# தமிழ்நாட்டு முதல்வர் கல்பகே சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவிலுள்ள இலங்கை தூதுவர் பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே வடக்கு கிழக்குப் பகுதியின் தற்போதைய நிலை பற்றி தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு அறிவித்துள்ளார்.

ஓ.எஸ்.பி. செய்தி தாபனத்திற்கு இலங்கையின் உயர்ஸ்தானிகர் தகவல் தருகையில் ''வடகிழக்கு தாக்குதல் சம்பந்தமான தற்போதய நிலை பற்றி திரு. கருணாநிதிக்கு தாம் அறிவித்தாகவும், தங்களது பேச்சுவாத்தைகள் சுமுகமான முறையில் நட்புறவு அடிப்படையில் இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள்பற்றி நேரடியான முறையில் அறிந்துகொள்ள முடிந்தது பற்றி தமிழ் நாடு முதலமைச்சர் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்ததாகவும் தமது பேச்சுவார்த்தைகள் 50 நிமிடங்கள் நீடித்ததாகவும் விரைவில் தமிழ் நாட்டிலுள்ள ஏனைய அரசியல் தலைவர்களைத்தாம் சந்திக்க விருப்பதாகவும் திரு. கல்பகே மேலும் தெவித்தார்.

## மன்னார்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஸார் புலிகளிடம் சரணடைந்துள்ளனர். இதில் மன்னார் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் ரி. டபிள்யூ. ராஜரெட்ணம் அடங்குகின்றார்.

## பிரச்சினைகளைப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காலை பேசினார்.

பொய் வதந்திகளையும் பொய்த் தகவல்களையும் நம்பி மக்கள் தவறான வழியில் செல்லக் கூடாதென்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார்.

## இராணுவ முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கியதாக அறியவருகிறது.

அத்துடன் வீடுகளில் இருந்த பொதுமக்களும் பலர் இறந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## பண்டதரிப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

1989-1990 காலப்பகுதியில் பண்டத்தரிப்புக் கோட்டக் கொத்தணி மட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படவுள்ள கல்வி அபிவிருத்தி தொடர்பான ஏற்பாடுகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

இதுவே, இவ்விடயம் தொடர்பாக யாழ் குடாநாட்டுக் கொத்தணி ஒன்றில் வெளிவந்த முதல் வெளியீடாகும்.

## சிற்றூர் அவை உறுப்பினர்களுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்பிரதேச சிற்றூர் அவை வட்டஅவை உறுப்பினர்கள் அனைவரும் இன்று காலை 9.00 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டஅவையில்(கில்னர்லேன்) ஒன்று கூடுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிக்கைமூலம் கோரியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.